உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 22 சனிக்கிழமை (07.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 254

# புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு விழுந்த பேரிடியே கே.பியின் கைது

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

வாஷிங்டன், ஒகஸ்ட் 07

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச இணைப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி. இலங்கை அரசால் கைதுசெய்யப்பட்டமை புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு விழுந்த பேரிடி என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2009 ஆண்டில் இடம்பெற்ற தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் நேற்று அமெரிக்க காங்கிரஸிடம் கையளித்தது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வசிக்கும் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து புலிகளின் சர்வதேச வலையமைப்பு நிதி சேகரித்து வரும் நடவடிக்கைகளைத் தொடர்வதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புலிகள் அமைப்புக்கு ஆதரவளித்த இலங்கையர்களிடமிருந்து இந்த நிதி சேகரிக்கப்படுவதாகவும், அதற்காக அவர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் சம்பந்திக்குப் பிணை

கொழும்பு, ஓக. 07

இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்ணவின் தாயாரான அசோகா திலகரட்ணவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதித்தது.

சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இவர், நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, ஒரு கோடி ரூபா சரீரப் பிணையிலும் 10 லட்சம் ரூபா ரொக்கப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## உண்மையைக் கண்டறியும் குழுவின் அமர்வுகள் புதனன்று ஆரம்பமாகின்றன

கொழும்பு, ஓக. 07

இலங்கை தொடர்பான ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் ஆலோசனைக் குழுவின் நடவடிக்கையை நிறுத்துவதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட உண்மையக் கண்டறியும் குழு எதிர்வரும் புதன்கிழமை தமது அமர்வுகளை ஆரம்பிக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழு 8 பேரைக்கொண்டது. ஏற்கனவே இந்தக்குழுவை, ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகள் மற்றும் சட்டவிரோத கொலைகளுக்கு எதிரான விசேட பிரதிநிதி, பிலிப் அல்ஸ்டன் நிராகரித்திருந்தார்.

உள்நாட்டில் இடம்பெற்றுள்ள யுத்தக் குற்றங்களை விசாரிக்கும் வரைபு இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள இந்தக்குழுவின் விசாரணையை ஏற்றுக்கொள்ளமுடியாது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதேபோல, மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆசிய பணிப்பாளர் பிரட் அடம்ஸ்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தக்க தருணத்தில் கே. பி. பற்றி நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

### அமைச்சர் நிமால் சிறிபால தகவல்

கொழும்பு, ஓக. 07

பொருத்தமான நேரத்தில் நாடாளுமன்றத்தில் கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் பற்றி அறிவிக்கப்படும். இந்த விடயம் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையது என்பதால் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பற்றிய தகவல்களை வெளியிட முடியாது.

- இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த வருடம் பாங்கொக் நகரில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கே.பி. எனப்படும் பத்மநாதன் பற்றிய தகவல்களை வெளியிடுமாறு கோரி ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

கடந்த வருடம் கைது செய்யப்பட்ட கே.பி. நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விடுவிக்கக்கோரி சட்டமா அதிபருடன் விரைவில் பேச்சு நடத்துவேன்

### மகசின் சிறையில் கைதிகளைச் சந்தித்தபின் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 07

விசாரணைகள் ஏதுமின்றி நீண்டகாலமாகப் பல்வேறு சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விடுவிப்பது குறித்து விரைவில் சட்டமா அதிபரைச் சந்தித்துப் பேச உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை நேற்று அவர் நேரில் சென்று பார்வையிட்டார். அதன் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைதிகளின் விடுதலைக்காக அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் பேசி நாடாளுமன்றில் பொது மன்னிப்புக்கான பிரேரணை ஒன்றை கொண்டுவர தாம் முயற்சிக்க உள்ளதாகவும் சரவணபவன் தெரிவித்தார்.

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை நேற்று முற்பகல் 11.15 மணியளவில் அவர் 'ஜே' பிரிவில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் கூறியவை வருமாறு:-

''குற்றவாளிகளாக அன்றி எங்களை அரசியல் கைதிகள் போன்று நடத்தவேண்டும். வன்னி தடுப்பு முகாம்களிலிருந்து கைதுசெய்யப்பட்டு வருவோர் குறுகிய காலத்துக்குள்ளேயே புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர். ஆனால், நாங்கள் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியில் இணைந்தார் மங்கள

கொழும்பு, ஓக. 07

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்றுக் காலை இந்நிகழ்வு இடம்பெற்றது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து மங்கள சமரவீர கட்சி உறுப்பினர் அட்டையைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் ஐ.தே.கட்சி எம்.பிக்கள் பலரும் கலந்துகொண்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவைச் சேர்ந்த மேலும் பலரும் ஐ.தே.கட்சியில் இணைந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வினுக்கு எதிராகச் சுவரொட்டி ஒட்டியவர்கள் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஓக. 07

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கையைக் கண்டித்து சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த தொழிற்சங்க உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்தச் செயலை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

சமுர்த்தி முகவரை மரத்தில் கட்டி வைத்துத் தண்டனை வழங்கிய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதேவேளை, தொழிற்சங்கங்கள் மேர்வின் சில்வாவின் இந்தக் கொடூர நடவடிக்கைகளைக் கண்டித்து சுவரொட்டிகளை ஒட்டவும் தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்திருந்தன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிடியாணை பிறப்பித்த நபரிடம் லஞ்சம் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஓக 07

நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த நபர் ஒருவரிடம் இருந்து லஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸ் கான்ஸ்டபிளும் அவரது உதவியாளரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நீதிமன்றம் ஒன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி ஒருவரிடம் லஞ்சம் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிளையும் அவருக்கு உதவியாகச் செயற்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பொதுமகன் ஒருவரையும் கொழும்பிலிருந்து வந்த விசேட பொலிஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

இருவரையும் விசாரணை செய்த குழுவினர் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் செய்தனர்.

இருவரையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஓ-ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு

# தொண்டைமானாறு-அச்சுவேலி வீதி போக்குவரத்துக்கு இன்று திறப்பு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு தொண்டை மானாறு-அச்சுவேலி வீதி மக்கள் போக்கு வரத்துக்காக இன்று முற் பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவுக்கு மக்கள் இயல்பாக வந்து வழிபட்டுச் செல்ல குறித்த வீதியைத் திறந்துவிடுமாறு சந்நிதிப் பகுதிக்கு அண்மை யில் விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அந்தப் பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

அதைத் தொடர்ந்து அமைச்சர் இரா ணுவத் தரப்பிடமும் சம்பந்தப்பட்ட உயர் அதி காரிகளிடமும் தொடர்புகொண்டு விளக்கி யிருந்தார்.

அமைச்சரின் முயற்சியையடுத்து அதி காரிகள் வீதியைத் திறப்பதற்கு அனுமதி வழங்கியதாக ஈ.பி.டி.பியின் வடமராட்சிப் பகுதி அமைப்பாளர் ஐ.சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இயல்புநிலை திரும்பியுள்ள சூழலில் இம்முறை சந்நிதிமுருகனைத் தரிசிக்க உள்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலி ருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பலவருட கால இடைவெளிக்குப் பின் னர் பக்தர்கள் சந்நிதியானை வழிபடச் சென் றுவருவதற்கான போக்குவரத்து நெருக் கடியை இலகுவாக்கும் முகமாகத் தொண்டை மானாறு-தம்பாளை-இடைக்காடு-அச்சு வேலி ஊடான பிரதான வீதி திறந்து விடப் படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-10-236)

எதிர்வரும் 17ஆம் திகதியின் பின்னர்

# செவ்வாய், வெள்ளி, சனி தினங்களில் வாக்காளர் விண்ணப்பங்கள் கையளிப்பு

எதிர்வரும் 17ஆம் திகதியின் பின்னர் செவ்வாய், வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் கிராமசேவகர்கள் வாக்காளர் விண்ணப்பங்களை யாழ்.மாவட்டத் தேர் தல் செயலகத்தில் கையளிக்கும் பணிகள் இடம்பெறும் என உதவித் தேர்தல் ஆணை யாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இம்மாதம் முதலாம் திகதியுடன் பதிவு கள் முடிவடைந்த தேர்தல் தொகுதிக ளைச் சேர்ந்த கிராம சேவகர்களின் விண ணப்பங்களை இம்மாதம் 17ஆம் திகதி முதல் யாழ்.மாவட்ட செயலகத்தினுள்ள தேர்தல் திணைக்களத்தில் கையேற்கப்படும்.

செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்க ளில் இரண்டு கிராம சேவகர்களும் சனிக் கிழமைகளில் ஒரு கிராம சேவகரும் என அழைக்கப்படுவார்கள். இது தொடர்பான சுற்றறிக்கை சகல பிரதேச செயலகங்க ளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக் கையில் குறிப்பிட்டுள்ள நேர ஒழுங்கின் பிரகாரம் கிராம சேவையாளர்கள் அழைக் கப்படுவார்கள். பிரதேச செயலாளர்கள் அனுப் பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை தொடர் பில் ஏதேனும் மாற்றம் இருந்தால் அது தொடர்பாக உரிய பதிலேதும் அளிக்கப்ப டாத பட்சத்தில் அச்சுற்றறிக்கையை ஏற்றுக் கொண்டதாகவே கருதப்பட்டு கிராம சேவையாளர்கள் அழைக்கப்படுவர் என்றார் உதவித் தேர்தல் ஆணையாளர். (த-319)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஓக 7

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2275ஆம் இலக்க நேற்றைய சீட்டி ழுப்பில் "P" என்ற ஆங்கில எழுத்தும் 0/3/0/1/9/6 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 0/3/0/1/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/0/1/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/1/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 137 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1370 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13625 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

6 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 135412 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 0/3/0/1/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட் டுக்களை வைத்திருக்கும் 16 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/3/0/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 128 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

0/3/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1372 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13600 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"P" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 54252 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)


சகல விதமான வேலைகளும் ஒரே இடத்தில்

ஆய்வுக் கட்டுரைகள், போட்டோக்கொப்பி, பிறிண்டிங் வேலைகள், சலக விதமான புத் தகம் கட்டும் வேலைகள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள், அழகு சாதனப் பொருள்கள், எழுது கருவிகள் ஒரே இடத்தில் பெற்றிட நாடுங்கள் (மேற்குறிப்பிட்ட வேலைக்கு ஆள் தேவை.)

ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர்.
அப்பியாசக் கொப்பிகள் விற்பனை நிலையம்.
பரமேஸ்வராச் சந்தி, கம்பன் வீதி, T.P:021 222 0231

வீடு, காணி விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 5அறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

ST Johns, Chundukuli Girls. பாடசாலைகளுக்கு அருகில்.

தொடர்புகளுக்கு T.P: 077 2900033
E.mail. smariyan@hotmail.com



VirtuvaliT
Art OF IT

- Soft Ware Development - மென்பொருள் வடிவமைப்பு
- Web Design and Development - இணையத்தள வடிவமைப்பு
- Graphics Designing - வரைகலை வடிவமைப்பு
- Net Working and Solutions - வலைப்பின்னல் வடிவமைப்பும் தீர்வுகளும்

மேலும் எமது சேவைகள்
அடிப்படை கற்கை நெறிகள்
. M.S Office
. Internet Technology
. Desk Top Publishing






. Computer Sales
. Computer Services
. Computer Maintanence, Repairing

3rd Mile
Manipay, Road
Annaikoddai
TP: 021-321-5856
Mob :0774694358

www.virtuvalit.com E-mail- info@virtuvalit.com



O/L, A/L, பட்டதாரிகளுக்கு
UK யில் உயர்கல்வியைத்
தொடர அல்லது இங்கிருந்தவாறே
UK உயர்கல்வியைத்தொடர
அரியவாய்ப்பு



Bringing Talent to Life...

Teesside University

City & Guilds UK Dec 2010 / June2011
EC U.K May 2011
APPROVED CENTRE

Walsall College
Wisemore Campus
OFFICIAL REPRESENTATIVE

Diploma / Advanced Diploma
Graduate Diploma (B.Eng)
புதியவகுப்புக்கள்

IELTS தேவையா?
இலவசக்கருத்தரங்கும் ஆலோசனைகளும்

MEET THE OFFICIAL REPRESENTATIVE AND VISA CONSULTANT

| | |
|---|---|
| இடம் | வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். |
| காலம் | 11th August 2010 |
| நேரம் | காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை |

APSS
5, Harmers Avenue, Colombo 6
Hotline: 077 241 8804, 077 230 6642
Email: apsseng@yahoo.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# எங்களுக்கு எல்லாமே ஒன்றுதான்!

மக்கள் ஆட்சி என்பது மக்களுக்கான அரசாங்கம். ஜனநாயகம் என்பதும் அதுவே. அதாவது மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் ஆட்சி. ஆனால் அது வளம் மாறி, இல்லைத் தலைகீழாகி, ஆட்சி என்பது அரசியல்வாதிகளின் சுயநலன்களை ஈட்டிக் கொள்வது என்றாகிவிட்டது. மிகக் குறிப்பாக ஆட்சித் தலைவர்கள் தமது தனிப்பட்ட மேம்பாட்டுக்காக மக்கள் மீது சவாரி விடுவதே ஜனநாயகம் என்ற கேவலமான நிலையும் வந்துவிட்டது. இலங்கை அந்த விடயத்தில் எல்லா நாடுகளையும் விட உயர உயரப் போய்க் கொண்டிருக்கிறது!

அரசமைப்புச் சட்டத்தில் மிக முக்கியமான திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்காக - அதாவது நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறும் நிறைவேற்றுப் பிரதமர் முறையைக் கொண்டு வருவதற்கு'- அரச தலைவர் விருப்பம் கொண்டிருக்கிறார் என்று நினைக்கும் அளவுக்கு, மஹிந்த - ரணில் பேச்சுவார்த்தை வெற்றி அளித்திருப்பதாக தகவல்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இப்போதுள்ள இரண்டு தடவைகளுக்கு மேல் அதிகரித்து, சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லும் உத்தேசத்தைக் கைவிட்டு, ஜனநாயகத்தை ஓரளவேனும் தக்க வைப்பதற்கு மஹிந்த-ரணில் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுவிட்டதாக செய்திகளில் பிரமாதப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் அந்த எதிர்பார்ப்பைப் பொய்யாக்கும் போக்கில், தமது அரசுக்கு மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையை ஈட்டிக் கொள்ளும் இலக்குடன், ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த இரண்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றிகரமாகத் தமது பக்கம் இழுத்துவிட்டார் அரசுத் தலைவர்.

அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு இன்னும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமது பக்கத்துக்கு அரசுத் தலைவர் இழுத்து விடுவார் எனின், அவர் சர்வாதிகாரப் பாணியில் நாட்டைத் தொடர்ந்து ஆட்சி செய்ய வழி பிறந்து விடும்.

இதனைத் தடுத்துவிடும் பலமும் வன்மையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கும் உண்டா? அவற்றால் இயலுமா? என்பது தான் இப்போதைய அரசியல் கேள்வியாகி இருக்கிறது.

மக்களிடம் வாக்குப் பிச்சை இரந்து, நாடாளுமன்றக் கதிரையைப் பிடித்த பின்னர் தமது சுயலாபங்களை முன்னிறுத்திச் செயற்படுவது தான் அரசியல் என்றாகிவிட்ட காலம் இது. வாக்காளர்கள் தம்மைத் தெரிவு செய்தாலும் அரசியல்வாதிகள், அரசியல் தலைவர்கள் என்றாகிவிட்ட பின்னர் மக்களின் நலன்களை மறந்து துரோகத்தனம் செய்வது இந்த நாட்டில் தண்டனைக்கு உரிய குற்றம் அல்ல. அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவல்கள் சாதாரணமாகிவிட்டன. அந்தக் கூட்டத்தில் சேர்ந்து கொண்ட பிரபா கணேசனும், திகாம்பரமும் தமிழர்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள் என்று யோகராஜன் எம்.பி கடிந்திருப்பதும் ஒரு வகையில் பொருத்தமானதே.

அரசுத் தரப்பும், எதிர்க்கட்சித் தரப்பும் தமது அண்மைய நாள் பேச்சுக்களின்போது தமிழர் பிரச்சினை குறித்து எதுவும் பேசவில்லை. அதனை ஒதுக்கிவைத்து விட்டு, அரசமைப்புத் திருத்தம், 17 ஆவது திருத்தச் சட்டத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது போன்றவற்றை மட்டுமே ஆராய்ந்திருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவர்களும் தமது அரசியல் சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலேயே முனைப்பாக இருப்பர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதனை தமது தேவைகளை நிறைவேற்றிய பின்னரே தமிழர்களுக்கு எதனைக் கிள்ளித் தெளிக்கலாம் என்று சிந்திக்கத் தொடங்குவர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசும் எதிர்த்தரப்பும் பானையும் சட்டியும் போன்றவையே. இது தமிழ் மக்களின் காலாதிகால அரசியல் அனுபவம்.

தெற்கின் அரசாங்கத் தலைமையும் எதிர்த் தரப்புத் தலைமையும் அரசமைப்பைத் திருத்தும் விவகாரத்தில் ஒன்று சேர்ந்தாலும் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக நன்மை எதுவும் உடனடியாகக் கிட்டும் என்று எதிர்பார்க்க முடியாதிருந்தது. ஆனால் பொறுத்திருந்து பார்ப்போம் என்ற நிலைமையும் இப்போது தமிழர்களுக்கு இல்லாமற் போய்விட்டது.

அவ்வளவுதான்...!

# 'வறுமை ஒழிப்பு நுண்பாகக் கடன்' திட்டத்தை குடாநாட்டிலும் அறிமுகம் செய்கிறது மத்திய வங்கி

## விவசாயத்துக்கும் சிறுகைத்தொழிலுக்கும் அதனைப் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஒக.7

தாழ்ந்த வருமானமுள்ள மக்களின் வருமானமட்டத்தை உயர்த்தும் முகமாக 'வறுமை ஒழிப்பு நுண்பாகக் கடன்' திட்டத்தை யாழ்.மாவட்டத்திலும் அறிமுகம் செய்கிறது இலங்கை மத்திய வங்கி.

இத்தகவலை இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வருமானமட்டம் மிகவும் தாழ்ந்த மட்டத்திலுள்ள மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் இலங் வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி, சம்பத்வங்கி, ஹற்றன் நஷ னல் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினூடாக மேற்படி கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கடனை 15 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த மாதவருமான முள்ளவர்கள் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

அதாவது இவர்கள் ஏதாவது சுயதொழிலில் ஈடுபடும் நோக்குடன் 5 பேர் கொண்ட குழுவாக இணைந்து தனித்தனியே தமது கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் கீழ் விவசாய நோக்குடனான கடனாக முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் கட்டமாக ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படுகின்றது.

அத்துடன் விவசாயம் அல்லாத சிறிய கைத்தொழில் மற்றும் ஏனைய தேவைகளுக்கு முதற் கட்டமாக ஒருலட்சம் ரூபாவும் இரண்டாம் கட்டமாக ஒன்றரை லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-16)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நாளை



யாழ்ப்பாணம்,ஒக.7

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திரு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், 8.30 மணிக்கு உற்சவபூசைகள், 9.30 மணிக்கு ஷண்முகப் பெருமானுக்கு விசேட பூசைகள், ஆராதனைகள் என்பன நடைபெற்று ஷண்முகப் பெருமான் தேரில் ஆரோகணித்து அருள் பாலிப்பார்.

முற்பகல் 11.10 மணிக்கு ரதபவனி ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிக்கு உச்சிக்காலப் பூசைகளைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (த-204)

# சாவல்கட்டு கடற்றொழிலாளரின் நலன் கருதி காக்கைதீவில் கடலுணவு கொள்வனவு நிலையம்

சண்டிலிப்பாய், ஒக.7

சாவல்கட்டு கடற்றொழிலாளர்களின் நலன் கருதிக் காக்கை தீவுக் கடற்கரையில் 'கடல் உணவு கொள்வனவு நிலையம்' திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவல்கட்டு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி நிலையத்தில் மீனவர்களிடமிருந்து நியாயமான விலையில் இறால், நண்டு, கணவாய் உட்படக் கடலுணவுகள் சங்கத்தினால் கொள் முதல் செய்யப்பட்டுத் தினசரி குளிரூட்டப்பட்ட வாகனம் மூலம் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்ட நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த நிலையத்தை அமைச்சரே திறந்து வைத்தார்.

கடற்றொழிலாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் கடலுணவைப் பழுதுபடாமல் பாதுகாத்து வைப்பதற்காகக் கடற்கரையில் குளிரூட்டி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து 300 ரூபாவிலிருந்து 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ இறால் 600 ரூபா வரை அதிகரித்துள்ளது. இதனால் சாவல் கட்டைச் சேர்ந்த சுமார் 300 மீனவர்கள் நன்மை அடைந்துள்ளார்கள்.

இதேவேளை-

மீனவர்கள் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்காக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளிக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் 300 தொழிலாளர்களுக்கும் வங்கிக் கடன் வழங்குவதற்கான ஒழுங்குகளையும் அமைச்சர் மேற்கொண்டுள்ளார். (த-115)

# இரணைமடு கனகாம்பிகை ஆலய திருப்பணி சபை நாளை தெரிவாகும்

இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் திருப்பணி வேலைகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் கூட்டப்படும் விசேட ஒன்று கூடலில் திருப்பணி சபை தெரிவு செய்யப்படவுள்ளது.

இதில் அம்பாள் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்கள், தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள், திருவிழா உபயகாரர்கள் மற்றும் குருமார் ஒன்றிய பிரதிநிதிகள், அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறங் காவலர்சபை அழைப்பு விடுத்துள்ளது.(ஒ)

# அனுமதி அட்டைகளைப் பெறாத மாணவர்களின் கவனத்துக்கு!

கிளிநொச்சி,ஒக.7

நலன்புரி நிலையங்களிலும் புனர்வாழ்வு முகாம்களில் இருந்து ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கிளிநொச்சி மாவட்ட மாணவர்களில் இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்களை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். (த-6-405)

# 2008 சாதாரண தரப் பரீட்சையில் கணிதப் பெறுபேறு கிடைக்காத மாணவர் கல்வி வலயங்களுடன் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணம்,ஒக.7

கடந்த 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட பெறுபேற்றில் ''தீர்மானிக்கப்படவில்லை'' எனக் குறிப்பிடப்பட்ட மாணவர்களை பின்வரும் விவரங்களுடன் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை அதிபரூடாக அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாகாண கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கணித பாடத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக மீள் பரீட்சை நடத்தியபோது தோற்ற முடியாமல் போன மாணவர்களுக்கு 2009 விசேட பரீட்சை நடத்தப்பட்டு அதன் பெறுபேறு கடந்த 22 ஆம் திகதி அந்தந்த வலயங்களுக்கு வழங்கப்பட்டது.

அவ்வாறு வழங்கப்பட்ட பெறுபேற்று அட்டவணையில் ''தீர்மானிக்கப்படவில்லை'' எனக் குறிப்பிடப்பட்ட மாணவர்களிடமிருந்தே விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

மாணவர்களின் பெயர், நிரந்தரப் பாடசாலை, தேசிய அடையாள அட்டை பரீட்சை சுட்டெண், தற்காலிக பாடசாலை, முதல் தடவை தோற்றிய பாடசாலை, இரண்டாவது தடவை தோற்றிய பாடசாலை ஆகிய விவரங்களை வலயக் கல்வி அலுவல கங்களுக்கு உடனடியாக கொண்டு செல்லுமாறும் அறிவித்துள்ளார். (த-207)

# நீர்வேலி விவசாய வீதிகளுக்கு மின் விநியோகம் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம்,ஒக.7

நீர்வேலி தெற்கு விவசாய வீதி, மற்றும் கயிற்றுப்புலம் வீதி ஆகியவற்றுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ள போதும் மின் விநியோகம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரு மாத காலத்திற்கு முன்னர் இந்த பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கும் பொருட்டு அவசர அவசரமாக மின் கம்பங்களும் போடப்பட்டு மின் கேபிள்களும் இணைக்கும் பணிகள் பூர்த்தியடைந்து நீண்ட காலமாகியும் மின் விநியோகம் வழங்கப்படவில்லை என இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (த-26)

# தமிழ்ப்பாட செயலமர்வு கனகபுரம் ம.வியில் இன்று

கிளிநொச்சி,ஒக.7

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருந்த தமிழ்ப்பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் கனகபுரம் மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்று தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுரநாயகம் அறிவித்துள்ளார். (த-6-405)

# நாளை

| | |
|---|---|
| ஆடி 23 | 08.08.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | :திரயோதசி |
| | பி.ப. 01.36 வரை |
| நட்சத்திரம் | : புநர்பூசம் |
| | மு.இ. 11.53 வரை |
| சுபநேரம் | : 09.04 - 10.34 |
| ராகுகாலம் | : 04.34 - 06.04 |

# தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம்

தென்மராட்சி கிழக்கு,ஒக.7

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுச்சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை சங்க மண்டபத்தில் இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார். (த-122)

# தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம்,ஒக.7

மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையில் தமிழ்த்தின விழா பாடசாலை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவர் மன்றத் தலைவர் துவாரகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-314-318)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்
## 70ஆவது பதவிப் பிரமாண நிகழ்வு

யாழ்.றோட்டறிக் கழகத்தின் 70ஆவது தலைவரின் பதவிப் பிரமாண வைபவம் இன்று (07.08.2010) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளதனால் சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்து சிறப்பிக்கும்வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

செயலாளர்,
யாழ்.றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம்.



## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை மேலும் உயர்த்துவதற்கு
### விசேட இறுதிக் கருத்தரங்கு

★ பொது உளச்சார்பும் (நுண்ணறிவும்)
கணிதமும் தொடர்பாக நுணுக்கமாக அலசி ஆராயப்படும்.
★ 10.08.2010 இலிருந்து 12.08.2010 வரை தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறும். இட நெருக்கடியைக் கருத்திற்கொண்டு முன் கூட்டியே பதிவை மேற்கொள்ளவும்.
★ கட்டணம் 350 ரூபா (கையேடுகள் இலவசம்)

| நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|
| ★ உயர்கலைக்கல்லூரி (மீசாலைச் சந்தி) | 8.00-10.30 |
| ★ கிறஸ்ரல் (நெல்லியடி) | 11.00-1.30 |
| ★ DMI (ஆரியகுளம் சந்தி) | 2.30-5.00 |
| ★ சுப்றா(சித்தங்கேணி) | 05.30-7.00 |

ஆசிரியர்: த.தவசேகர் (B.Sc,P.G.D.E, P.G.D.P,M.Ed (merit)

(சி/569721)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## விவசாயபீடம்
### விரிவுரைகள் ஆரம்பம்

விவசாயபீடத்திற்கு 2009/2010 கல்வியாண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 01.09.2010 புதன்கிழமை காலை 9 மணிக்கு விவசாயபீட பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. அனைத்து புதுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் கீழ்வரும் கல்வியாண்டுகளில் பயிலும் ஏனைய விவசாயபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 06.09.2010 திங்கட்கிழமை அன்று ஆரம்பமாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

* முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு 2008/2009
* இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு 2008/2009
* மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு 2008/2009
* நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு 2008/2009

பதிவாளர்.
06.08.2010

(சி/569713)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின்
பகுதித்தலைவர் ஆ.க.இரவீந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்
### திருமதி செல்லப்பாக்கியம் கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவைக்கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/நாவற்குழி ம.வி. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## 27ஆம் நாள் நினைவுகூரல்

மலர்வு 15 ★ 03 ★ 1928



உதிர்வு 12 ★ 07 ★ 2010

### திருமதி பாக்கியம் கந்தவனம்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்."

அன்புத் தெய்வமே உமது அடியாள் பாக்கியம் கந்தவனம் மனித பலவீனத்தினால் புரிந்த குற்றங்களை மன்னித்து உமது பேரின்ப வீட்டில் சேர்த்தருளுமாறு இரந்து மன்றாடுகின்றோம்.

ஜூலை மாதம் (27.07.2010) திங்கட்கிழமை இறைபதமடைந்த எங்கள் அம்மாவின் 27ஆம் நாள் நினைவாக இன்று (07.08.2010) சனிக்கிழமை காலை 7மணிக்கு ஆன்ம இளைப்பாற்றுக்காக நாக்கியம்புலம் லூர்து அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்று 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஜெப வழிபாட்டைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஏழாலை தெற்கு. (101591)

## கலை நிலா அரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஓக 07

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் அழகியல் பாடங்களைப் பயில்கின்ற மாணவர்களின் கலைத்திறன்களை வெளிப்படுத்தும் முகமாக மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற கலைநிலா அரங்க நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கு சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நிசாந்தனும், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தைச் சேர்ந்த ஜெ.தர்மராஜனும் கலந்துசிறப்பிக்கவுள்ளார்கள்.

கலை நிகழ்வுகளாக பாட்டு, 'ஓர்கன்' இசை என்பவற்றுடன் பல்வேறு வகையான நடனங்களும் இடம்பெறவுள்ளன. (ஒ)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக 07

திருநெல்வேலி சிவசக்தி பாலர் பாடசாலையின் 10ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மேற்படி வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.தெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பெரியபுலம் மகாவித்தியாலயதின் ஓய்வுபெற்ற அதிபர் தி.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக கந்தர்மடம் சைப்பிரகாச வித்தியாலய அதிபர் ஆர்.இராமநாதன், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபஸ்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (த-201)


### SHAMROCK

| A/L 2011 PAPER CLASS | Gr 1 முதல் O/L வரை |
|---|---|
| அளவை mun, wed 5 p.m S.றொக்கேஷியன் | ★ ENG.MED. 6 TO 11 |
| நாடகம் mun, Tue 4 p.m N.சஜீதரன் | ★ ENG.LIT 10,11 |
| அரசியல் Sat, Sun 10 a.m S.S.செந்தூரன் | ★ புலமைப்பரிசில் (5) |
| | ★ O/L REPEAT |
| | சிங்களம் |

### வீடும் காரும் விற்பனைக்குண்டு

மருத்துவ பீடத்துக்கும், கல்வாரி தேவாலயத்துக்கும் அருகில் உள்ள பிறவுண் வீதி, கொக்குவில் பகுதியில் 4 அறைகள், 2 மலசல கூடங்கள், கிணறு மற்றும் குழாய் நீர் வசதி கொண்ட 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு (நிறுவனங்களுக்கு விரும்பத்தக்கது). KE70, TOYATA CORRALA 13 மொடல் காரும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0775425886

### காணி விற்பனைக்கு

சங்கானை முருகமூர்த்தி வீதியில்-பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் 6½ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடும், தோட்டப் பயிர்களும் செய்யக்கூடிய 35 பரப்பு நெற்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு தொலைபேசி எண்கள்: 0718387361, 0777556244

### விற்பனைக்கு

அண்மையில் கன்று ஈன்ற பாற்பசு, ஆடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: "செல்வவேல்"
இல.10, கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், டாசோன் பெண்நாயும், பொக்கட் பெனியர் ஆண், பெண் நாயும் 3மாதம் பூர்த்தியான பொக்சர் பெண்நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், வான்கோழிகளும் விற்பனைக்கு.
தொடர்பு: வி.மயூரன்,
இல.209, ராஜாபிளாசா முன்பாக,
பலாலி றோட், கோண்டாவில்.


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 13 ★ 05 ★ 1981



இறப்பு 23 ★ 07 ★ 2010

### அலின் மற்றின் றேனுகா

உமது ஆன்மா ஆண்டவன் சந்நிதியில் இளைப்பாற தினமும் நாம் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

திருமன்றுவீதி, மல்லாகம். (101587) அத்தான், அக்கா, பிள்ளைகள்.

## ஞானக்குழந்தை இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக 07

யாழ்ப்பாணம் பாலர் கல்வி கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 14 ஞானக்குழந்தை இல்லங்களின் சிறார்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ஐ-207)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர்களான, கணிதத் துறையின்
தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி
சிறிசற்குணராஜா அவர்களின் தாயாரும்,
மொழியியல் ஆங்கிலத்துறையின் தலைவர் சிரேஷ்ட
விரிவுரையாளர் திருமதி சி.சிவராணி அவர்களின்
மாமியாரும் ஆகிய
### திருமதி சிவக்கொழுந்து பொன்னம்மா
03.08.2010 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

(சி/569719)

## கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்



### திருமதி ஜெகசோதி (பட்டு) துரைச்சாமி


சொந்தமென எங்களின் நெருக்கத்தில் இருப்பவரே!
சொல்லுமொரு முறைகளிலே முதல்நிலை ஆனவரே!
பந்தமுடன் வந்தவழி தூரமென நின்றபோதும்
பாசமுள்ள மாமியாகி அம்மாவாகி வாழ்ந்தவரே!
எந்தனுக்கு நோய்வந்து சிகிச்சையில் இருந்தவேளை
ஏற்றவழியில் தொலைபேசியில் பிள்ளைகளை ஆறுதல்படுத்தி
வந்தமருமகனை உச்சத்தில் மதிக்கின்ற மாமியே!
விழிநீர் சொரியவிட்டு பிரிந்தேகி போனதேனோ!

சந்தையடி கிழக்கு ஒழுங்கை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது பிரான்ஸில் வசித்தவருமான திருமதி ஜெகசோதி (பட்டு) துரைச்சாமி 04.08.2010 அன்று பிரான்ஸில் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலி. அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெறாமகள் - கீதா,
மருமகன் - ரீ.மனோகரதாஸ்,
பேரப்பிள்ளைகள்: நர்மதா, மிதுன் பரிசித்,
நர்மதா, மேருயன் பரதன்,
சம்பந்தி திருமதி ஆர்.கே.பரஞ்சோதி.

பிரிஜின் டிசைன் குறுப்,
100, அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். (101658)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பூசையும்



### அமரர் சின்னத்துரை கணேசலிங்கம்

நிகரில்லா சேவைக்காக இளவயதிலிருந்தே சமூகத்திற்கும் சமயத் தொண்டுகளுக்கும் தம்மையே முற்றுமுழுதாக இணைத்துக்கொண்ட
சி.கணேசலிங்கம் மாவைத் தொண்டர்சபையின் வளர்ச்சியில் இறுதிவரை பணியாற்றி அச்சபை மூலம் உயரியதோர் மகேஸ்வரப் பூசையையும் அங்குரார்ப்பணம் செய்து, மாவைக்கந்தனது
அடியார்களுக்கு அரும்பெரும் பணிகளாற்றி அப்பணிகள் தடையில்லாது நடைபெற வேண்டிய செயற்பாடுகளைச் செய்துவிட்டு
2009ஆம் ஆண்டு மாவைக்கந்தனது 23ஆம் திருநாளன்று
சிவபதம் சேர்ந்த நிகழ்வின் சார்பாகவும் அவரது சிவபுண்ணிய தொண்டுகளின் சார்பாகவும் அவரை ஞாபகார்தமாக என்றும் மனதில்கொள்ள
அன்னாரது உருவப்படத்தை ஆலயத் தெற்கு வீதியிலுள்ள சௌ ஜன்யா மண்டப அன்னதான மடத்தில் அமைத்து, அப்படங்களை
சனசமூக பார்வைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வைபவம் 23ஆம் திருநாளான இன்று (07.08.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் இடம்பெறவுள்ளது. ஆதரவாளர்கள் அனைவரையும் இதில்பங்கு கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

மாவை ஆதீனமும்,
மாவை அன்னதானத் தொண்டர் சபையும். (101661)

எஸ்.சொரூபன்
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக்குழு யாழ்.கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்திய சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, மாநகரசபையின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இருபடங்களிலும், வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பதக்கம் அணிவிப்பதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.
*(படங்கள்: லக்ஸ்மன்).*

# சமூகப் பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டத்தை மேலும் ஒருவருடம் நீடிக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

வறுமைக் கோட்டிற்குட்பட்ட சமூக பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டத்தில் பொது மக்கள் பலரை இணைத்துக்கொள்ளும் வகையில் இத்திட்டத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2008,2009ஆம் ஆண்டுக்கான சுய தொழில் ஒய்வூதியத்திட்ட நடைமுறைப்படுத்தலில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

இதுபோன்ற பல திட்டங்கள் எமது சமூகத்துக்குத் தேவையாகவுள்ளது.

இப்படியான திட்டங்களை முன்னெடுப்பதன்மூலம் நாட்டில் சுயதொழில் முயற்சிக்களை ஊக்குவிக்க முடியும்.

அரச உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதால் பெரும்பாலான மக்கள் அரச உத்தியோகத்தையே நாடிச் செல்கின்றனர்.

இதனால் தனியார் துறைபோன்ற சுயதொழிலில் ஈடுபடுவோரின் நாட்டம் அத்துறைகளில் குறைந்து வருகிறது.


இதுபோன்ற திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களை முன்னேற்ற முடியும்-என்றார்.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் நிமால் சந்திர அமரசிங்கவும் கலந்துகொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய முன்னாள் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிரதம கணக்காளர் எஸ்.சண்முகரட்ணம், சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன், இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தம்பிக்க பாதுக்க ஆகியோர் கலந்கொண்டனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலர்கள், கணக்காளர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களென சுமார் 250இற்கும் மேற்பட்டோர் கௌரவிக்கப்பட்டனர். (த-16-86)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் பெருந்திருவிழா 12ஆம் திகதி ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஓக.7

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 5மணிக்கு திருமஞ்சத் திருவிழாவும், 20ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 21ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் காலை 8 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், 9 மணிக்கு விசேட பூசை, 9.30 மணிக்கு ஸ்தம்ப பூசை என்பன நடைபெற்று முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருவார்.

மாலைத் திருவிழாவில் பிற்பகல் 4 மணிக்கு சாயரட்டைப் பூசை, 4.30 மணிக்கு ஸ்தம்பப் பூசை, 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருவார். (த-204)

## புதிய பரிவர்த்தனை கோபுரங்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.7

'ரெலிக்கொம்' நிறுவனத்தால் புத்தூர், புங்குடுதீவுப் பகுதிகளில் ''சி.டி.எம்.ஏ'' வாடிக்கையாளர்களின் நன்மை கருதிப் புதிய தொலைத்தொடர்புப் பரிவர்தனை நிலையங்களை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இப்பணிகள் செப்ரெம்பர் மாதமளவில் நிறைவடைய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காரைநகர் பகுதியில் தொலைத்தொடர்பு கோபுர வேலைகள் பூர்த்தியடைந்து சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் 'ரெலிக்கொம்' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-310-312)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் சகல அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(த-310)

## மாற்று வலுவுள்ளோரின் விவரம் திரட்டல்

நவாலி, ஓக.7

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாற்று வலுவுள்ளோர்களின் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

இதற்கமைய எதிர்வரும் 9ஆம் திகதி ஜே/133 கிராம சேவையாளர் பிரிவிலும், 10ஆம் திகதி ஜே/134 நவாலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவிலும், 12ஆம் திகதி ஜே/145 கிராம சேவையாளர் பிரிவிலும் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் காலை 9 மணிக்கு தத்தமது கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு வருகை தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (த-100)




## முதியோருக்கு பால்மா வழங்கல்

நவாலி, ஓக.7

நவாலி கிழக்கு, ஜே/135 முதியோர் சங்கத்தினால் சங்க அங்கத்தவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் குலுக்கல் மூலம் அங்கர் பால்மாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களது இச் செயலைப் பலரும் பாராட்டியுள்ளனர். (த-100)

## திருக்குறள் மனனப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நல்லூர் கோட்ட மாணவர்கள் காலை 8.30 மணிக்கும் கோப்பாய் கோட்ட மாணவர்கள் முற்பகல் 10.30 மணிக்கும் யாழ்ப்பாணக் கோட்ட மாணவர்கள் முற்பகல் 11.30 மணிக்கும் சமுகம் அளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-310)

# நல்லூர் உற்சவக் காலத்தில் நாகரிக உடைகளை தவிர்க்கக் கோரியது விவாதத்துக்குரிய விடயமல்ல

## பரிசளிப்பு விழாவில் யாழ். மாநகர முதல்வர்

நல்லூர்,ஓக.7

தமிழ்ப் பெண்கள் தமது கலாசாரத்தைப் பாதுகாப்பவர்களாக தமது இனத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும். நல்லூர் வருடாந்த உற்சவ காலத்தில் நாகரிக உடைகளைத் தவிர்க்கக் கோரியது விவாத அரங்கிற்கான விடயமல்ல என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்திய சமய அறிவுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தொன்மைமிக்க எமது மதத்தின் தத்துவங்களைக் கேலிக்குரியதாக இன்றைய இளம் சந்ததி நினைக்கிறது. எமது மதம் குறித்த தெளிவான அறிவைப் புகட்டும் வகையில் பாடப்புத்தகங்கள் அமைய வேண்டும். யாழ். பல்கலைக்கழகம் இதில் உதவலாம் என நினைக்கிறேன். தென் பகுதி பௌத்தர்கள் தமது மதத்திற்கும் கலாசாரத்திற்கும் முக்கியத்துவம் கொடுகின்றார்கள். உற்சவ காலத்தின்போது பெண்கள் தமது கலாசார உடைகளை அணியவேண்டும் என்பது எல்லோரதும் ஏகோபித்த முடிவு. யாழ். மாநகரசபை எமது மதத்தின் வளர்ச்சிக்காக அதன் கோட்பாடுகளை அனைவரும் அறிந்து கடைப்பிடிக்கக்கூடியதாக இதுபோன்ற போட்டிகளை நடத்தி வருகின்றது. நான் சிறுவயது முதலே மாநகர சபை உற்சவ காலத்தில் மேற்கொள்ளும் செயற்பாடுகளைக் கண்டிருக்கின்றேன்.

இந்தப் பணிகள் தொடர்ந்தும் எமது பிரதேசத்திற்குக் கிடைக்கும். மாநகரசபை அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய ஆணையாளர் மு. செ. சரவணபவ,

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு சமய வளர்ச்சிக்காகத் தொண்டாற்றி வருகின்றது. இளம் தலை முறையினர் ஒரு நல்ல சமுதாயமாக வளர ஆன்மீக நெறிகளைத் தெரிந்திருக்க வேண்டும். இதனால் மாணவர்கள் மத்தியில் சமய அறிவுப் போட்டிகளை நடத்துவதுடன் சிறந்த அறிஞர்களின் ஆக்கங்களைக் கொண்ட நல்லைக்குமரன் மலரையும் உற்சவ காலத்தில் வெளியிட்டு வருகின்றது.

அத்துடன் யாழ். நகருக்குச் சிறந்த சேவையாற்றியவர்களையும் யாழ். விருது வழங்கிக் கௌரவிக்கிறது. பயனுள்ள செயற்பாடுகளின் ஊடாக சமூகத்தில் நீங்கள் உயர்ந்தவர்களாக யாழ். மாநகர சபையினதும் சைவ சமய விவகாரக் குழுவினதும் பணிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவை நல்க வேண்டும்- என்றார். (த-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் பான்ட் வாத்திய அணி சகிதம் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் முன்பள்ளிச் சிறார்கள் போட்டிகளில் ஈடுபடுவதை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம். (த)

# வட இலங்கையிலிருந்து சீனர்கள் இந்தியாவுக்குள் ஊடுருவலாமென அச்சம்

## தமிழகக் கடற்பாதுகாப்பு அதிகரிப்பு

வட இலங்கையில் இருந்து சீனர்கள் கடல் வழியாக தமிழகத்திற்குள் ஊடுருவலாம் என்ற அச்சத்தால் தமிழகக் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'ஒபரேஷன் ஹம்லா' என்ற பெயரில் தமிழகக் கரையோரக் காவல் படையினர் இலங் கைக் கடற்பரப்பை நோக்கிய பாதுகாப்பு நடவடிக்கைளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நடவடிக்கை கடந்த புதன்கிழமை இரவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கலாம் எனக் கூறப்படும் இந்த நடவடிக்கைகள் மும்பையில் இடம்பெற்ற தாக்குதல் போன்ற நிலைமைகள் ஏற்படுமாயின் அதை எதிர்கொள்ளும் நோக்கில் முன்னெடுக்கப்படுகிறது எனக்கூறப்படுகிறது.

தமிழகத்தில் கல்பாக்கம் மற்றும் கூடன்குளம் ஆகிய அணு மின்நிலையங்கள் சென்னையின் கடல் சார்ந்த பிரதேசங்களில் அமைந்துள்ளன.

இந்த நிலையில் அவற்றின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கைகளை அங்கு பலப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது எனத் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் வட இலங்கையில் கச்சதீவு உள்ளிட்ட பல பகுதிகளில் சீனத் துருப்பினர் இருக்கின்றனர் என தமிழக மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இதன் அடிப்படையிலேயே இப்பாது காப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அதிகாரிகளின் கவனம் பொதுமக்களின் முறைப்பாடுகள் பக்கம் திரும்புமா?

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளில் பயணிக்கும் பயணிகளுக்கு பயணச்சிட்டை வழங்கவேண்டும் என்று பத்திரிகைகள் மூலம் ஒன்றல்ல மூன்று தடவை அறியத் தந்ததோடு அதனை மீறும் சிற்றூர்திகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் சிலாகித்திருந்தார்.

நான் 787 இலக்க சிற்றூர்திச் சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி ஒன்றில் யாழ்ப்பாண நகரிலிருந்து மானிப்பாய் செல்லும்போது உரிய பயணச் சிட்டை நடத்துநரால் வழங்கப்படவேயில்லை. இது தொடர்பில் எழுத்து மூலமான முறைப்பாட்டினை மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்தேன். இரண்டு நாள்கள் சென்றன. நான் மீண்டும் சிற்றூர்திப் பயணத்திற்காக குறிப்பிட்ட வழி இலக்க பேருந்தில் ஏறியபோது குறித்த பஸ் நடத்துநரால் ஏளனப்படுத்தப்பட்டேன். 'என்ன கச்சேரிக்கு பெட்டிசன் எழுதுகின்றீராம்? நீர் எழுதினால் என்ன? அங்கெல்லாம் நம்மட ஆள்கள் இருக்கிறான்கள் உம்மாலே ஒன்றும் செய்ய இயலாது''.

மக்கள் பிரச்சினையில் உதயன்

ஒரு விடயம் அப்போதுதான் என் ஞாபகத்திற்கு வந்தது. நான் கொடுத்த முறைப்பாட்டினைப் பெற்றதாக உறுதிப் பத்திரம் கேட்டபோது (Acknowled - gement) அதெல்லாம் தேவையில்லை என்றார்கள். ஏனென்றால் அப்படியொரு முறைப்பாடு கிடைக்கவில்லை. இதெல்லாம் பொய்க் குற்றச்சாட்டு என்று சுலபமாக மறுப்பறிக்கை விடுவதற்காகவே.

சகல பொதுமக்களும் வருங்காலங்களில் முறைப்பாடுகளை அரச அலுவலகங்களில் சமர்ப்பிக்கின்றபோது அவற்றைப் பெற்றதாக உறுதிப்பத்திரம் பதவி நிலை உத்தியோகத்தரின் இறப்பர் முத்திரை மற்றும் கையொப்பத்துடன் பெறவேண்டும். இல்லையேல் பதிவுத் தபாலில் அனுப்புங்கள் இரண்டாவது கூடக் கிடைக்கவில்லை என்று இலகுவாகப் பொய் சொல்லுவார்கள். முதலாவதுதான் சரியான அணுகு முறைமை.

பெரும்பாலான யாழ்.மாவட்ட அரசாங்க அலுவலகங்கள் பொதுமக்கள் முறைப்பாடு தொடர்பாக அக்கறை கொள்வதில்லை. அதனை மறுப்பதிலேதான் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனவே தவிர தம் குறைபாடுகளைக் களைவதில் அல்ல. இதற்கு யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும் விதிவிலக்கு அல்லவே.

அறிவிப்புகள் மற்றும் சட்டதிட்டங்களை அறிவிக்கின்ற அதிகாரிகள் அவற்றை அறிவிப்பதோடு தமது கடமை முடிந்துவிட்டதாக எண்ணிவிடக் கூடாது. அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா எனக் கண்காணிக்க வேண்டும். அவை தொடர்பில் தொடர்பணி முறைமையினை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் சாமானிய பொதுமக்களுக்கு நன்மை கிட்டும். இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து தெளிந்து நடப்பார்களா? இல்லை அறிவிப்புகள் பத்திரிகைச் செய்திகளில் மட்டும் உலா வருமா?

நிதர்சனத்தினை என்றென்றும் தரிசிக்கும்
பா.துரைசிங்கம்.

## வரணி மகா வித்தியாலய பழைய மாணவர் கூட்டம்

வரணி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சகல பழைய மாணவர்களையும் இக்கூட்டத்துக்கு வருகைதருமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார். (த-122)


DIABETIC CARE AND PHYSIOTHERAPY CENTRE

- பக்கவாத நோய் (STROKE) உள்ளவர்கள் WARD இல் தங்கி சிகிச்சை பெறுதல்.
- இரத்தம், சிறுநீர் (LABORATORY) பரிசோதனைகள்.
- நீரிழிவு நோயாளருக்கான தேர்ந்தெடுத்த உணவு வகைகள்.
- ஆடை நீக்கிய (NON FAT) பசும்பால் என்பனவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

GOPISHAANTH HEALTH CARE,
191, 1st CROSS STREET, JAFFNA.
(NEAR VEMBADY GIRLS' HIGH SCHOOL) T.P.: 0779850291

வேலையாள்கள் தேவை

வவுனியாவின் பிரபலமான Hotel ஒன்றுக்கு ஆள்கள் தேவை. சமையல் தெரிந்தவர்கள், சமையல் உதவியாளர்கள், Room Boys போன்ற வேலையாள்கள் உடன் தேவை.
Hot Line- 0242222074

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 670 திகதி 05-08-2010
வெற்றி எண்கள்
34 35 44 48 O

ஜக்பொட் பரிசு ரூ. 30,246,820/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 30,246,820/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 408 | 1,000/= | 408,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 619 | 1,000/= | 619,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16426 | 60/= | 985,560/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7645 | 40/= | 305,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 192687 | 20/= | 3,853,740/= |
| | | மொத்தம் ரூ. | 6,994,100/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 700244281-4-24 |
| யாழ்ப்பாணம் | 700248355-9-39 |
| கம்பஹா | 700253149-2-22 |
| கொழும்பு | 700248134-6-46 |
| மாத்தறை | 700240632-6-36 |
| புத்தளம் | 700252201-8-38 |
| அம்பாந்தோட்டை | 700246320-2-12 |
| கொழும்பு | 700247293-6-26 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,394,100/=
எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 30,768,010/=
மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஒகஸ்ட் 09 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

வாசனா சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம்: 829 திகதி: 05.08.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| J | 02 | 13 | 23 | 56 | 58 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 18,156,664.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 02 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 286 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14639 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 205370 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30728 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
9,157,860.00
சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
18,254,728.50
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
தேசிய லொத்தர் சபை
அவசர தேவைக்கு: 2473360, 2435631
இணையம்: www.nlb.lk

ENGLISH & SINHALA Personal Classes

இரு மொழிகளும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், அரச வங்கி மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எவ்வயதினரும் இன்று முதல் இணைந்து கொள்ளலாம். வகுப்பு நேரங்கள் (வெள்ளி தவிர).
மு.ப.8.30-11.30, பி.ப.2.45-5.30,6.30-7.30
T.SAGATHEVAN, B.A.Lond. Trilingual Tutor/Translator (PVT),
46,Pirappankulam Lane, Vannarpannai, Jaffna.
T.P: 2223520/0778210178 (101555)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டுச்சூழல் காரணமாக கணவனை இழந்த பெண்களின் சுயதொழில் முயற்சிக்காக லண்டனைச் சேர்ந்த அரியாலை மக்களின் அமைப்பான 'பிறென்ற்' தமிழ்ச்சங்கம் உதவிகளை வழங்கிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் மேற்படி அமைப்பின் சார்பில் திட்ட உதவியாளர் திருமதி ச.நளாயினி கணவனை இழந்த பெண் ஒருவருக்கு ஒரு தொகுதி பொருள்கள் வழங்குவதையும், அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் ஆடு வளர்ப்புக்கான நிதியை பெண் ஒருவருக்கு வழங்குவதையும், ஜே/96 பிரிவு கிராம அலுவலர் எஸ்.விஜிதன் பயனாளி ஒருவருக்கு ஆடு வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்).

# உலக உணவுத் திட்டத்தின் பொருள்களை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றம்

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் அரச அதிபர்



யாழ்ப்பாணம், ஓக. 7

உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உணவுப் பொருள்கள் விற்பனைக்குரியவை அல்ல. இந்தப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாகச் சம்பந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

உலக உணவுத் திட்டத்தினால் யாழ். மாவட்டத்தில் நலிவுற்றோருக்கான உணவு, கல்விக்கான உணவு, இலகு வேலைக்கான உணவு, வேலைக்கான உணவு, தாய் சேய் நலத்திட்டம் மற்றும் பயிற்சிக்கான உணவு என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. ஒவ்வொரு திட்டத்துக்கும் ஏற்ப பயனாளிகளுக்கான உணவாக அரிசி, கோதுமை மா, பருப்பு, மரக்கறி எண்ணை, சோளம் சோயா கலவை என்பன கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் மூலமும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த உணவுப் பொருள்கள் விற்பனைக்கு உரியவை அல்ல. உலக உணவுத் திட்ட இலட்சினையுடன் உள்ள எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்வது, அனுமதி இன்றி எடுத்துச் செல்வது சட்டப்படி குற்றமாகும். இவ் உணவுப்பொருள்கள் விற்பனை செய்வது, அனுமதி இன்றி எடுத்துச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவை பறிமுதல் செய்யப்பட்டு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை பொதுமக்களின் மற்றும் வர்த்தகர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றேன் - என்றுள்ளது. (த)

# சட்டவிரோத பீடிகளை வைத்திருந்த ஐவருக்கு ரூ. 25 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஓக. 7

சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட பீடி வைத்திருந்த ஐந்து பேருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் பூநகரி, கிராஞ்சி, முழங்காவில் ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது சட்டவிரோதமாக தயாரித்த பீடிகள் வைத்திருந்த ஐந்து பேர் சிக்கினர். அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இவ் வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா ஐந்து பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 3 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)




# தென்மராட்சியில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உதயன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக. 7

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டதின் விளைவாக கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் பெரும் பொறுப்பு ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இப்பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை இனம் கண்டு மக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் அவற்றினை ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் செல்வதுடன் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் கிராம மட்டத்தில் பல் வேறு தொழில் முயற்சிகளை ஆரம் பிப் பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பணி தம்மைச் சார்ந்துள்ளதாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், இப் பெரும் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு இங்கு சமுகமளித்துள்ள அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரசாங்க உத்தியோகத்தர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மக்கள் அமைப்புகளை ஒன்றிணைத்து அத்தியாவசிய தேவைகளை இனம்கண்டு இப்பிரதேசத்தை கட்டியெழுப்புவதன் மூலம் தென்மராட்சி மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்றும் உதயன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - .

இங்கு திணைக்களத் தலைவர்களாலும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளாலும் முன் வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு அமைச்சுக்களில் இருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இக் கூட்டத்தில் பிரதேச செயலாளர் கே.ஸ்ரீனிவாசன் உட்பட செயலக உத்தியோத்தர்கள், பாதுகாப்புத் தரப்பினர், கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ஒ)

# தெற்கு ஆடைத் தொழிற்சாலைகளில் யாழ். வாசிகள் 70 பேருக்கு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 70 பேருக்கு தெற்கில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது.

கடந்த மாதம் யாழ்.செயலகத்தில் நடந்த பயிற்சி நெறியின் முடிவில் தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் இந்த வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 27, 28,29 ஆம்திகதிகளில் மாவட்ட திட்டமிடல் செயலகத்தினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் 145 மாணவர்களுக்கு ஆடைத் தொழிற்சாலைத்துறை சம்பந்தமான செயலமர்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

துறைசார் உத்தியோகத்தர்களால் மாணவர்களுக்கு பூரண விளக்கமளிக்கப்பட்டதுடன் மாணவர்களின் பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களின் சம்மதத்துடன் தெற்கில் உள்ள இரு நிறுவனங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உணவு, தங்குமிட வசதிகள் அந்நிறுவனங்களாலேயே ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ஒ-ஐ)

# வன்னிக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் தகுந்த காரணத்துடன் மேன்முறையீடு செய்யலாம்

## மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7

வடக்கு மாகாணத்தில் வெளிமாவட்டங்களில் இருந்து வன்னிப் பெருநிலப் பரப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் நியாயமான காரணத்தை முன்வைத்து வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீடுகள் வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டுச் சபையினால் பரிசீலனை செய்யப்பட்டு உரிய முறையில் பதில் அனுப்பி வைக்கப்படும்.

மேன்முறையீடுகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:

வன்னி பெருநிலப்பரப்புக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக ஐந்து நிபந்தனைகளை முன்வைத்து மிகவும் விளக்கமான சுற்றறிக்கையை மாகாண கல்வித் திணைக்களம் அனுப்பிவைத்திருந்தது.

குறித்த நிபந்தனைகளை பெரும்பாலான கல்வி வலயங்கள் உரிய முறையில் பின்பற்றி இடமாற்றம் பெற தகுதியான ஆசிரியர்களைத் தெரிவு செய்துள்ளன. ஒருசில கல்வி வலயங்கள் பொருத்தமான முறையில் நிபந்தனைகளை பின்பற்றத் தவறியமையினால் சில ஆசிரியர்கள் பொருத்தமற்ற வகையில் இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நிபந்தனைக்கு அமைய விலக்கு அளிக்கப்படும்.

சம்பந்தப்பட்டவர்கள் தமது மேன்முறையீடுகளை உரியமுறையில் வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கு ஊடாக அனுப்பி வைக்கவேண்டும். இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பாலூட்டும் தாய்மார் - பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் சகிதமும், கர்ப்பிணித் தாய்மார் - 'கிளினிக்' அட்டையுடன், நோய்த் தாக்கங்களுக்கு உள்வாங்குவார்கள் 'கிளினிக் அட்டைகளுடனும், கஷ்டப் பிரதேச சேவை மற்றும் வெளிமாவட்டச் சேவையினைப் பூர்த்தி செய்தவர்கள் - சேவை நிரூபிப்பது தொடர்பான ஆவணங்களுடனும் மேன்முறையீடு செய்யலாம்.

வன்னிப் பெருநிலப் பரப்புக்கான ஆசிரியர் பதிலீட்டு இடமாற்றம் காலத்தின் கட்டாய தேவை. இதில் யாருக்கும் கருத்து முரண்பாடு இருக்கக்கூடாது.

இங்குள்ள மாணவர்களின் கல்வி வசதியில் எந்தவிதமான இடையூறும் ஏற்படக் கூடாது. அவர்களுக்கு கற்பிப்பதை ஆசிரியர்கள் தமது சேவைக்காலத்தில் பெரும் பாக்கியமாகக் கருதவேண்டும்.

தகுதியான சிலருக்கு இடமாற்றம் கிடைக்கவில்லை என யாரும் குழம்பத் தேவையில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான இடமாற்றப்பட்டியல் விரைவில் வெளிவரவுள்ளது எனத் தெரிவித்தார் மாகாணக் கல்விப் பணிப்பாளர். (ஒ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை எழுதப்போகும் மாணவர்களே வெற்றிபெறுவதற்கு இதோ சில வழிகள்

அன்பான மாணவச் செல்வங்களே! கடுமையான முயற்சி, பயிற்சி, என்பவற்றுடன் பல்வேறு தியாகங்களின் மத்தியிலும், பெற்றோரின் தியாகங்கள் போன்றவற்றினூடாகவும் இன்னும் சில நாள்களில் நடைபெற உள்ள, இலங்கையின் மிக முக்கியமான பரீட்சையாக முத்திரை பதித்துவிட்ட க.பொ.த (உ/த) பரீட்சைக்கு முகம் கொடுக்க இருக்கின்ற உங்களுடன், நீங்கள் பரீட்சைக்கு தயக்கமில்லாது செல்ல வேண்டும் என்ற நோக்கில் எல்லோரிற்கும் சிறந்த பெறுபேறு கிடைப்பதற்குரிய அடிப்படை வழிகாட்டலாக இதனை எழுதுகின்றேன்.

க.பொ.த (உ/த) வகுப்பின் கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான இருபது வருடங்களுக்கும் மேலான கற்பித்தல் அனுபவங்கள், தேசிய ரீதியாக அரசினால் நடத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு நோக்குநராக, பிரதம மேற்பார்வையாளராக கடமையாற்றிய அனுபவங்கள், மேலும் கடந்த பத்துத் தடவைகளுக்கு மேலாக க.பொ.த இரசாயனவியல் (உ/த) தேசிய ரீதியிலான மதிப்பீட்டுக் கடமையில் தொடர்ச்சியாக பங்குபற்றி பல எண்ணிக்கையான மாணவர்களின் இரசாயனவியல் விடைத்தாள்களை திருத்தியமையினால் பெறப்பட்ட அனுபவங்கள் என்பவற்றினூடாக - பரீட்சை எழுத இருக்கும் மாணவ, மாணவிகளுடன் எனது அனுபவங்களை சிறிய வழிகாட்டலாக எழுத முனைகின்றேன்.

இவ்வகையில் இந்த வழிகாட்டலானது பின்வரும் காரணிகளின் அடிப்படைகளில் நோக்கப்பட உள்ளது, அவையாவன:-

1. **உடல் நலம்**
2. **நித்திரை**
3. **நேரம்**
4. **சுட்டெண்**
5. **வினாத்தெரிவு**
6. **தெளிவான கையெழுத்து**
7. **விடையளித்தல்**
8. **பக்க ஒழுங்குகளும், ஒப்படைத்தலும் என்பனவாகும்.**

### 1. உடல் நலம்

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும் என்பது முதுமொழி. இதற்கமைய மாணவர்கள் தமது உடல் நலத்திலும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். முக்கியமாக பரீட்சைக்காலங்களில் வயிற்றோட்டம், சளி, ஒவ்வாமை, போன்ற நிலைகளை உண்டாக்கக்கூடிய உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது. ஏறக்குறை 2½ - 3 வருட உயர்தர வகுப்பு கற்றலின் அறுவடை ஒவ்வொரு பாடங்களுக்கும் பெரும்பாலும் பகுதி I - II உட்பட ஐந்து மணித்தியாலங்களிலேயே தங்கியுள்ளது. இந்தக் குறுகிய காலங்கள் எதுவித பாதிப்புக்களும், நோய்களும் வராதபடி காத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

### 2. நித்திரை

ஒவ்வொரு மாணவரினதும் கல்வி முன்னேற்றத்தில் கருத்தூன்றிய கற்றல், பல்வேறு வினாக்களுக்குமான பயிற்சிகள், சுருக்கக் குறிப்புக்கள் எடுத்தல், தொகுத்து எழுதிப் பழகுதல், படங்களை வரைதல், தாக்கச் சமன்பாடுகள், பொறிமுறைகள் என பலவற்றை கற்பதற்கு அதிகளவு நேரம் தேவை. இதற்காக மாணவர்கள் நீண்ட நேரத்தை ஒதுக்கி கற்கத்தான் வேண்டும். எனினும் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு முதல் நாள் இரவு நீண்ட நேரம் கண் விழித்துக் கற்றல் என்பது ஆரோக்கியமான செயற்பாடாக அமையாது. பரீட்சை மண்டபத்திலே ஒவ்வொரு கணப்பொழுதும் சுறுசுறுப்பாகவும், வினைத்திறனுடனும் செயலாற்றவேண்டி இருப்பதனால் முதல் நாளின் இரவில் அதிக நேர விழிப்பானது சாதகமாக அமையமாட்டாது. மேலும் பரீட்சைக் காலங்களுக்கு முன்பு கற்கும் போதும் கூட இரவில் எவ்வளவு நேரம் பல மணித்தியாலங்களாக கற்பது என்பது பெரிதல்ல எவ்வளவைக் கற்றுக் கொண்டோம் என்பதே பெரிதாகும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

### 3. நேரம்

ஒவ்வொருவரினதும் உயர்விலும், தாழ்விலும் நேரத்தின் பயன்பாடு மிக மிக இன்றியமையாதது. நேரத்தை சிறப்பாக திட்டமிட்டு, பயனுள்ள முறையில் கடைப்பிடித்தமையினால் தான் இன்று நம்முன்னே மூத்த பலர் மகான்களாகவும், மேதைகளாகவும் திகழ்கின்றார்கள். நேரத்தின் பெறுமதி பொன்னைவிட உயர்வானது. இவ்வகையில் பரீட்சைக்கு செல்ல இருக்கின்ற மாணவர்களுக்கு நேரம் தொடர்பாக

அ) நேரத்திற்கு பரீட்சை நிலையத்திற்கு செல்லுதல்

ஆ) வினாக்களுக்கு விடையளிக்கும் நேரம் என்ற இரண்டு பாதைகளினூடாக நோக்க வேண்டியுள்ளது.

#### நேரத்துக்கு பரீட்சை நிலையத்துக்கு செல்லுதல்

ஆழமான, சலனமற்ற உறக்கத்திலிருந்து. நேரத்தோடு எழுந்து உங்கள் கடமைகளை முடித்து அமைதியான இறை வழிபாட்டுடன் பெற்றோர்/ பாதுகவலரின் அன்பான ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு அன்றைய நாள் பாடத்திற்கு கொண்டு செல்ல வேண்டியவை, அடையாள அட்டை, அனுமதி அட்டை, பேனைகள், தீட்டிவைக்கப்பட்ட பென்சில்கள், மற்றும் தேவையான உபகரணங்களுடன் யாவரும் பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சை தொடங்கவுள்ள நேரத்திற்கு அரை மணித்தியாலம் (30 நிமிடங்கள்) முன்பாக செல்வது சிறந்தது. இது மாணவர்களின் வீணான பதட்டத்தையும்,சக்தி இழப்பையும் தவிர்க்க உதவுவதுடன் மாணவர்ளுக்கு சுமுகமான மனநிலையையும் உண்டாக்கும், மேலும் அன்றைய நாள் பாடத்தின் பகுதி I,II போன்றவற்றையும் காலை, மாலை வேளைகள் போன்றவற்றையும் கூட உங்களிடம் உள்ள நேர சூசிகைப்படி கவனமாக செயற்பட வேண்டியதும் முக்கியமாகும். பரீட்சை மண்டபத்தில் நண்பர்கள் சிலர் அன்றைய பாடம் தொடர்பாக (அந்த வினாவாம், இப்படி வருமாம்...) என பலவாறுகதைக்கக் கூடும், இவற்றுக்கு செவி சாய்ப்பது நல்லதல்ல. நேரத்துடன் உங்கள் சுட்டெண் உள்ள இருப்பிடத்தை அறிந்து/ கண்டு உங்கள் இருப்பிடத்தை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது.

#### விடையளிக்கும் நேரம்

குறிப்பிட்ட பாடத்துக்கு விடையளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் அப்பாடத்தின் எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியுள்ளதோ, அத்தனை வினாக்களுக்கும் இயன்றவரையில் விடையளிப்பதற்கு முயலுதல் வேண்டும், இரண்டு மணித்தியால இடை வெளியில் 4 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டி உள்ளது. எனில் அந்த 2 மணித்தியாலங்களுக்குள்ளும், 4 வினாக்களுக்கும் விடை எழுத முழுக்கவனத்துடன் செயற்பட வேண்டியது மிகவும் கட்டாயமானதாகும். இதற்கேற்ப மாணவர்கள் ஒவ்வொரு வினாவின் விடைகளையும் மிக நேர்த்தியாக, விறுவிறுப்புடன் எழுதி முடிக்க முழு மூச்சுடன் தொழிற்படவேண்டும். என்பதை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மாணவர்கள் தம்முடன் சிறந்த மணிக்கூடொன்றை கட்டிக் செல்வது கூட சிறந்தது.

### 4) சுட்டெண்

மாணவச் செல்வங்களே நீங்கள் விடை எழுதும் விடைத்தாள்களில் அன்றைய பரீட்சைத் தினத்தின் திகதியுடன் அன்று கடமையிலுள்ள நோக்குநர்களின் கையொப்பம் உள்ளவாறு உங்களிடம் வழங்கப் படுகின்ற விடை எழுதும் தாள்கள் ஒவ்வொன்றிலும் தெளிவான சுட்டெண்ணை எழுதிக் கொள்ளவும் 4,9,3,5 போன்ற இலக்கங்களை எழுதும்போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும் பெரிய எண்களாகத் தெளிவாக உரிய கூடுகளினுள் தவறாது ஒவ்வொரு தாள்களிலும் எழுதவும் தெளிவற்ற சுட்டெண்கள் எனின் பல்வேறு சிரமங்களை பல சந்தர்ப்பங்களில் பலருக்கும் உண்டு பண்ணிவிடுகின்றன.

### 5) வினாத் தெரிவு

மாணவ, மாணவிகளே பரீட்சை மண்டபத்தில் உரிய நேரத்திற்கு உங்களிடம் வழங்கப்படும் வினாத்தாளை வாங்கி பக்க ஒழுங்குகளின் படி(பல பக்கங்கள் எனின்) ஒழுங்காக அடுக்கிய(மடித்த) பின்பு எது விதமான சலனமுமின்றி வினாக்களை ஆறுதலாக வாசிக்கவும். வழங்கப்பட்ட வினாக்களில் எவற்றுக்கு சிறப்பாக விடை எழுத முடியுமோ அவறுக்கு அடையாளமிடப்பட்ட பின்பு அடையாளமிடப்பட்டவற்றிலும் மிகவும் சிறப்பாக அதிக புள்ளிகளைப் பெறமுடியும் என நினைக்கின்ற வினாவையே முதலாவதாகத் தெரிவு செய்தல் வேண்டும். இவ்விதம் தெரிவு செய்யப்பட்ட வினாவிற்குரிய வினா இலக்கத்தையே அங்கு குறித்துக் கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக ஒரு பாடத்தின் கட்டுரை வினாவில் பகுதி C இல் 8ஆம் வினாவுக்கு நன்றாக எழுதி விடையளிக்க முடியுமென கருதினால் அங்கே வினா இலக்கம் 8 என்றே குறித்துக் கொள்ளுதல் வேண்டும். 1 என்பது அல்ல "வினாத் தெரிவு என்பது விதி" என்பார்கள் எனவே மாணவர்களே மிகவும் பொறுமையாகச் செயற்பட்டு சிறப்பாக விடையளிக்கக் கூடிய வினாக்களை தெரிவுசெய்தல் என்பது உங்கள் பரீட்சைப் பெறுபேறுகளிலும் மிகவும் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனவே வினாத் தெரிவில் மிகவும் கவனமாக இருப்பது அவசியமாகும்.

### தெளிவான கையெழுத்து

தெரிவு செய்யப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கும்போது மாணவர்கள் தெளிவான எழுத்துக்களுடன் எழுத முயற்சிக்க வேண்டும். உங்கள் விடைகளை மதிப்பிட்டு புள்ளி வழங்குகின்ற விடைத்தாள் மதிப்பீட்டாளர்களினால் வாசித்து அறியக் கூடியவாறு தெளிவான கையெழுத்துக் கள் மூலமாக விடை யளிக்க வேண்டும். சிறிய எழுத்துக்கள் அல்லது உறுப்பற்ற எழுத்துக்களுக்கு பழக்கப்பட்டிருப்பி னும் இத்தகையவர்கள் விடையளிக்கும் போது பெரிய எழுத்துக்களைப் பாவித்து எழுதுவது மதிப்பீடானது சாதகமானதாக அமைவதற்கு உதவியாக இருக்கும்.

### 7) விடையளித்தல்

இங்கு பகுதி I பகுதி II என்ற இரண்டு பிரிவுகளினூடாகவும் இப்பகுதியின் வழிகாட்டல் அமைகின்றது.

#### பகுதி I ஐப் பொறுத்தவரையில்...

பெரும்பாலான பாடங்களின் பகுதி I வினாத்தாள் கணித - விஞ்ஞான பாடங்களைப் பொறுத்தவரையில் 60 பல்வேறு வினாக்கள் அடங்கியது. இரண்டு மணித்தியாலங்களுக்குள் விடையளிக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு வினாவிற்கும் 5 தெரிவுகளில் சரியான ஒன்றுக்கு அந்த தெரிவுசெய்யப்பட்ட விடை இலக்கத்தின் மேல் வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் (புள்ளடித்தாளில்) புள்ளடி (X) அடையாளம் இடுதல் வேண்டும். இங்கே முக்கியமான விடயம் யாதெனில்



**அம்பலவாணர் லோகநாதன்**
**(B.Sc., P.G.D.E., M.Ed.(Merit)**
**ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

முதலாம் வினா விலிருந்து இறுதி வினா வரை கடினத்தன்மையில் அதிகரித்துச் செல்வதில்லை. மாணவர்கள் ஒவ்வொரு வினாவையும் மிகவும் கவனமாக வாசித்து விடையளிக்க முயலவேண்டும். இங்கே முதல் ஒரு சுற்று இலகுவான வினாக்களிற்குரிய விடைகளை தெரிவு செய்து உடனுக்குடன் புள்ளடித்தாளில் சரியான விடை இலக்கத்தின் மீது புள்ளடி இடுதல் வேண்டும். சில மாணவர்கள் எல்லாவற்றின் விடைகளையும் இறுதி நேரத்தில் புள்ளடியிட முயற்சிப்பதை அவதானிக்க முடிந்தது. இறுதி நேர இச்செயற்பாடானது அவசரத்தில் மாணவருக்கு பாதகமான விளைவை ஏற்படுத்திவிடும். எனவே சரியான விடைத் தெரிவை தெரிவு செய்து உடன் அந்த வினாவின் விடை இலக்கத்தின் மீது X இடுக.

முதல் சுற்றில் சற்று கடினம், நேரம் எடுக்கும் என இனங்காணப்பட்ட வினாக்களை மீண்டும் தெளிவாக வாசித்து சரியான விடையைப் பெறுவதற்கு முயற்சித்து விடையைப் பெறுக. இறுதியில் ஒரு சில வினாக்களுக்கு விடை தெரியாவிட்டாலும் 60 விடைகளையும் X அடையாளமிடுவதற்கு தவற வேண்டாம்.

மேலும் சில துறைகளின் பாடங்களின் பகுதி I ஆனது மிகவும் குறுவிடை எழுதுவதை எதிர்பார்த்ததாக அமையும். இவற்றிலும் சரியாக தெரிந்த வினாக்களுக்குரிய விடைகளை எழுதிய பின்பு கடினமான வினாக்களுக்கு விடையளிக்க முயற்சிக்குக.

#### பகுதி II ஐப் பொறுத்தவரை....

இது பொதுவாக எல்லாத்துறை மாணவர்களுக்கும் கட்டுரை வகை வினாவாகவே அமைகின்றது. ஒரு சில (கணித - விஞ்ஞானத்துறை உட்பட) துறைகளில் அமைப்புக் கட்டுரை வினாக்களும் இத னுள் அடங்குவது உண்டு.

இங்கே, வினாக்களை மிகவும் தெளிவாக வாசிப்பது, அந்த வினாவில் எந்த விடயங்களை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அறிந்துக் கொள்வது என்பதெல்லாம் முக்கியமாகும். எல்லாவறுக்கும் மேலாக மேலே முன்பு கூறியது போல வினாக்களை சரியாகத் தெரிவு செய்தல் என்பது முக்கியமென்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

பகுதி II இற்கு விடையளிக்கும் போது ஒவ்வொரு புதிய வினாக்களின் விடைகளையும் புதிய பக்கத்தில் தொடங்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். பிரதான வினா இலக்கம், அதன் கீழ் வருகின்ற உப வினா இலக்கங்கள் இந்த உப வினாக்களின் பிரிவுகளின் இலக்கங்கள் இவற்றை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் மாணவர்கள் இலக்கமிடப் பழக வேண்டும்.

மேலும் விடையளிக்கும் போது சில காரணிகளை அல்லது இயல்புகளை எழுத வேண்டி வரும்போது ஒவ்வொன்றையும் ஒன்றன் கீழ் ஒன்றாக கீழே கீழே எழுதி விடையளித்தல் சிறந்தது. விடைத்தாள் உங்களுக்குத் தேவையான அளவு வழங்கப்படும். எனவே விடையளிக்கும் போது விடைத்தாளில் மீதப்படுத்தும் வகையில் சிறிது சிறிதாக எழுத வேண்டாம்.

கட்டுரை வகை வினாக்களுக்கு விடை எழுத தொடங்கும் முன்பு தெரிவு செய்யப்பட்ட வினாவுக்கு விடையளிப்பது தொடர்பாக எவற்றை எழுத வேண்டும் என்ற ஒரு திட்டமிடல் சுருக்கமாக குறித்துக் கொண்ட பின்பே அவற்றின் அடிப்படையில் சுறுசுறுப்பாக மிகுந்த உற்சாகத்துடன் விடை எழுத முயற்சிக்கவேண்டும்.

சில வேளைகளில் ஒரு வினாவுக்கு விடையளிக்கும் போது அது தவறு என நீர் கருதினாலும், அந்த வினாவை வெட்டி விடாது இறுதியாக இணைத்து கட்டிவிடவும்.

#### 7)இரசாயனவியல் மாணவர்களுக்கு

கடந்த பல வருடங்களாக தேசிய ரீதியான இரசாயனவியல் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் பங்குபற்றிய, கற்பித்த அனுபவங்களினூடாக இரசாயனவியல் மாணவர்களுக்கு கூறுவது யாதெனில் பகுதி II இற்கு விடையளிக்க செல்லும் போது அன்று நீங்கள் பின்வரும் விடயங்களை எப்போதும் விடையளிக்கும் போது கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அவையாவன:

* அலகுகள் (Unit) தொடர்பான இடங்களில் விடையளிக்கும் போது அலகுகளுடன் பிரதியிடல் வேண்டும்.
* விடையில் அலகு வரும் எனில் விடையுடன் அலகையும் குறித்தல் வேண்டும்.
* சமன்பாடுகளில் பௌதிக நிலைகளை குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.
* சமப்படுத்திய சமன்பாடுகளை எழுதுக என்ற வினாக்களின் விடைகள் கட்டாயமாக சமப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அந்த சமன்பாடுகள் பின்னங்களாக இருத்தல் கூடாது. (Themo Chemistry தவிர)
* ஒட்சியேற்ற எண்களைக் குறிக்கும் போது + அல்லது - அடையாளம் அவசியம்.
* உய்த்தறிக என வினா அமையும் போது காரணங்களை எழுதி விடையளிக்க முயற்சிக்க வேண்டும்.

இவற்றை மிகக் கவனமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

### 8. பக்க ஒழுங்கும், ஒப்படைத்தலும்

மாணவர்கள் விடையளித்த வினா ஒழுங்கின்படி விடைத்தாள்களில் தெளிவாக மேல் மூலையில் பக்கமிடுவது நல்லது. இவ்வாறு பக்கமிட்டு விடையளித்த ஒழுங்கின்படி அவற்றை ஒழுங்காக சுட்டெண் என்பவற்றையும் மீண்டும் சரி பார்த்து உறுதியாக கட்டிவிடுதல் வேண்டும். தெரிவு செய்து விடையளித்த முன்னுரிமை ஒழுங்கின்படி எல்லா விடைத் தாள்களும் சேர்த்து சரியாக கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்பு உங்கள் நோக்குநர் கேட்கும்போது ஒப்படைத்துவிடுக.

பரீட்சை முடிந்து வெளியே வரும் போது சக மாணவர்கள் விடைகளைப் பற்றியும் விடைத் தெரிவுகளைப் பற்றியும் கதைக்கக் கூடும். தயவு செய்து இறுதிப் பாடம் முடியும் வரை முடிவடைந்த பாடங்களுக்குரிய விடைகள் பற்றியோ, விடைத் தெரிவுகள் பற்றியோ அறிய முயற்சிப்பது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல. இவை உங்களின் மனநிலையில் ஆர்வத்தில் பாதிப்பை உண்டாக்கக் கூடும். எனவே உடனடியாக விடைகளின் சரி/ பிழை பற்றி அறிய முற்படுவது நல்லதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.மாணவச் செல்வங்களே நடைபெற உள்ள பரீட்சைகளுக்கு சிறப்பாக தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து நிறைவாக்குகின்றேன். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் விண்ணப்பங்களை விநியோகிக்க தவறிய நான்கு கிராம அலுவலர்கள் இடமாற்றம்

## நுவரெலியா மாவட்டச் செயலர் அதிரடி

நுவரெலியா,ஓக.7

வாக்காளர் பெயர் பதிவிற்கான விண்ணப்பங்களை உரிய முறையில் விநியோகிக்கத் தவறிய காரணத்தால் நுவரெலிய மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நான்கு கிராம சேவையாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று நுவரெலிய மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாக்காளர் பெயர் பதிவிற்கான விண்ணப்பங்களை உரிய முறையில் விநியோகிக்காமை தொடர்பில், எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக ஹற்றன் பிரதேசத்தின் நகர்புறங்களிலிருந்து இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன்படி குறித்த கிராம சேவையாளர்கள் சேவையில் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதற்குப் பதிலாக வேறு அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்துமாறு உத்தரவிட்டுள்ளேன். இது தொடர்பாக அம்பகமுவ பிரதேச செயலாளருக்கும் அறிவித்துள்ளேன். - இப்படி அவர் தெரிவித்துள்ளார். (ளி)

# பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர் விரிவுரைகளுக்கு செல்லத் தடை விதிப்பு!

கண்டி,ஓக.7

பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டனர் என அடையாளம் காணப்பட்ட இரு மாணவர்களுக்கு விரிவுரைகளுக்குத் தடை விதித்துள்ளது பல்கலைக்கழக ஒழுக்காற்றுக்குழு.

அத்துடன், இவர்கள் மீதான விசாரணைகளை ஒழுக்காற்றுக்குழு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை,பகிடிவதையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் மேலும் நன்கு மாணவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்டன எனினும், அவர்களுக்கு விரிவுரைகளுக்குத்தடை ஒழுக்காற்றுக் குழுவால் விதிக்கப்படவில்லை. (ளி)

# அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகச் சீர்கேடு குறித்து நடவடிக்கை

## இலங்கைத் தோட்டத் தொழிலாளர் ஒன்றியம் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு,ஓக.07

அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், ஜனவசம, எல்கடுவத்தோட்ட நிறுவனம் ஆகியவற்றில் நிலவும் நிர்வாக சீர்கேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரியும் - அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தரக் கோரியும் - இலங்கைத் தோட்டத் தொழிலாளர் ஒன்றியத்தின் பொதுச்செயலாளரும், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவருமான எஸ்.இராமநாதன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், ஜனவசம, எல்கடுவதோட்ட நிறுவன தோட்டங்கள் அனைத்தும் அரச நிர்வாகத்தின் கீழ் நடத்தப்பட்டுவரும் தோட்டங்கள், இவை இந்நாட்டின் தேசிய சொத்துக்களாகும். இவை இன்று கிரமமான முறையில் அழிவுக்குள்ளாகி வருகின்றன. இத்தோட்டங்கள் முறையாகப் பராமரிக்கப்படாததால் காடுகளாக மாற்றமடைந்து வருகின்றன. முறையாக கடைபிடிக்கப்பட்டு வந்த பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைகள் கைவிடப்பட்டுள்ளன.

தோட்டங்களுக்கு முறையாக உரம் இடப்படாததால் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தங்கந்தை, உன்னஸ்கிரிய, ஹாகல, பிட்டகந்த ஆகிய தோட்டத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பிட்டகந்தை தோட்டத் தொழிற்சாலை மின்சார கட்டணம் செலுத்தப்படாதக் காரணத்தாலேயே மூடப்பட்டுள்ளது. தற்போது சுமார் 15 பிரிவுகளின் தேயிலையை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் 'மிட்லண்ட்' மற்றும் 'கெலாபோக்க' போன்ற முக்கியமான பெரிய தோட்டத் தொழிற்சாலைகளும் பழுது பார்க்கப்படாத தால் அவை எந்த நேரத்திலும் மூடப்படும் விளிம்பில் உள்ளன.

இத்தோட்டங்களையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்குரிய சேமலாப நிதிப்பணம், சேவைகாலப்பணம் போன்றவை வருடக்கணக்காக செலுத்தப்படாமலுள்ளது. எனவே, இவற்றை கவனத்தில் கொண்டு இவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோருகின்றேன். - இப்படி அந்த கடிதத்தில் உள்ளது. (ளி)




# மஸ்கெலியா மொக்கா தோட்டத்தில் வாரம் மூன்று நாள்களுக்கே வேலை

## தொழிலாளர்கள் விசனம்

நுவரெலியா,ஓக.7

மஸ்கெலியா பிளான்டேசனுக்குச் சொந்தமான மொக்கா தோட்டத்தின் நான்கு பிரிவுகளில் உள்ள தொழிலாளர்களுக்கு அண்மைக் காலமாக வாரத்தில் மூன்று நாள்கள் மட்டுமே வேலை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலையைத் தரமுயர்த்தி ஐ.எஸ்.ஓ. தரச்சான்று பெறும் நடவடிக்கையில் நிர்வாகம் ஈடுபட்டு வருவதாலலேயே தமக்கு வேலை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன எனத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தொழிலாளர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேயிலைச் செடிகளில் கொழுந்துகள் அதிக அளவில் இருந்தபோதும் எமக்கு வேலை வழங்க தோட்ட நிர்வாகம் மறுக்கின்றது.

கடந்த காலங்களில் பச்சை கொழுந்துகளை அரைப்பதற்காக ஏனைய தோட்டங்களில் உள்ள தேயிலை தொழிற்சாலைக்கு நிர்வாகம் அனுப்பிவைத்தது.

தற்போது ஏனைய தோட்டங்களிலும் அதிக அளவு கொழுந்துகள் வளர்ந்துள்ளன. அதனால் அங்கு மட்டுமே அரைக்கப்படுகின்றன. பிற தோட்டத் தேயிலை கொழுந்தை ஏற்க மறுக்கின்றன. இதனால் நாம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளோம். இப்படி தொழிலாளர்கள் தெரிவித்தனர்.(ளி)

# செல்போன்களில் ஆபாசப்படங்கள் பதிப்பித்துக் கொடுத்த இருவர் கைது

நுவரெலியா,ஓக.7

வீடியோ நிலையம் என்ற போர்வையில் செல்போன்களில் ஆபாசப்படங்கள் பதிப்பித்து வழங்கிவந்த இருவர் நுவரெலியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா பஸ்நிலையத்திலிருந்தே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கே இவ்வாறான காட்சிகள் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மலையகப் பகுதியில் இவ்வாறான பல நிலையங்கள் இயங்கி வருகின்றன எனத் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவையாவும் விரைவில் முற்றுகையிடப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ளி)

# ரூபா 90 கோடி நிதி ஒதுக்கீட்டில் கிழக்கில் நீர்ப்பாசன அபிவிருத்தி

திருகோணமலை,ஓக.7

'மஹிந்த சிந்தனை' வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் நீர்ப்பாசன அபிவிருத்திக்கென 90 கோடி ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

''ஒவ்வொரு மாவட்டத்தின் நீர்ப்பாசன அபிவிருத்திக்குமாகத் தலா 30 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலமாக குளங்கள், கல்வாய்கள், வாய்க்கால்கள் என்பன துரிதமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன'' - என கிழக்கு மாகாண நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை கூறினார்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பாகுபாடு இன்றி நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பயனடையக்கூடிய விதத்தில் கிழக்கு மாகாணத் திலுள்ள மூன்று மாவட்டங்களுக்கு இந் நிதி சமமாகப் பங்கிடப்பட்டு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

''நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும்போது மத்திய மாகாண அரசு என்ற வேறுபாடு பார்க்க முடியாது. இத்திட்டங்கள் முழு நாட்டிற்கும் முக்கியமானவை.

நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள் என்பவற்றைப் புனரமைப்புச் செய்வதன் மூலமாக கிழக்கு மாகாணத்தில் விவசாய உற்பத்தி அதிகரிக்கும். இதுவரை செய்கை பண்ணப்படாதுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் மீண்டும் செய்கையை ஆரம்பிக்க முடியும்'' - என்று அமைச்சர் மேலும் கூறினார்.

புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ளி)




## கிணற்றுக்குள் இருந்து கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் காலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, பெரியகல்லாறு பிரதேச கிணறு ஒன்றிலிருந்து விசேட அதிரடிப் படையினரால் இக்குண்டு மீட்கப்பட்டது.

பெரியகல்லாறு முருகன் கோவிலுக்கு அருகிலுள்ள வீடொன்றை அதன் உரிமையாளர் துப்புரவு செய்தபோது கைக்குண்டு ஒன்று கிணற்றில் இருப்பதைக் கண்டார். இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து விசேட அதிரடிப்படையின் களுவாஞ்சிக்குடி பொறுப்பதிகாரி ஐ.பி.மாரப்பன தலைமையில் சென்ற குழுவினர் குண்டை மீட்டனர்.

# காரைதீவு பிரதேச சபை புதிய இடத்துக்கு மாற்றம்

அம்பாறை,ஓக.7

காரைதீவு பிரதேச சபைப் பணிமனை கடந்த புதன்கிழமை முதல் நகரிலுள்ள பொது நூலகக் கட்டடத்தின் மேல்மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தின் கீழ் தளத்தில் இப்பணிமனை இயங்கி வந்தது. கடந்த நான்கு வருட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த இப்பணிமனை தற்போது சபைக்கு சொந்தமான நூலகக் கட்டடத்தின் ஒரு பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதேசமயம், பிரதேச சபைப் பணிமனைக்கென நிரந்தரக் கட்டடம் அமைக்கும் நோக்கத்துடன் தேவையான செயற்பாடுகளில் தவிசாளர், உபதவிசாளர் உள்ளிட்டோர் ஈடுபட்டு வருகின்றனர்.

பொது நூலக மேல் தளத்தில் இனிமேல் பொது மக்கள் பிரதேச சபை தொடர்பான தமது நடவடிக்கைள மேற்கொள்ளலாம். இப்பொபது நூலகம் காரைதீவு பிரதான வீதியில் பொதுச் சந்தைக்குப் பின்னால் அமைந்துள்ளது.

# அதிகரித்த கொடுப்பனவை உடன் வழங்க

## அம்பாறை ஆசிரிய உதவியாளர்கள் வலியுறுத்து

அம்பாறை,ஓக.7

கிழக்கு மாகாண சபையினால் ஆசிரிய உதவியாளர்களுக்கு கடந்த பெப்ரவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட மூவாயிரம் ரூபா கொடுப்பனவை அம்பாறை மாவட்ட ஆசிரியர் களுக்கு உடன் வழங்குமாறு கிழக்கு மாகாண ஆசிரிய உதவியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு இந்தக் கொடுப்பனவைத் தாமதியாது உடன் வழங்குமாறு சங்கம் கேட் டுள்ளது.

கிழக்கு மாகாண அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 02/cm/09/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட ஏனைய வலயக் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் ஆசிரியர் உதவியாளர்களுக்கு பெப்ரவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் அக்கரைப்பற்று, சம்மாந்துறை வலயங்களில் இக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகக் கணக்காளரிடம் சங்கம் வினவியபோது கொடுப்பனவை வழங்க முடியாது என்று மறுத்துள்ளார். எனவே இவ் விடயத்தில் மாகாணக் கல்வி அமைச்சும் மாகாணக்கல்வித் திணைக்களமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சங்கம் கேட்டுள்ளது.

இம்மாதச் சம்பளத்துடன் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவையும் சேர்த்து வழங்குமாறும் சங்கம் கோரியுள்ளது. (ளி)

# டெங்கு ஒழிப்பை வலியுறுத்தி சம்மாந்துறையில் ஊர்வலம்

அம்பாறை,ஓக.7

டெங்கு ஒழிப்பு தொடர்பாகப் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நேற்றுமுன்தினம் சம்மாந்துறைப் பாடசாலைகளின் குருளைச் சாரணர்கள் ஊர்வலம் நடத்தினர்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனை இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தது.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் ஒரு பகுதியாக இடம்பெற்ற இந்த ஊர்வலத்தை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் தொடக்கி வைத்தார்.

சம்மாந்துறை வலயப் பாடசாலையைச் சேர்ந்த 350 குருளைச் சாரணியர்கள் பல்வேறு பட்ட பதாகைகள் மற்றும் சுலோக அட்டைகளுடன் ஊர்வலத்தில் பங்குபற் றினர்.

'டெங்கை ஒழிப்போம் சுகாதாரத்துடன் வாழ்வோம்' என்ற கோஷத்துடன் ஊர்வலத்தில் கலந்துகொண்ட சாரணர்களுக்கு சனச அபிவிருத்தி வங்கி இனிப்பு களை வழங்கியது.

உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம். ஹுஸைன், சாரணிய உதவி ஆணையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா, எம்.எம். மன்சூர், கே. இராசரெத்தினம் ஆகியோர் முன்னிலையில் சம்மாந்துறை அல் - மர்ஜான் மகளிர் கல்லூரியில் ஊர்வலம் ஆரம்பமாகி ஒரு மணி நேரம் வரை நடைபெற்றது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலையின் தவப்புதல்வர் கதிரவேலு அருமைநாயகம்



சி.வை.தாமோதரம்பிள்ளை (1832 -1901) 'சித்தாந்த வித்தகர்' மு.ஞானப்பிரகாசம் (1911 - 1996 ), பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி (1922 - 1977), பண்டிதர் கலாநிதி மு.கந்தையா முதலான பேரறிஞர்களின் வரிசையில் வைத்து மதிக்கத்தக்கவர் அமரர் எஸ்.கே.அருமைநாயகம் (1939 -1983) அவர்களாவர்.

ஏழாலை அமெரிக்கமிஷன் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். பேராதனைப் பல்கலைக் கழகத்திலே வரலாற்றுப் பாடத்தைச் சிறப்பாகக் கற்று விசேட சித்தி பெற்றவர். ஆரம்பத்திலே யாழ்ப்பாணக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். பின்னர் சில காலம் கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களிலே துணை விரிவுரையாளராகப் பணிபுரிந்துவிட்டு, நீண்டகாலம் இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சிரேஷ்ட வரிமதிப்பீட்டாளராகக் கடமையாற்றினார். இவ்வாறு தமது தொழிற் பணிகளுக்கிடையிலே அவரால் மேற்கொள்ளப்பட்ட எழுத்தாக்கப்பணிகள் தாம், அவர் மறைந்து 27 ஆண்டுகளாகியும் அவரை நினைவு கூரச் செய்கின்றன. இவருடைய ஆக்கங்கள் அக்கால சஞ்சிகைகளிலும் மலர்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் ''சிந்தனை'' எனும் சஞ்சிகை ஆரம்பத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து தான் வெளிவந்தது. அக்காலத்திலே அதன் ''நிர்வாகி''ஆக இருந்து பலரை எழுத ஊக்குவித்ததோடு தாமும் அதிலே அரியபல வரலாற்று விமர்சனக் கட்டுரைகளை எழுதினார். 'இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை' (சிந்தனை ஏப்ரல் 1967) 'கோல்புறூக் - கமரன் சீர் திருத்தங்கள்' (சிந்தனை ஜனவரி 1968) ''போர்த்துக்கீசரும் கோட்டை இராச்சியமும்' (சிந்தனை ஏப்ரல் 1968) என்பன குறிப்பிடத்தக்கன.கல்வியியல் தொடர்பான கட்டுரைகளைத் தாங்கி பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த 'கல்வி' என்ற சஞ்சிகையில் (1968) வரலாற்று விடை எழுதும் முறை எனும் கட்டுரையினை எழுதினார். இதனுடன் இவரால் எழுதப்பட்ட வரலாற்று மாணவன் கண்ணில் 'குவெய்றொஸ்'(இளங்கதிர் 1961- 1962), 'சுவாமி ஞானப்பிரகாசரும் வரலாற்று ஆராய்ச்சியும்' (தினகரன் 1981.05.17) எனும் கட்டுரைகளும் வரலாற்றுத்துறை மாணவர்களுக்குப் பெரிதும் உபயோகமானவையாகும். இந்து நாகரிகம் கற்கும், கற்பிக்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் கல்வியியல் ஆய்வாளர்களுக்கும் பயன்படத்தக்க கட்டுரைகளை எழுதி யுள்ளார். 'ஆங்கில அரசாங்கமும் சைவசமயக் கல்வியும்' (இளங் கதிர் 1967-1968) 'சைவ சமய விழிப்புணர்ச்சி 19 ஆம் நூற் றாண்டு' (இணுவில் சிவகாமி அம்மன் கோயில் சித்திரத்தேர்ப் பணி சிறப்பு மலர் -1978), 'தேசிய வரலாற்றுப் பின்னணியில் நாவலர்' (நாவலர் நூற்றாண்டு மலர் 1979), 'அநுராதபுரத்தில் இந்து சமயம் - தற்காலம்' (அநுராதபுரம் விவேகானந்த சபை பொன் விழாக்காணும் இராம கிருஷ்ண மிஷன், 'A Brief History of the Ramakrishna Movement in Sir Lanka' (கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் பொன் விழா மலர் 1980), Sir Mutu Coomaraswamy (ட்ரிபியூன்-Tribune 1979) என்பன சிலவாகும்.

## நீத்தார் நயப்புரை

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் தமது 'அருமையான மனிதர் அருமை' (ஈழநாடு 1984) என்ற கட்டுரையிலே இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி ஒரு தொகுப்பு வெளிவரவேண்டுமென அருமைநாயகம் ஆர்வம் கொண்டிருந்ததாக எழுதியுள்ளார். இதன் பிரதிபலிப்பாக திரு.அருமைநாயகம் அவர்களால் 1980 மார்ச் மாதம் நடைபெற்ற தென்னாசியவியற் கருத்தரங்கிலே சமர்ப்பிக்கப்பட்ட 'யாழ்ப்பாணத்திலேற்பட்டசமூகச் சீர்திருத்தம்(1900- 1957) சில அம்சங்கள்' எனும் கட்டுரை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை சுவடிகள் திணைக்களம் முதலானவற்றிற்குச் சென்று பெற்ற அரிய தகவல்களைக் கொண்டு எழுதப்பட்ட சி.வை.தாமோதரம்பிள்ளை தொடர்பான கட்டுரைகளும் (கையேட்டுப் பிரதி) மேற்குறிப்பிட்ட கட்டுரையுடன் சேர்க்கத்தக்கன.

1980-1981 காலப்பகுதியில் தினகரன் பத்திரிகையில் தொடர்ச்சியாக இவரால் எழுதப்பட்ட 'உலக அரசியல்' தொடர்பான விமர்சனங்கள் பலரது கண்களைக் குத்தியிருக்க வேண்டும்.இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளராக (Senior Asst. Registrar) பணிபுரிவதற்கான நேர்முகப்பரீட்சையில் (1983 ஜூலை) தேறியிருந்தார். அதன் பயனையும் இன்னும் அவர் மூலம் எமது சமூகம் பெறக்கூடியவற்றைப் பெறமுடியாமற் போனமையும் வருத்தத்துக்குரியன.

அருமைநாயகம் அவர்களது ஆக்கங்களைத் தொகுத்து அமெரிக்காவில் வாழும் அவரது புத்திரரான திரு.யேகேந்திரன் அவர்களின் ஆதரவுடனாவது வெளியிடுவது நன்றிக்குரியது.

**மு.கௌரிகாந்தன்**
**(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியகலாசாலை).**

# மக்களுக்கு வசதியான இடத்தில் தொழில் அலுவலகம் அமையட்டும்

யாழ்.மாவட்ட தொழில் அலுவலகம் (District Labour Office, Jaffna) 2001ஆம் ஆண்டிலிருந்து வீரசிங்கம் கட்டடத்தின் அதி உச்சப்பகுதியான நான்காம் தளத்தில் இயங்கி வருகின்றது. இதில் பிரச்சினைக்குரிய விடயம் என்னவென்றால் இக்கட்டடத்திற்கு 'லிப்ட்' வசதிகள் கிடையாது. எண்பத்து நான்கு படிகளையும் மூச்சுவாங்க ஏறியே நான்காம் தளத்தினை அடைந்து உரிய சேவைகளைப் பெறமுடியும்.

தொழில் அலுவலகமானது ஊழியரின் நன்மைகள் கருதியே தனது தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அடுத்தது ஊழியர் சேமலாப நிதி தொடர்பான விடயங்களில் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. பொதுவாக ஊழியர் சேமலாபநிதியானது இறுதிக்கால சேமம் என்பதால் அதனை மீளப்பெறுவதற்குரிய வழிகாட்டல்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் பெறுவதற்காக வருபவர்கள் சுமாராக ஐம்பத்து ஐந்து வயதிற்கு மேற்பட்டவர்கள் அல்லது பூர்த்தியானவர்கள். இவர்கள் எண்பத்து நாலு படிகளைத் தாண்டுவது என்பது பெரும்பாடு. சீவன்போய் வந்துவிடுகிறது. அதாவது மரணத்தின் விளிம்புகளிலேயே பயணம் செய்கிறார்கள்.

**மக்கள் மன்றம்**

மேற்கூறிய விடயம் தொடர்பில் முக்கியமான சம்பவம் ஒன்றையும் சுட்டவல் பொருத்தம். 2006ஆம் ஆண்டு அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றி ஐம்பத்துஐந்து வயதினைப் பூர்த்திசெய்த மல்லாகத்தினை முகவரியாகக்கொண்ட ஒருவர் (உயர் இரத்த அழுத்த நோயாளி) ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப் படிவம் பெறுவதற்கு யாழ்.மாவட்ட தொழில் அலுவலகம் வந்து எண்பத்து நான்கு படிகளைத் தாண்டி நான்காவது தளத்திலேயே உயிரை மாய்த்துக் கொண்டார். இத்தனைக்குப் பிறகும் அந்த அலுவலகம் அதே இடத்தில் இயங்கி வருவதுதான் வேதனைக்குரிய விடயம். இது தொடர்பில் உதவித் தொழில் ஆணையாளரை தொடர்பு கொண்டால் பொருத்தமான இடம் கிடைக்கவில்லை. விரைவில் புதிய கட்டடம் கட்டுவோம் என்றுதான் பதில் வருகின்றது.

பொதுமக்கள் சேவைகள் தொடர்பில் அவரது காலடிக்குச் சென்று சேவை செய்வதே அதன் தாரக மந்திரம். எனவே இதனை நினைவிற் கொண்டால் சாக்குப் போக்குகள் சொல்லிக் கொள்ளத் தேவையில்லாமல் பொருத்தமான இடத்தினை பார்த்திருப்பார்கள். இவ்விடயத்தில் எமது மாண்புமிகு சமூகசேவைகள் அமைச்சர் கூட கருத்தெடுக்காமல் இருந்தது கூட மனவேதனை தரும் விடயமாகும். காலம் தாழ்த்தாமல் விரைந்து இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்கள் ஒருமித்து முயற்சிக்க வேண்டும்.

சோதிநாதன்-சண்டிலிப்பாய்


# கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் (விசேட விலையில்) 16.08.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே: 021 222 6944

நெல்லியடி பஸ்நிலையம்/கிளிநொச்சி: பதிவு செய்ய லாம். தொ.பே: 0774656377

ரூட்டி பாம் வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம். தொ.பே: 021 321 [illegible]

குறிப்பு: (தீவனம், மருந்து என்பன விசேட விலையில் பெறலாம்)


# 'வாசனா சம்பத' சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,ஓக7

தேசிய லொத்தர் சபையின் 'வாசனா சம்பத' 829ஆம் இலக்க சீட்டிழுப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன. 'J' என்ற ஆங்கில எழுத்தும் 02/13/23/56 என்ற இலக்கங்களும் 58 என்ற போனஸ் இலக்கமும் அதிஷ்டத்துக்கு உரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. முதலாம் பரிசாக 4 இலக்கங்களைச் சரியாகக்கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2பேருக்கு தலா 10லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டாம் பரிசாக 3 இலக்கங்களையும் போனஸ் இலக்கத்தையும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4 பேருக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கவுள்ளது.

மூன்றாம் பரிசாக 3 இலக்கங்களை மட்டும் சரியாகக்கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 286 பேருக்குத் தலா 2ஆயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கவுள்ளது.

நான்காம் பரிசாக 2இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,639 பேருக்கு தலா 100 ரூபா பரிசாகக் கிடைக்கவுள்ளது.

ஐந்தாம் பரிசாக ஒரு இலக்கம் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 205, 370 பேருக்குத் தலா 20 ரூபா பரிசாகக் கிடைக்கவுள்ளது.

ஆறாம் பரிசாக 'J' என்ற ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருப்போருக்கு தலா 20 ரூபா பரிசாகக் கிடைக்கவுள்ளது. (6)

# மக்கள் முகம்



கொழும்பு பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்தின் ஆடிவேல் திருவிழாவின்போது 'கலாசிகாமணி' பட்டம்சூட்டி கே.கே.சுப்பிரமணியம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

தமிழகத்தில் இருந்து வருகை தந்திருந்த தவில் மேதை சுப்பிரமணியம் இவருக்கு மாலை அணிவித்துப் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

லண்டன், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று கலை உலகுக்கு ஆற்றிய சேவையினைப் பாராட்டியே இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (9)



சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற நயினமார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சி அம்பாள்) ஆலய வருடாந்த கொடியேற்றத் திருவிழாவின்போது அடியவர் ஒருவரால் தவறவிடப்பட்ட பெறுமதிமிக்க தங்க ஆபரணத்தை ஆலயத்தில் தொண்டாற்றிக் கொண்டிருந்த மன்மதராஜலிங்கம் மதுஷன் என்பவர் கண்டெடுத்து உரியவரிடம் கையளித்துள்ளார். இவரது இந்த நற்செயலைப் பாராட்டிய பொருளைத் தவறவிட்ட அடியார் சிறுசன்மானமும் இவருக்கு வழங்கிக் கௌரவித்தார்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வினாசித்தம்பி அப்புத்துரை**

(பரந்தன் பாம்பு காமம், ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தா)

மண் மகிழ 13★12★1936

மண் நெகிழ 17★08★2009

ஸ்ரீநாகபூஷணி அம்மனின் பக்தராய்
பக்தி நெறி நின்ற அன்பனே
அன்றலர்ந்த தாமரை போல் உங்களோடு
மனமகிழ்ந்து வாழ்ந்த நாம்
இன்று எம்மோடு நீங்களின்றி
மனங்கலங்கி வாடுகிறோம் ஐயா....
உங்கள் பாதங்களில் சொரிகிறோம்
எங்கள் அன்பு மலர்களைக் காணிக்கை மலர்களாக

பிரிவால் துயருறும்:
5/4, இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். (101558)
பரிவுகொண்ட உறவுகள் பேத்தியார் பரமேஸ்வரன்-தாட்சா, அரி, நர்ஷி.

# மரண அறிவித்தல்

**வைரமுத்து கதிர்காமநாதன்**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, வவுனியா, ஹற்றன், டிக்கோயா நகரசபைகள்)



அச்சுவேலி, வளலாய் மேற்கைப் பிறப்பிடமாகவும்வருணனைவசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கதிர்காமநாதன் 03.08.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் நல்லதம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும் காவேரி (Canada), கங்காதரன் (Canada), யமுனா (Canada), சேது, சிவதரன் (Canada), பவானி (Australia), திருவேணி ஆகியோரின் அன்புத் தந்தையும் வீரசிங்கம் (Canada), காந்தினி (Canada), கருணாநிதி (Canada), சிறீகாந்தன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், காரைநகர் பிரதேசசபை), வினோதினி (Canada), ஞானேந்திரன் (Australia), அன்ரன் சுமிலஸ் (GIS Assistant, The HALO Trust) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற சன்னதிநாதன் மற்றும் சிதம்பரநாதன் (இந்தியா), கந்தசாமி (Rtd A.C.L.G., வவுனியா, உதவிப் பணிப்பாளர் உள்ளூராட்சித் திணைக்களம்), இராஜேஸ்வரி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற முத்தம்மா மற்றும் சிவசோதி, சரோஜினிதேவி, தியாகராஜா (Canada), சற்குணராஜா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), வரதராஜா (இளைப்பாறிய தபால் அதிபர்), கந்தசாமி தவமணி தேவி, ஸ்ரீகனகசபேசன் மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் கஜன், தாரகா, தர்ஷன், மதுஷன், கிரிஷன், கௌசிகன், கௌதமன், ஹம்சிகா, துதீசன், காண்கிகா, தரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குளப்புள்ளிவிராய் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சன்னதி வீதி, வருணன், அச்சுவேலி. (101529)
தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் கிடைக்கும் இடம்

'ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது' என்று ஒரு பழமொழி உண்டு. இது நம் கல்விக்குப் பொருந்துவது போல் வேறு எதற்கும் பொருந்துமா என்று தெரியவில்லை.பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டங்களால் உருவாக்கப்படும் நம் இளைஞர்கள், வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுகொடுக்க முடியாமல் படுகிற பாடு....அப்பப்பா...!

அதனால் தான்' நிறைய ஞானத்தைப் புத்தகங்களில் தேடாதே... ஞானியிடம் பாடம்படி; ஞானியைப் படி' என்று வழிகாட்டுகிறான் கண்ணன். சட்டம் படிக்கிறோம் என்ற ஆங்கில மேலாண்மையுடன் இருந்த நரேந்திரனுடைய கல்வி அறிவு, பள்ளிக் கூடத்தின் படி மதிக்காத கிராமத்துக் கிழவனின் பெருஞானத்துக்கு முன்பு மண்டியிட்டது. இது வங்காளத்தில் நிகழ்ந்த வரலாறு...

பகவான் இராமகிருஷ்ணர் விவேகானந்தரை அழைத்து ஒரு முறை கேட்டார்....

''நரேன் ... நீ ஒரு ஈயாகப் பிறந்து, ஒரு கிண்ணம் நிறைய அமிர்தம் இருந்தால் எப்படி உண்பாய்?''

'ஏன் ? ஆறுகால்களாலும் கிண்ணத்தின் விளிம்பை எச்சரிக்கையாகப் பிடித்துக் கொண்டு, வயிறுமுட்ட அமிர்தத்தை உண்ணுவேன்!' பதில் தந்தார் நரேந்திரர்.

'என் ஆறு கால்களாலும் எச்சரிக்கையாகப் பிடித்துக் கொண்டு என்கிறாய்?'

உள்ளே விழுந்தால் மரணம் வந்து விடுமே!' என்றார் விவேகானந்தர்.

கலகல என்று சிரித்த குருதேவர்,'அதுதான் அமிர்தமாயிற்றே! முதல் துளி உள்ளே போனதும் மரணம் வராதே.... விழுந்து புரண்டாலும் ஆபத்தில்லையே.... என்று விளக்கம் கூறினார்.

அறிவு வேறு, அனுபவம் வேறு. ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி. தோட்டக்கலை இயலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். பண்ணை ஒன்றின் இயக்குநராகப் பதவி ஏற்றார். கம்பீரமாகக் கை வீசியபடி தோட்டத்தைச்



சுற்றிப் பார்த்தார். ஐம்பதாண்டுக் கால அனுபவம் மிக்க தோட்டப் பணியாளர் கைகளைக் கட்டியபடி பின்னால் வந்தார். அடர்ந்து கிடந்த ருட்டை மரத்தைச் சுட்டிக் காட்டி, 'இதில் இலைகளை எல்லாம் தரிச்சு விட வேண்டும்' என்று உத்தரவு இட்டார்.

சரி என்றார் பண்ணை ஊழியர்.

'நல்ல இலை. எல்லாம் வெட்டி விட்டாத்தான் மாங்காய் நிறைய காய்க்கும் தெரியுமா? என்றார் அதிகாரி.

'எவ்வளவு வெட்டினாலும் மாங்காய் காய்க்காது' சீறி விழுந்தார் முதுகலைப் பட்டதாரி.

'அது இலுப்பை மரம்... அதில் மாங்காய் காய்க்காது' என்றார். அனுபவஸ்தர். அறிவு வேறு.... அனுபவம் வேறு.

சின்ன விடயம் முதல் பெரிய விடயம் வரை நமக்கு குரு என்கிற அங்கீகாரம் அவசியம். ஒரு குருவுக்குத் தேவையான சகல தகுதிகளும் நிரம்பப் பெற்ற இராமானுஜர் பக்குவம் பெறும் பொருட்டு பல்வேறு குருமார்களிடம் படியேறிப் பாடம் கேட்டார். விடயங்களும் விவரங்களும் புத்தகத்தில் இருக்கும். விவேகமும், வைராக்கியமும் ஞானிகள் பக்கத்தில் வரும்.

சுகர் என்ற திருநாமம் உடைய சகதேவர வியாச மகரிஷியின் திருப்புதல்வர். பிறப்பிலேயே சகல ஞானமும் பெற்றவர். அவரது பெருமைக்கு ஒரு நிகழ்ச்சி சொல்கிறேன்.

நீர் நிலையில் நீராடிக் கொண்டிருந்த பெண்கள் வியாச மகரிஷி வருவதைக் கண்டு நாணினார்கள். ஆனால் அவரைக் காட்டிலும் இளைய, வாலிபரான சகதேவர் வந்த போது வெட்கப்படவில்லை. அதிர்ந்து போனார் வியாசர். ''பெண்களே ... வயதான என்னைக் கண்டதும் நாணம் கொள்கிறீர்கள். வாலிபனான என் மகனைக் கண்டு நீங்கள் நாணப்படவில்லையே.... ஏன்? என்றார்.

'பெண்களே என்று எம்மை அழைத்தீர்கள் அல்லவா. அதுவே காரணம்!' என்றார்கள் பெண்கள். 'ஆம்... நாங்கள் பெண்கள் என்ற பேத உணர்வு உம்மிடம் உள்ளது. ஆனால் சுகதேவர் இந்தப் பேத உணர்வு அற்றவர்' என்றார்கள்.

அப்படிப்பட்ட மகான் சுகர். அவரை அழைத்து வியாசர் ஜனகரிடம் சீடனாகப் போகும்படி கட்டளை இட்டார்.... ஏன்? ஒரு குருவின் முத்திரை, அங்கீகாரம் சுகருக்குத் தேவை என்று தீர்மானித்து, சுகதேவரை ஜனகரிடம் அனுப்பினார்.

ஒரு நகரத்தின் ஆடம்பரத்தால் கிராம வாசிக்கும் ஏற்பட வேண்டிய பிரமிப்பு சுகரிடம் தோன்றவில்லை. விசாலமான மாளிகையின் உப்பரிகையில் ராஜ அலங்காரத்துடன் இருந்த ஜனகரைத் தயக்கமின்றி நோக்கினார். சுகர் இருவருக்கும் நடந்த உரையாடலே ஓர் உபநிடதம் போல....

'குழந்தாய் எதற்கு வந்தாய்?'

'ஞானம் பெற!'

'உன்னை அனுப்பியவர் யார்?'

' வியாச முனிவர்'

'வரும் பொழுது கடைத்தெருவில் என்ன என்ன பார்த்தாய்?'

'சர்க்கரைப் பண்டங்கள்'

'வேறு எதும் பார்த்தாயா?'

'பேசிக் கொண்டே சுற்றிவரும் சாக்கரைப் பொம்மைகள்'

'இன்னும் என்ன பார்த்தாய்?'

'இங்கே ஏறிவரும் உறுதியான சாக்கரை மெத்தைப் படிகள்'

'இங்கே என்ன நடக்கிறது?'

'ஒரு சர்க்கரை பொம்மை இன்னொரு சர்க்கரை பொம்மையுடன் உரையாடுகிறது!'

' நீ போகலாம். உனக்கு எல்லா ஞானமும் வந்து விட்டது... என்றார் ஜனகர்.

பாம்பின் கால் பாம்பறியும். ஞானியை ஞானியே அறிவான். நண்பர்களே... ஞானத்தைத் தேடுபவர்கள், ஞானியைத் தேடுவதே முதல் வேலை.

*சுகி. சிவம்*

# ஆபத்தில் உதவி

ஒரு ஆள் தனியா வந்து கொண்டிருந்தான். வழியிலே ஒரு காடு. அதைத்தாண்டி அந்தப் பக்கம் பேயாறுகளும் அங்கே தான் அவங்க ஊர் இருக்கு. இரண்டு போனதால் தனியாக போக பயத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். கொஞ்ச நேரத்திலே இன்னொருவரும் தனியாக வந்து கொண்டிருந்தான். நல்ல வேளை ஒரு துணை கிடைத்தது என நினைத்தான். இவன் என்ன? நீயும் இந்தக் காட்டு வழியா அடுத்த பக்கம் போகனுமா என கேட்டான். அவன் ஆமாம் என்றான். அப்படி என்றால் எனக்கு ஆபத்தென்றால் நீ உதவி செய்ய வேணும், உனக்கு ஆபத்தென்றால் நான் உதவி செய்கிறேன் என ஒப்பந்தம் பண்ணினார்கள். அதன் பின் காட்டு வழியாக புறப்பட்டு சென்றனர்.



கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு பெரிய கரடி அவர்களுக்கு எதிர்தாப்போல வந்தது. அதைப் பார்த்து ஒருவன் கொடுத்த வாக்குறுதியை மறந்து கிடுகிடு என மரத்திலே ஏறிவிட்டான். மற்றவனுக்கு மரமேறத் தெரியாது தனியாளாக கரடியைச் சமாளிக்க முடியாது! திடீரென தரையிலே படுத்து மூச்சை அடக்கி செத்துப் போனவன் மாதிரி கீழே படுத்துவிட்டான். கரடி அவன் பக்கத்திலே வந்து மோந்து பார்த்தது! ஆள் செத்துட்டான்! '' என்று நினைத்து கரடி பிறகு மரத்திலே இருந்தவன் கீழே இறங்கி வந்து படுத்திருந்தவனைப் பார்த்து கரடி உன் காதிலே என்ன கூறியது என்று கேட்டான். படுத்திருந்தவன் ஆபத்துக்கு உதவாத உன் மாதிரியான நண்பனை நம்பாதே என்று சொல்லியது என்றான்.

நட்பு என்றால் ஒருத்தருக்கு ஒருத்தர் உதவியா இருக்க வேணும் அதுதான் நட்பு. ஆபத்தான சமயத்திலே விட்டுச் சென்றால் அதுக்குப் பெயர் நட்பில்லை.

# பொன் மொழிகள்

★ கண்ணால் காணவே முடியாத கடலின் அடிப் பரப்பில் துடுப்பசைக்கும் ஒரு மீனின் வயிற்றில் நூற்றுக்கணக்கான வண்ணங்களை வரைந்து பார்க்கும் உன்னத அழகுணர்ச்சி மிக்க படைப் பின் பேராற்றலை ஒன்றை மற்றொன் றோடு ஒப் பிடுவதன் மூலம் அசிங்கப்படுத்த இந்த மனிதர் களால் மட்டுமே முடிகிறது.

★ மனிதன் இல்லாத உலகத்தில்... மலை, நிலவு, தாமரை, பாலைவனம், சப்பாத்திக்கள்ளி இவை எல்லாமே இருக்கும் ஆனால் இது அழகு, அசிங் கம் என்கிற அபிப்பிராயம் மட்டும் இருக்காது.

★ அர்தமில்லாமல் எதையுமே குவித்து வைக்கும் அசட்டுத் தன்மை நம்மவர்களின் ஒரு வகை மனநோய். வாழ்வை வளமாக வைத்துக்கொள்ள செல்வம் ஓர் இடைக்காலக் கருவியே ஒழிய இறுதி இலட்சியம் அல்ல.

★ ஆசைப்படுவது தவறில்லை. மனிதர்கள் ஆசைப்படுவதால்தான் ஒன்றை அடைகிறார் கள். ஆனால் தன் தகுதி தெரியாமல் ஆசைப்படு வது தவறு... அப்போது அது ஆசையல்ல பேராசை.

★ யார் கெட்ட மனிதன் என்பதற்கு புத்தர் காட்டும் வரையறை அபூர்வமானது, ஆழமானது. அவர் சொல்கிறார் பிறர் பற்றிய அக்கறை எதுவும் இல் லாதவன் கெட்டவன்.

தொகுப்பு: பு.தட்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழைக்காட்டுக் கதைகள்

- கோகுலராகவன் -

கனகப்பா வாயிலிருந்து துணியை எடுத்துக் காட்டினார். கீழ்ச் சொண்டு பிய்ந்து தொங்கிக் கொண்டு இருந்தது.

பிறகு யாழ்ப்பாணம் கொண்டு வந்து ஒரு மாதம் வாட்டில் இருந்துதான் உதடு பொருத்தப் பண்ணினார்கள்.

வண்டில் மாட்டுக்கு பனை ஓலை என்றால் அலாதியாக விரும்பி உண்ணும். நீண்ட மூங்கில் தடிகளை கொண்டு கொக்கைச் சத்தகம் கட்டி பனை ஓலை அறுப்போம்.

பின்னர் இரவு 7 மணிக்கு இதழ் இதழாக கிழிக்கத் தொடங்கினால் அண்ணன்கள் ஒரு பக்கம், அம்மா ஒரு பக்கம், அப்பம்மா ஒரு பக்கம், பப்பா ஒரு பக்கம் ஓலை ''சறார் சறார்'' என்று கிழிபடும் சத்தம் நாதமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்.

பின்னர் கத்தியில் வைத்து சின்னன் சின்னனாக குத்தி மாட்டுக்குத் தொட்டியில் போட்டால் கரும்பு சாப்பிடுவது போல ஆனந்தமாக சப்பி அசைபோடும்.

**கதை இரண்டு பகுதி - 5**



## பனங்காய்க் காலம்

பனைகளுடன் எங்களுக்கு உரிய ஊடாட்டம் மிக அதிகம்.

இந்த நீண்ட கால யுத்தத் தில் மிகப் பாதிக்கப்பட்ட பெரிய குடும்பம் பனைக் குடும்பந்தான்.

எத்தனை ஆயிரம் பனைகள் தறிக்கப்பட்டு விட்டன. ஒரு ஐம்ப தாயிரத்துக்கும் மேல் வரலாம். அல்லது அதற்கு மேல் வரலாம்.

பனைகளைப் பாது காக்க எவரும் நடவடிக்கை எடுக்கவேயில்லை. பச்சிலைப்பள்ளிப் பகுதியில் அழிந்து போன பனைகள், வடலிகள் ஒரு லட்சத்தைத் தாண்டும்.

எங்கள் வீட்டுக்குப் பின்னால் பெரி தாக வளர்ந்த பெண் பனை ஒன்று நின்றது. காலையில் எழுந்து வந்து காலை சூரிய வெளிச்சத்தில் அந்தப் பனையை நிமிர்ந்து பார்த்தாத்தான் எனக்கு மனம் குளிர்மை அடையும். அவ்வளவு நேரான அழகான பனை.

மெதுவாக நடந்து போய் அதன் கீழ் சிறுநீர் கழித்ததால்- இளம் காற்று வீசவும் இதமான சுகமாக இருக்கும்.

என் தங்கை அந்தப் பனைக்கு வைத்த பெயர் '' மூத்திரப் பனை''

''பாவமடா பட்டுப் போய்விடும்''

'' இல்லையடி நல்லாய் காய்க்கும்''ரமணன் சொன்னான்.

'' உதில பனங்காயே நான் பொறுக்கன்''

அம்மா சொல்லுவார் பாதை திறந்த பிறகு வீட்டிற்குப் போனேன். வீட்டின் கூரையை காணவில்லை. அப்பா எங்கள் காணிகளில் தேடித் தேடி தறித்த வைரப் பனைகளால் செய்த கூரை.

எனது நண்பியான பனையைத் தேடிப் பார்த்தேன். அடிக்குற்றியே கிடந்தது.

பழித்த பனையும் இல்லை!
பழித்த தங்கையும் இல்லை!
தறித்து விட்டார்கள்.

(வளரும்)

# கனை கருநும் சாங்கதியும்

(என் சீர்க் கழிநெடிலடி விருத்தம்)

பொலிகையூர் பொன்.சுகந்தன்



பக்கத்து வீட்டுடனே வீரம் காட்ட
பக்கத்துப் பாதையில் குப்பை கொட்டி
பக்கத்து ஊரிலுமே குப்பை சேர்த்து
பாங்காக வண்டியிலே ஏற்றி வந்து
பக்கத்து பாதையில் கொட்டிக் கனகர்
பலசாலி தானென்று காட்டி நிற்க
பக்கத்து வீட்டாரும் அழுது நிற்க
பாட்டனவே கிடந்தாரே டெங்கு வந்து!

(முற்றும்)



வலிமோற்கில் இருக்கும் கேணி

# நமது பெருமை...

# கேணிகள்: அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்...

கூடிய மண்ட பங்கள் சுற்றுப் பின்னா லிருப்பவையாக இருக் கலாம் எனினும் பண் பாட்டு ரீதியாகவும் நீண்ட நெடிய அதன் மரபு காரணமாகவும் அவை மரபுரிமைச் சின்னங்களாக தகைமை பெறுவன.

கோயில்கள் சார்ந்தும் வயல்வெளிகள், தெருக் கரைகளை அண்டியும் பலநூறு கேணிகள்

தொல் இலங்கைக் கலை வரலாற்றினை பயிலும் மாணவர்கள் இலங்கையின் தென் பிராந்தியங்களில் காணப்படும் குட்டம் பொக்குண முதலான நீர்மடுக்குகளைப் பற்றிப் பயில்வார்கள்; அதேபோல இந்தியக் கலை வரலாற்றோடு பரிச்சயம் உடையவர் கள் படிக்கட்டுக் கிணறு முதலான கட்டட ரீதி யாக முதன்மை பெறும் நீரிடங்களை அறிவார் கள். சிலவேளை அவற்றோடு ஒப்பிடும் போது வெளிப்பாட்டு ரீதியாக எம்மிடையே உள்ள கேணிகள் கேணி யோடு எம்மிடையே உள்ளன. இக்கட்டுரை குறிப்பாகக் கோயில்சாராத கேணிகள் பற்றியே அதிகம் பேச முனைகிறது. கோயிற் கேணிகள் அவற்றின் சடங்குப் பின்னணி காரணமாக ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக உள்ளன. ஆனால் வயலோரங் களிலும் தெருக்களிலும் காணப்படும் கேணிகளோ மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதுடன் துரதிஷ்டவசமாக அவற்றுடன் பல தமது இறுதி நாள்களை

# நாட்டியத்தில் நயம்பட வைக்...

(சென்றவாரத் தொடர்ச்சி)

**இந்திர சந்தி–**

இந்திர சந்தி என்பது கிழக்குத் திசை. இத்திசைக்குரிய கடவுள் இந்திரன். வஜ்ரா யுதம் இவரது ஆயுதம். ஐராவதம் இவரது வாகனம். இந்திரராணி சகிதமாய் வீற்றிருக் கும் கிழக்கின் கடவுளைப் போற்றி இந்திர சந்தி கௌத்துவம் பாடப்படும். இந்திர னுக்குப் பிடித்தமான காந்தாரப் பண்ணில் உருவாகி குர்ஜறி இராகத்திலமைந்த பாடல் மிஸ்ரசாபு தாளத்தில் பாடப்படும். சமாதானமும் சாசற்புட வாத்தியமும் இசை வழங்க புஜங்க லலிதமாக ஆடல் அமைக்கப்படும். நாட்டியத்தில் இந்திரனைப் பிரயோகிக்க இரண்டு திரிபதாகக் கையினையும் cross பண்ணிப் பிடிப்பர்.

'' நிருத்தமாம் புஜங்க லலித சுவஸ்திக த்ரிபதாகமா
காந்தார பண் விளங்கிய இந்திர சந்தி கௌத்வமே''

**அக்னி சந்தி:**

அக்னி சந்தி என்பது ஆலயத்தினுடைய தென்கிழக்குத் திசையைக் குறிக்கும் இத்திசைக்குரிய தேவன் அக்னி பகவானாவார். இவர் பஞ்சபூதங்களில் ஒன்றாகி நெருப்பின் கடவுள் என்றும் போற்றப்படுகின்றார். பக்குவதேவி சகிதமாய் இவருக்கும் இவருக்கு பிடித்தமான பண்

**'நாட்டியக் கலா... திருமதி அ.உமாமகே... உடுவில் தெ...**

தொகுப்பு: ஔண்யன்

**வார வசந்தம்**




...லை நேரமான படியால் அந்த மினிபஸ் ஸில் சனநெரிசல் அதிகரித்துக் கொண்டேயிருந் தது. இப்பவெல்லாம் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றினால்

# நல்ல மனம் வாழ்க

போக்குவரத்துப் பொலிஸார் பட்டென்று பிடித்துக் குற்றப்பணம் அறவிட்டு விடுவார்கள் என்ற அச்சம் காரணமாக அந்த வேலைக்கு எந்த பஸ்காரரும் போவதில்லை. அப்பாடா... இதனால் யாழ்ப்பாணத்துக்குள்ளே பயணிக்கும் பயணிகள் தப்பித்துக் கொண்டார்கள் என்று சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

சரி அது ஒரு புறமிருக்கட்டும். நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்றுதானே யோசிக்கிறீர்கள். என்ன வழமைபோல மினிபஸ்காரரின் திருகுதாளங்களைத்தானே சொல்லப் போகிறீர்கள் என்று உங்களுக்குள்ளே ஊகித்திருப்பீர்கள். அப்படியானால் உங்கள் ஊகம் முற்றிலும் தவறு... ஏனெனில் மினிபஸ்காரர்களில் நேர்மைத் தன்மையுடன் சேவை புரிகின்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அன்று காலை மணியிருக்கும் பதறியடித்தபடி ஒரு முதியவர் வந்து அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி வருவதாகவும் தோன்றுகின்றது. இது ஒரு நாகரிகச் சிறப்புடையோர் எனத் தம்மைக் கருதும் ஒரு மக்கட் கூட்டத்திற்கு ஏற்றதல்ல என்ற வகையில் கேணிகள் பற்றிய பிரக்ஞை பூர்வமான கவனிப்போ அவை பற்றிய விவரச் சேகரிப் புகளோ அவற் றின் கால

# ...ருமை மிகுந்த மரபுரிமைகள்


வலிமேற்கில் இருக்கும் கேணி

வெளிப்பாட்டு ரீதியான முதன்மை பற்றிய தான ஒரு ஆய்வும், அதனடிப்படையிலான பேணிப் பாதுகாத் தலுக்கான எந்தவித மான முன் முயற் சிகளும் எம்மிடையே

முயற்சிகள் இல்லை. வேளாண் நாகரிகத்தின் சிறப்புக் குறிகாட்டியான இவை கால்நடைகள் நீர் அருந்துதல், சில வேளை பயிர்களுக்கு நீர் பாய்ச்சுதல் என்பதற்காகப் பாவிக்க பட்டுள்ளன.

## ...யிருக்கும் பண்பாட்டுச் சின்னங்களுள் ஒன்று

இல்லை. பல மூத்த கேணிகளை நாம் தூர்ந்து போக விட்டிருக்கிறோம். வலிகாமம் மேற்குப் பிராந்தியம் இதற்கு நல்ல உதாரணம். வலிகாமம் மேற்கின் நிலப்பரப்பு தெருக்களாலும், வீடுகளாலும் ஏனைய கட்டுமானங்களால் மட்டும் நெய்யப்படவில்லை. அவை வயல் தோட்ட வெளிகளாலும் முக்கிய மாகக் கேணிகள் முதலிவற்றாலும் நெய்யப்பட் டுள்ளன. ஆனால் அவற்றை அந்தப் பிராந்தியத்தின் சிறப்பமைவாகப் பேண

இன்று வேளாண் முதன்மையில் இருந்து நாங்கள் விலகிவந்துவிட்டோம். வயலோடும் கால் நடைகளுடனுமான எமது உறவு மாறிவிட்டது. ஆனால் ஒரு காலம் நாம் வாழ்ந்த வாழ்வு முறையின் வாழும் சான்றுகள் அவை; உலகிலுள்ள வேறு பண்பாட்டவர் கள் போல நாமும் இவற்றை சிறப்பான ஒரு அலசல் மூலமாகவும் சிறப்பு வேலைத்திட்டம் ஒன்றின் மூல மும் பேணிப் பாதுக்காக முயற்சிக்க வேண்டும்.மிக அவசரமாக இது தேவைப் படுகின்றது.***

ம.- திருக்குமரன்

# ...க்கும் நவசந்தி கௌத்துவங்கள்



கொல்லி , இராகம் நாட்டை தாளம் சதுஸ்ர ஜம்பை ஆகும். அதாவது மத்தாவள தாளத்தில் சிருங்கல்லா. வாத்தியமிசைக்க நிருத்தஜானு நிருத்தமாக ஆடலமைக்கப்படும் நாட்டியத்தில் இவரைப் பிரயோகிக்க இடது கையில் காங்கூலமும், வலது கையில் திலிபதாகமும் பிடித்து அசைப்பர்.

**இயம சந்தி:**


அடுத்து இயம சந்தி ஆலயத்தினுடைய தெற்குத்திசையைக் குறிப்பதாகும். இத்திசைக்குரிய கடவுள் இயமன். இவரை காலன் என்றும் கூறுவர்.

**...டியக் கலாவித்தகர்' ...ு.உமாமகேஸ்வரி (B.F.A) ...உடுவில் தெற்கு.**

தண்டாயுதமும் சியாமளதேவி சகிதமுமாக வீற்றிருக்கும் இவரை கௌசிகப் பண்ணிலமைந்த தேசாக்ஸ்ரீ ராகமும் பிருங்கி தாளமும் ( சதுஸ்ர ஏகம்) கொண்ட கௌத்துவப் பாடலுக்கு லலித்த வாத்தியம் இசைக்க இயமனுக்குப் பிடித்தமான தண்ட பாத நிருத்தமாக நாட்டியமமைத்து ஆடுவர். பரத நாட்டிய ஆங்கிகாபிநயத்திலே இயமனைப் பிரயோகிக்க வலது கையில் சூசி முத்திரையும் இடது கையில் பாச முத்திரையினையும் பிடித்து அபிநயிப்பர்.

(தொடரும்)

# பார்த்தீர்களா...? கேட்டீர்களா...?



கடமையில் நின்ற நேரக் காப்பாளரைச் சந்தித்து "தம்பி நேற்றுப் பின்னேரம் நாங்கள் இளவாலை பஸ்ஸில போனனாங்கள் அதில 'பாக்' ஒன்றைத் தவறவிட்டுட்டம்" என்று முகமெல்லாம் கறுத்தோடிப் போயிருக்கக் கூறிக்கொண்டிருந்தார். ஐயா பஸ்ஸின்ர கலர் தெரியுமா? என்று பரிதாபமாகக் கேட்டார் அந்தக் காப்பாளர். "இல்லைத் தம்பி பஸ்ஸில சரியான சனம் அதனால அந்தப் பாக் யாராவது கையிலதான் கிடைச்சிருக்கிக்கும் என்று மீண்டும் அந்த பாக் கிடையாது என்ற நம்பிக்கையீனத்தோடு கூறிக்கொண்டிருந்தார்.

அந்த பாக்கில் என்ன இருந்தது என்று காப்பாளர் கேட்டார். தம்பி அதுக்க ஒரு தொகை பணமும் நகைகளும் இருந்ததடா என்று அழாத குறையாக புலம்பிக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் அதில் இளவாலை பஸ்ஸூம் வந்து நின்றது. அந்த பஸ் 'டிரைவர்' அங்கு நின்ற நேரக் காப்பாளரைக் கூப்பிட்டு 'பாக்' ஒன்றை நீட்டி இதை யாரோ நேற்று எங்கட பஸ்ஸுக்குள்ள தவறவிட்டுட்டு போட்டார்கள். யாராவது வந்து கேட்டால் குடுங்கோ என்று கூறிமுடிப்பதற்குள் அதில் நின்ற முதியவர் தம்பி உதுதாண்டா என்ற பாக் என்று ஓடி வந்தார்.

அப்போதுதான் அந்த முதியவருக்கு உயிரே வந்தது போல் இருந்தது. தனது நகைகளையும், பணத்தையும் சரிபார்த்துப் பெற்றுக்கொண்ட அந்தப் பெரியவர் பஸ் டிரைவரைப் பார்த்து நீ நல்லாய் இருப்பாய் என்று வாழ்த்திவிட்டு நகர்ந்தார்.

இத்தகைய முன்மாதிரியான செயற்பாட்டினை இளவாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 9006 இலக்கமுடைய பஸ் சாரதி செய்திருக்கிறார்.

பார்த்தீர்களா? நீங்களே சொல்லுங்கள் இப்படியானவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? பாராட்டியே ஆக வேண்டும். எமது மண்ணில் மனிதம் செத்துக் கொண்டு போகிறது என்று சொல்லிக் கொண்டாலும் இப்படியானவர்களும் உள்ளார்கள் எனும் போது மனம் ஓரளவு ஆறுதல் அடைகிறது.

-கவிநேசன்-

# பாவம், ராகம், தாளம் = பரதம்

## மெய்ப்பித்த பரத நிருத்திய அரங்கேற்றம்



"துளுக்குவதும் மினுக்குவதும் நாட்டியமாகாது, இசை கேட்டவுடன் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை உயிர் எழுந்து ஆட வேண்டும். அதுவே நாட்டியம்" எனும் நாட்டியமேதை அடையாறு கே.லக்ஸ்மணன் அவர்களின் கூற்றினை நிதர்சனப்படுத்துவது போன்ற உணர்வை தரக் கூடியதொரு நாட்டிய நிகழ்வை அண்மையில் யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் காண முடிந்தமை மகிழ்ச்சியான விடயமே.

கடந்த வருடம் எம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட பாரிய பின்னடைவு நிலைகள் கடந்த 2006 ஆம் ஆண்டுக்கு பின்னான இன்றைய நாள்வரை கலை உலகின் வெளியீடுகளிலும் கனதியான பின்னடைவை ஏற்படுத்தியிருந்தமையை நாம் மறுக்க முடியாது. இந்நிலையில் தற்போது "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என எங்கள் மண்ணின் கவிஞன் மஹாகவி உருத்திர மூர்த்தி கூற்றுப் போல் மீளவும் கலைப்படைப்புக்களின் பிரசவம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

இந்த வரிசையில் கடந்த 11.07.2010 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண பரதகலாகேந்திரம் மாணவியான செல்வி. ஜனனி சிவலிங்கத்தினுடைய நடன அரங்கேற்றம் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துக் கொள்ள வெகு சிறப்பாக அரங்கேறியது.

முதன்மை விருந்தினர் தனது உரையின் போது அரங்கேற்றம் என்பது சில கலைஞர்களுக்கு வெறும் சம்பிரதாயப் பூர்வமான ஒரு சடங்கே ஆகும். ஏனெனில் அவர்கள் இதற்கு முன்னதாகவே பல நூறு அரங்குகளை அழகுபடுத்திய அனுபவம் மிக்கவர்கள். இது போன்றது தான் இன்று நடைபெற்ற பரத கலாகேந்திரம் மாணவி ஜனனி அவர்களது அரங்கேற்றமும் எனக் குறிப்பிட்டது போல பரதகலாகேந்தி ரத்திற்கும் அதன் இயக்குநர் திருமதி வசந்தி குஞ்சிதபாதம் அவர்களுக்கும்இது பெயரளவில் முதலாவது அரங்கேற்றமே தவிர, அவர்களது கலைத்திறனால் முழுமை பெற்ற அரங்குகள் எமது மண்ணில் நிறையவே உள்ளன. இந்தக் கூற்றினை அன்றைய நடன அரங்கேற்ற நிகழ்வினைக் கண்டு களித்த எவரும் மறுப்பதற்கில்லை. விருந்திரனர்களாகக் கலந்து கொண்ட பலரும் தமது வாழ்த்துரைகளின் போதும் இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டி உரையாற்றியிருந்தமையும் இங்கு கவனிக்கற்பாலது.

பரத நிருத்திய அரங்கேற்றத்தை நிகழ்த்தியிருந்த மாணவி செல்வி ஜனனி அவர்களது நடனத்திறன் வெளிப்பாடே பலரையும் மேற்குறித்த கருத்திலான பாராட்டுக்களைப் பரிமாறிக்கொள்ள வழி செய்தது. அதுமட்டுமில்லாமல் இப் பரத நிருத்திய நிகழ்விற்கு அணி செய் கலைஞர்களாக அனைத்துக் கலைஞர்களும் அரங்கிற்கு ஒன்றும் புதியவர்களல்ல. ஒவ்வொரு வரும் தம் துறைகளில் முத்திரை பதித்த புகழ்பூத்த கலைஞர்களாவார்.

குறிப்பாக நடன நிகழ்வைத் தயாரித்து அதனை நெறிப்படுத்திய திருமதி வசந்தி குஞ்சிதபாதம் அவர்கள் எமது தேசத்தின் கலையுலக ஜாம்பவான்கள் பலருடன் இணைந்து பல படைப்புக்களை மேடையேற்றியவர்.மகாகவி வீரமணிஐயரின் நடன ஆக்கத்தில் கண்ணகி, கர்ணன்,பேராசிரியர் நா. சண்முகலிங்கனுடன் கலையின் உயிர்க்கும் மனிதம், கவிஞர் சோ.பத்மநாதனின் ஆக்கத்தில் சிவகாமியின் சபதம், மூதறிஞர் சொக்கனின் உருவாக்கத்தில் நேற்று, இன்று, நாளை, பேராசிரியர் மௌனகுருவின் தயாரிப்பில் மழை, சசிரோ பாதுகா பட்டாபிஷேகம் எனப் பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்து வழங்கிய பெருமைக்குரியவர். இவரது திறனின் வெளிப்பாடு நட்டுவாங்கத்தில் மிகவும் தெளிவாகப் பிரிதிபலித்தது.

அதுபோன்றே நிகழ்வைத் தனது கணீரென்ற குரல் வளத்தால் சிறப்பித்த கலாநிதி ஸ்ரீ தர்சனன் அவர்கள் இசைத்துறையில் அதிசிறந்த ஆற்றல் மிக்கவர். அவரது இனிய குரல் வளத்தில் ஒலித்த அனைத்துப் பாடல்களுமே மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. ஈழத்துக் கலையுலகின் நந்தி என அழைக்கப்படும் மிருதங்க வித்துவான் எஸ். மகேந்திரன் தான், லயஞான குபேரபூபதி தான் என்பதை மிக லாவகமாகத் தனது வாசிப்பின் போது நிருபித்திருந்தார். அவருடன் இணைந்து வாசித்த அவரது மகன் 'கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது போல் அவரோடு இணைந்து மிருதங்க வாத்தியத்தை மிகவும் லாவகமாகக் கையாண்டார் . அவருக்கு மிகவும் பிரகாசமான எதிர்காலமுண்டு. மூத்த வயலின் வித்துவான் ஜெயராமனின் வயலின் இசையும்,ரீங்காரமாய் ஒலித்த புல்லாங்குழல் இசைவேந்தன் வசந்தனின் குழலோசையும் நிகழ்விற்கு மென்மேலும் மெருகூட்டி இந்நிகழ்வை ஆர்வலர்கள் மனதில் நீங்காத நினைவாக இடம்பெற வைத்தது.



கலா ரசிகன்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்

நண்பர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். கலைஞர் களுக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைப்பது தள்ளிப் போக லாம். தொழிலில் கூடுதல் ஆதாயம் பெற புதிய திட்டங்களை செயற்படுத்துவீர்கள். சிலரிடம் முன்வைத்த நிதியுதவி, கடனு தவி கோரிக்கைகள் நிறைவேறும்.

### இடபம்

கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கணவன் மனைவி இடையே சிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். பிள்ளை களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். எதிலும் அவசரம் இல்லாமல் அமைதியாக செயற்பட வேண்டிய நாள்.

### மிதுனம்

எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள். ஒரு வகையில் செய்த செலவுகள் மற்றொரு வகையில் வரும் வரவுகளால் சரியாகும். கண வன் மனைவி இடையே மோதல்கள் உருவாகலாம். உடன் பணிபுரி வோர் அனுசரணையாக நடந்து கொள்வர். நாவன்மை அதிகரிக்கும். நீங்கள் தேடிச் சென்ற நேரத்தில் பார்க்க முடியாத ஒருவரை இன்று எதேச்சையாக சந்திக்கலாம்

### கடகம்

பிள்ளைகள் வழியில் அல்லது வேறு வழியில் மருத்துவச் செலவு களைச் சந்திக்கலாம். விருந்து, விசேடங்களுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். பணிபுரிவோர் மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். தொழில் கூட்டாளிகளிடம் எச்சரிக்கை அவசியம். சிலருடன் வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு உருவாகும்.

### சிங்கம்

பெரிய மனிதர்களின் ஆதரவு, நட்பு கிடைக்கும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகள் பெற்று மகிழ்ச்சி அடைவர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் உறவினர்களை அடையாளம் கண்டு ஒதுங்கிக் கொள்வீர்கள். அரசியல் தொடர்புடையவர்களை நம்பி எந்தக் காரி யத்திலும் இறங்க வேண்டாம். அயலாருக்கு உதவி செய்வீர்கள்.

### கன்னி

மற்றவர்கள் பிரச்சினையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங் கள் எளிதாக செய்து முடிப்பீர்கள். தவறு என தெரிந்தும் சில காரி யங்களைச் செய்ய முற்படுவதன் மூலம் பதற்றம், உண்டாகும். உறவினர்கள் சிலருக்கு பண உதவி செய்வீர்கள். நீங்கள் எதிர் பாராமலேயே சில விடயங்கள் தன்னிச்சையாக நடக்கும்.

### துலாம்

உங்களின் சில செயற்பாடுகளால் மற்றவர்கள் பாதிக்கப்பட லாம். பணிபுரிவோர் அவசர வேலை ஒன்றின் காரணமாக, வழக்கமான பணிகளை நிறுத்திவைக்கலாம் அல்லது விடுமுறை எடுக்கலாம். திடீரென ஏற்படும் உடல் உபாதைகளால் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

### விருச்சிகம்

வியக்க வைக்கும் சம்பவங்கள் நடக்கலாம். வெளியூர் பய ணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். எங்காவது வெளியில் செல்லும் நேரத்தில் உறவினர் ஒருவரை சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்காக சில பொருள்களை வாங்குவீர்கள். உங்களின் சுய தேவைகளை பூர்த்தி செய்ய கணிசமாக செலவு செய்வீர்கள்.

### தனுசு

நண்பர்கள் செலவில் உங்களின் சில தேவைகளை நிறைவேற் றிக் கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும். உறவினர்களிடம் நலம் விசாரிக்கலாம். சக ஊழியர்கள் சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரெனப் பேசலாம்.

### மகரம்

குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். செலவுகளை குறைத்து சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். உறவி னர்கள் சிலரிடம் கைமாத்தாக வாங்கிய பணத்தை திருப்பக் கொடுப் பீர்கள். உங்களுக்கு வேண்டிய நண்பர் ஒருவரைப் பற்றி மற்றொரு நண்பர் குறை சொல்லலாம். இறை வழிபாடு அமைதி தரும்.

### கும்பம்

குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது ஏதோ ஒரு விடயத்திற்காக கடும் கோபம் கொள்ளலாம். வயிறு உபாதைகளை தவிர்க்க கண்ட இடங்களில் சாப்பிடாதீர்கள். வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தை தவிர்க்க வேண்டும். நீங்கள் நேர்வழியில் நடக்க நினைத்தாலும், மற்றவர்கள் உங்களின் மனதை மாற்ற முற்படலாம்

### மீனம்

கோபம், வேகத்தைத் தவிர்த்து பொறுமையாக செயற்பட வேண்டிய நாள். வாகன பயணங்கள் மகிழ்ச்சி, சந்தோஷம் தருவ தாக அமையும். தொல்லை கொடுத்த சிலர் எல்லை விட்டுச் செல்வர். தந்தையின் சில செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். நடப்பது போல தோன்றிய காரியம் ஒன்று நடக்காமல் போகலாம்

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)

**நல்லெண்ணெய் விற்பனைக்கு**
தரமான T.R.C. நல்லெண்ணெய் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு ஒரு போத்தல் 300/=.
தொடர்பு: **ஆஷா பான்சி**
பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214922408, 0776537645

**கணனி விடுமுறைகால வகுப்புகள் ஆரம்பம்**
Course Details

| | | |
|---|---|---|
| Ms Office | - 1 month | - 2000/= |
| DTP | - 1 month | - 3000/= |
| Hardware | - 1 month | - 2000/= |
| Web Design | - 1 month | - 3000/= |
| Graphic Design | - 1 month | - 3000/= |
| Internet & E-mail | - 2 Weeks | - 1200/= |

162, Main Street, Jaffna.
TP:0212221417
Sky Computers(pvt)Ltd.

## கொழும்பு - கண்டி இடையே மேம்பால அதிவேகப் பாதை

கொழும்பு,ஓக.7

கொழும்பிலிருந்து கண்டிக்கு 45 நிமிடங்களில் செல்லக் கூடிய வகையில் மேம்பால அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படும். இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முதற்கட்டமாக 50கோடி ரூபாவை வழங்கியுள்ளது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

முழுத் திட்டத்துக்கும் ஆயிரம் கோடி ரூபா செலவாகும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் போது மக்களின் காணிகள், சொத்துகளுக்குப் பாதிப்பு ஏற்படு வதை மட்டுப்படுத்தும் நோக்கில் இந்த மேம்பால அதிவேக நெடுஞ்சாலை திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. பறக்கும் ரயில் போன்று இந்த அதிவேகப் பாதையின் பெரும் பகுதி பாரிய தூண் களுக்கு மேல் நிர்மாணிக்கப்படவுள்ளது.

- இவ்வாறு அவர் சொன்னார். (சி)




**திருமதி**
**இமெல்டா சுகுமார்**
**(யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர்)**

இளமைத் துடிப்புடன்
உயரிய கல்வித் தகைமையுடன்
அரச அதிபராகப்
பல ஆண்டுகள் அனுபவத்துடன்
யாழ்.மாவட்ட முதல் பெண்
அரச அதிபரான தாங்கள்
கறைபடியா நல்லாட்சிக்கு
உண்மைச் சாட்சியாக
பெண்ணவர் பெருமைக்கு மாட்சியாக
பின்னவருக்கு வழிகாட்டியாக
வலியவர் வாழ்த்து மட்டுமன்றி
வறியவர் வாழ்த்தும் பெற்று
வளமான வாழ்வுடன்
அரச அதிபராக சேவையாற்ற
எமது வாழ்த்துக்கள்

**வாழ்த்துபவர்கள்:**
**நயினாதீவு மகளிர் அமைப்புக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினத்தவர் என்ற குறியீட்டைக் கடந்து தேசிய வீரராகி விட்ட முத்தையா முரளிதரன்

**சிறுபான்மை இனத்தவர் என்ற குறியீட்டுக்கு அப்பால் 'இலங்கையர்' என்ற தேசியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கிறார் கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் உலக சாதனையுடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்ட இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் எனக் கூற விழையும் வகையிலான இப் பத்திக் கட்டுரை இம் மாதம் முதலாம் திகதிய ஞாயிறு லக்பிம பத்திரிகையில் வெளியாகியுள்ளது.**

**ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில்ஹந்துன் நெத்தியால் எழுதப்பட்ட அப் பத்தியின் தமிழ் வடிவம் இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கை, சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் மற்றும் மலாயர் ஆகிய பல்வேறு இனத்தவர்கள் வாழும் ஒரு நாடாகும். ஆனால் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் 'சிறுபான்மை இனத்தவர்' என்ற விதத்திலேயே இந் நாட்டில் கணிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக பெரும்பான்மை இனத்தவர்களாக உயர் இனத்தவர்களாக சிங்கள இனத்தவர்கள் கணிக்கப்படுகின்றனர். இருந்தபோதிலும் பலாபலனாக கடந்த 30 ஆண்டுகள் காலமாக இடம் பெற்ற யுத்தத்தின் குறிப்பிட்டதொரு இனத்தவர் என்ற பேதம் எதுவுமின்றி சகல இனத்தவர்களும் பாதிப்புக்களுக்கு உள்ளாக நேர்ந்தது.

இன்று சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இலங்கைப் பிரஜையொருவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எவவொருவராலும் நினைத்தும் பார்க்க இயலாத உலக சாதனையொன்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார். அது முத்தையா முரளீதரன் என்ற பெயர் கொண்ட, இந் நாட்டின் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் உலக சாதனையொன்றை நிலை நாட்டியிருப்பதாகும். இச் சின்னஞ்சிறு இலங்கைத் தீவை மதிப்பு மிக்க உலக சாதனையொன்றுக்கு உரிமை கோரும் நாடாக ஆக்கும் விதத்தில் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் துறையில் 800 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிச் சாதனை புரிந்துள்ளார் முத்தையா முரளிதரன். அதுவும் உயர் இனம் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் சிங்கள இனத்தவரில் பலர் சிங்கக் கொடியைக் கைகளில் தாங்கி அசைத்துப் பெருமைப்படும் நாட்டின் தென்பகுதி நகரமான காலியில் வைத்தே முத்தையா முரளிதரன் அந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் இலங்கை அணியின் தலைவரும் உயர் இனத்தவருமான குமார் சங்கக்கார உட்பட அணியின் ஏனைய விளையாட்டு வீரர்களும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த முத்தையா முரளிதரன் கிரிக்கெட் விளையாட்டில் தனது உலக சாதனையை நிகழ்த்தியதையடுத்து அவரைத் தமது கைகளிலும் தோள்களிலும் தூக்கி வைத்துத் தாங்கித் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். அந்த வகையில் கிரிக்கெட் விளையாட்டில் இலங்கை அணிசார்பாக முத்தையா முரளிதரன் உலக சாதனையை நிகழ்த்தியவேளையில் அவர் இந் நாட்டின் உயர் இனத்தவர்கள் மத்தியில் தேசிய வீரராக உருவானார். இந் நாட்டின் பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர்கள் முத்தையா முரளிதரன் குறித்துப் பெருமைப்பட்டுக் கொண்டனர். அந்த வகையில் விளையாட்டுத்துறையில் அவர் இலங்கைக்கு உலக நாடுகள் மத்தியில் கீர்த்தியையும் பெருமையையும் ஈட்டிக் கொடுத்த இந் நாட்டின் ஒரு சொத்தாக அமைந்தார். அவர் இந் நாட்டின் தேசிய வீரரொருவராகும் வகையில் சாதனை யொன்றை நிகழ்த்தியதன் காரணமாக, குறிப்பிட்ட மாபெரும் சாதனையில் தாமும் பங்குதாரர்களாகிவிடும் எதிர் பார்ப்புடன் முயற்சிக்கும் சகலரும் அவர் ஒரு சிறுபான்மை இனத்தவர் என்ற தமது ஆழ்மன உணர்வை மறக்கடித்திட இயலும், அதற்கு அவர் இந் நாட்டின் தேசிய வீரராக உலக சாதனை புரிந்ததே காரணமாகும்.

அது முரளிதரன் நாட்டுக்கு ஈட்டித் தந்த உண்மையான வெற்றியாகும். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 800 விக்கெற்றுக்களை வீழ்த்தியதை விடப் பெறுமதிமிக்க தாகும். ஏனெனில் அது தேசிய வாதத்தால் தலை கனத்துப் போனோருக்குப் புகட்டப்பட்டுள்ள நல்லதொரு பாடமாகும். தமிழ் மொழி பேசுபவர்கள் சிறுபான்மை இனத்தவர் அல்ல. அவர்களும் இலங்கையர்களே என்பதை மீள ஒரு தடவை முத்தையா முரளிதரன் என்ற அந்த உண்மையான இலங்கையர் நிரூபித்துள்ளார். 800 விக்கெற்றுக்களைக் கைப்பற்றிய முரளி, தமிழரான அவர் சிறு பொழுதுக்கேனும் தமிழரென்ற அந்த இனவாத உணர்வை அகற்றிவிடத் திறன் பெற்ற முரளி, அதைவிட எமக்குப் பெறுமதி மிக்கவராகிறார். அது, சுழற்பந்து வீச்சொன்றினால் மட்டும் நிகழ்த்திவிட இயலாததொரு சாதனையாகும். அது, மனித மூளையைத் துளைத்துச் சென்று அடிமேல் அடியடித்து மாற்றமுறச் செய்யுமொரு கருத்தியல் யுத்தமாகும். அத்தகைய கருத்தியல் மாற்றமொன்றை ஒரு நிமிடத்துக்கேனும் ஏற்படுத்தி விடுவதென்பது இலேசானதொரு கருமமல்ல. ஆனால் முரளிதரன் ஒட்டுமொத்த நாட்டுக்காகவே (ஒரு நிமிடத்துக்கேனும்) தமிழன் ''சிறுபான்மை இனத்தவன்'' என்ற உணர்வை மாற்றமுறவைத்து நாமனைவரும் இலங்கையர் என்பதை ஞாபகமூட்டினார். அந்தவகையில் முத்தையா முரளிதரன் ஈட்டித் தந்த வெற்றி ஒரு ''சிறுபான்மை இனத்தவனுக்கு'' ஆனதல்ல. இலங்கைக்கே அது உரித்தாகிறது. வெற்றியின் உண்மையான பெறுமதி அங்குதானுள்ளது.

ஆனால் முப்பதாண்டு கால சாபக்கேடான யுத்தத்தின் பின்னரும் கூட, இன்னமும் தமிழ் மொழி பேசும் சகோதர பிரஜை, தமிழ்ச் சகோதரன், ''சிறுபான்மை இனத்தவனே'' தான். அதாவது இலங்கையில் இரண்டாந்தரப் பிரஜையே. முத்தையா முரளிதரன் 800 விக்கெற்றுக்களை வீழ்த்தி சாதனை புரிந்திருந்தாலும் கூட, இன்னமும் இந்நாட்டு அரசமைப்பின் 18 வது விதியில், ''ஸ்ரீலங்காவின் அரசகரும மொழி சிங்கள மொழியே ஆகும்'' என்றுள்ளது. அதன் கீழ் 18-2 வது விதியில் ''தமிழ் மொழியும் கூட அரசகரும மொழியொன்று ஆகும்'' என்றுள்ளது. ஆனால், எத்தகைய தேவை கருதி 'கூட' எனக் கொசுறு வைத்து தமிழ் மொழி இரண்டாம் பட்சமாக்கப்பட்டுள்ளது? என்பது மனதைக் குடைகிறது. தமிழன் என்பவன் ''சிறுபான்மை இனத்தவனே'' என இன்னமும் இந்த நாகரிக மனசுகள் எண்ணுவதே அதற்குக் காரணமாகும். அந்த எண்ணத்தையே சங்கக்கார, முரளி, ஆனல்ட், மஹ்ரூப் என்ற அனைவரும் அணி திரண்டு தோற்கடிக்க வேண்டியுள்ளது. தமிழும் கூட அரசகரும மொழியொன்றே என்பதற்குப் பதிலாக சிங்கள மொழியும், தமிழ் மொழியும் அரசகரும மொழிகளே என்று கூட என்ற அந்தக் கொசுறை நீக்கி, மாற்றியமைத்திட வக்கற்ற இந்தப் பெருமெடுப்பு தேசப்பற்றாளர்கள் தமது அதிகாரப் பேராசைக்காகவே அரசமைப்புத் திருத்தத்துக்குக் கச்சைகட்டி நிற்கின்றனர். இந்நாட்டின் அரசமைப்பு ஆக்கத்தில் சம உரிமை மறுக்கப்பட்டுள்ள போதிலும், முத்தையா முரளிதரன் தமது சுழற்பந்து வீச்சினால் களத்தையே சமப்படுத்தி விட்டுள்ளார். வடக்குத், தெற்கு என்ற பேதமின்றி எட்டுத் திசைகளிலும் தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும் விதமாக மனசுகளைச் சமப்படுத்தி விட்டுள்ளார். புல்மேடாகிப் போன தரைக்குச் சிறு பொழுதொன்றுக் கேனும் அது பெரிதே. மிகப் பெரிதே. முரளி நிகரற்றவராகி விடுவதற்கு அதுவே காரணமாகிறது.

இவ்வளவுக்கும், இன்னுமொரு முரளியும் எம் மத்தியில் உள்ளார். அவர் இந்த முரளிக்கு முற்றிலும் மாறுபட்டதொரு முரளியாவார். எமது கிரிக்கெட் வீரரோ 'டெஸ்ட்' போட்டிகளில் 800 விக்கெற்றுக்களை வீழ்த்தி ''சிறுபான்மையினர்'' என்ற முத்திரையை 'இலங்கையர்' என்ற முத்திரை யாக்கி இலங்கையின் புகழை உலகின் உச்சத்துக்கே தூக்கிவைத்த முத்தையா முரளிதரன் ஆவார். அந்த மற்றயை முரளியோ விநாயகமூர்த்தி முரளிதரன் ஆவார். அவ்வாறில்லாவிடில் கருணா அம்மான் ஆவார். அந்த முரளி இந்த முரளியிலிருந்து முற்றிலும் மாறுபட்டவராவார். அந்தவகையில் முத்தையா முரளிதரன் ''சிறுபான்மையர்'' என்ற முத்திரையை இலங்கையர் என்றாக்கி விட்டிருக்கும் போது, விநாயகமூர்த்தி முரளிதரனோ ''இலங்கையர்'' என்ற இலச்சனையை சிறுபான்மையினர் என்ற இலச்சனைக்கு உள்ளாக்கி இந்நாட்டை அந்த அடிப்படையில் பிளவுபடுத்தி பிரித்து விடுவதற்கு எத்தனித்த ஒருவராகிறார்.

இலங்கையின் நிலப்பிரதேசத்தையே வேலிபோட்டுக் கூறாக்கிப் பிரித்து விடும் ஆயுதப்போரொன்றை இயக்கிச்




சென்றார் அந்த முரளி. இந்த முத்தையா முரளிதரன் தேசப்பற்றாளராகி விடும் போது அந்த விநாயகமூர்த்தி முரளிதரன் தேசத் துரோகியானார். தேசப்பற்றாளரான இந்த முரளியை கிரிக்கெட் இரசிகர்கள் தமது தோள்களில் சுமந்து பெருமிதத்துடன் களத்தைச் சுற்றி வெற்றிக்களிப்பில் வலம் வருகையில், தேசத்துரோகியான அந்த முரளியோ ராஜபக்ஷ அரசின் அமைச்சரொருவராகி அந்த அமைச்சர் ஆசனத்திலமர்ந்து சுகபோகம் அனுபவிக்கிறார். ஆனால், இந்த இருவருக்குமிடையாலான வித்தியாசமோ ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையேயான இடைவெளி - போன்றதாகும். அதற்கமைய முத்தையா முரளிதரன் இந்நாட்டு மக்களின் மனங்களில் வாழும் வீரரே. அமைச்சர் முரளிதரன் துணித்துண்டொன்றின் அளவுக்குக் கூட அனைவரது மனங்களிலும் பெறுமதியற்றுப் போன வெற்றுவேட்டுத் தேசத்துரோகியே. அந்தவகையில், உண்மையான வீரன் எப்போதுமே மக்களின் இதயங்களில் மிளிர்கிறார். துரோகியாலோ , தம்மைத் தூக்கிவைத்துக் கொண்டாடும் ஆட்யாளர் மத்தியில் தற்காலிகமாகவே வசதி வாய்ப்புக்களை ஈட்டிக்கொள்ள முடிகிறது.

அனைவராலும் முத்தையா முரளிதரனைப் போன்று கிரிக்கெட்டில் விக்கெற்றுக்களைக் கைப்பற்ற இயலாது. அதே சமயம் அவரைப் போன்று இலங்கையின் தேசியச் சொத்தாகி விடுவதற்கும் கூட அனைத்துச் சிறுபான்மையினத்தவராலும் இயலாது. அத்தகையோர் சிறப்பியல்புத் தன்மை வாய்ந்தவர்களேயாவர். இலக்கியத்துறையில், விளையாட்டுத்துறையில், கலைத்துறையில் கூட அத்தகையோர் மிக அபூர்வமே. இந்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில் அது பூச்சியமென்றே கூற முடியும். இந்நாட்டு அரசியலில் அந்தளவுக்கு இனவாதத்தலைவர்கள் மலிந்து காணப்படுவதே அவ்விதம் நாம் கூறுவதற்குக் காரணமாகிறது. இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இனவாதத்துக்குப் பதிலாக இலங்கையென்ற தேசிய உணர்வை உச்சத்துக்குக் கொண்டு சென்ற சிறுபான்மையினத்தவர் என்று நன்மதிப்பைப் பெற்ற மற்றுமொரு அரசியல் தலைவர் இந்நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமராவார். அவர் ''சிறுபான்மை இனத்தவர்'' என்ற குறியீட்டைக் கடந்து சென்று இலங்கையர் என்ற தேசியத்தை உச்சப்படுத்தி நின்றதொரு தலைவராவார். முத்தையா முரளிதரனைப் போன்றே அவரும் கூட, ''சிறுபான்மை இனத்தவர்'' என்ற குறியீட்டுக்கு உட்படாது தாம் ஒரு இலங்கையர் என்ற குறியீட்டை சர்வதேசத்துக்கே எடுத்துச் சென்றார். இந்த மண்ணில் நினைவுச் சின்னங்களோ, உருவச்சிலைகளோ நிறுவப்படாதுவிடினும், தேசியக் கொடி போர்த்து கௌரவிக்கப்படாது விடினும், தேசிய நல்லிணக்கத்துக்காகவே ஒற்றுமைக்காகவே அரசியலை முன்னெடுத்துச் சென்று இந்த மண்ணில் பிரபல்யப்படுத்தப்படாமலே அடக்கம் செய்யப்பட்ட மேலும் பல வீரார்கள் இருக்கவே செய்கின்றனர். அந்தவகையில் ரஞ்சிதம் குணரத்னம், எஸ்.எம்.நிஷ்மி போன்று இலங்கைத் தேசியத்துவத்தின் சமிக்ஞைகளான போராளர்கள் இன்னும் பலர் இருந்துள்ளனர். வரலாறு மிகச் சரியாக எழுதப்படும் நாளொன்றில் முத்தையா முரளிதரன் பற்றியும் அதேபோன்று அவர்களைப் பற்றியும் எழுதப்படக் கூடும். அது எதிர்காலத்துக்கு உரிய பொறுப்பாகும்.

எவ்வாறான போதிலும், கழிந்து செல்லும் இன்றைய சந்தர்ப்பத்தில், கறுப்பு ஜூலையின் ஞாபகங்களைக் கொண்டுள்ள இந்த மண்ணில் மேலுமொரு ஜூலை மாதத்திலேயே முத்தையா முரளிதரன் சிறுபான்மையினத்தவர் என்பதற்குப் பதிலாகத் தாம் ஒரு இலங்கையர் என்பதை நிலைநாட்டுவதில் வெற்றிகண்டுள்ளார். அவர் அத்தோடு நின்றுவிடவில்லை. டெஸ்ட் கிரிக்கெட் களத்திலிருந்து விடைபெற்றுச் செல்லும் வேளையில் ஊடகச் சந்திப்பொன்றில் வைத்து இந்நாட்டின் வரலாற்றில் பெரிதும் முக்கியத்துவம் பெறும் செய்தியொன்றையும் அவர் வெளிப்படுத்தினார். இலங்கையின் மக்களான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்ற மக்கள் பிரிவினருக்கிடையில் வேற்றுமைகள் இல்லையெனவும், இந்நாட்டின் அரசியல் வாதிகளே அந்த வேற்றுமையை விதைத்து விட்டவர்கள் என்பதுமே அவர் வெளிப்படுத்திய அச்செய்தியாகும். துடுப்பெடுத்தாட நின்றிருந்தால் டட்லி சேனாநாயக்க முதற் கொண்டு மஹிந்த ராஜபக்ஷ வரையிலான எந்த வொரு அரசியல் தலைவரானாலும் ஒரு கணத்தில் விக்கெற்றைப் பறிகொடுக்கும் பந்து வீச்சாகும் இது. இங்குள்ள ஒரே சிக்கல் முத்தையா முரளிதரன் அதனை இறுதிச் சந்தர்ப்பத்தில் பிரயோகித்துள்ளமையேயாகும். ஆனாலும் இது இலங்கையின் தேசியப்பிரச்சினை சம்பந்தப்பட்ட மிகச் சரியான கருத்து வெளிப்பாடாகும் -சிறப்பான துல்லியமானதொரு பந்து வீச்சாகும்.

இவ்வளவுக்கும், இலங்கை கிரிக்கெட் குழுவின் தலைவர் சங்கக்காரவும் அக் குழுவின் ஏனைய வீரர்களும் முத்தையா முரளிதரன் டெஸ்ட் போட்டிகளில் உலக சாதனையை நிகழ்த்தியமைக்காகவே அவரைத் தோளில் சுமந்து மைதானத்தை வலம் வந்து வெற்றி ஆரவாரம் புரிந்தனர். ஆனால் நாம் முத்தையா முரளிதரனைத் தோளில் சுமந்து மகிழாத போதிலும் இதய பூர்வமாக அவரை வாழ்த்தி நிற்கிறோம். டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளில் 800 விக்கெற்றுக்களுக்கு அப்பாலும் வீழ்த்தி நாட்டுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த சாதனை வீரர் அவர் என்பதே அதற்குக் காரணமாகிறது. அது, அவர் பிறிதொரு முரளிதரனுக்கு முற்றிலும் மாறுபட்டவராக, - பிளவு படுத்திவிட எத்தனிக்கப்பட்ட இத் தேசத்தின் தேசிய ஒற்றுமையின் சின்னமாக மிளிர்வதாலேயே ஆகும். முரளி, தாங்கள் சிறுபான்மையினத்தவர் என்ற குறியீட்டுக்குள் அமையாது அதனை கடந்து சென்று இலங்கையர் என்ற தேசியத்துவத்தை வெளிப்படுத்தி நின்றமையே அதற்குக் காரணமாகிறது.

**தமிழில் - சரா**

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசேவையில் ஐம்பது ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வுபெறும் பெருமைக்குரிய அரசாங்க அதிபர் உயர்திரு. க.கணேஷ் அவர்களின்

# சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்


உயர்திரு.க.கணேஷ் (SLAS -I)

| இருந்து | வரை | வருடம் | மாதம் | சேவை | திணைக்களம் |
|---|---|---|---|---|---|
| 01.06.1961 | 31.03.1963 | 01 | 10 | பொது எழுதுநர் சேவை | கச்சேரி, கொழும்பு |
| 01.04.1963 | 31.01.1966 | 02 | 10 | பொது எழுதுநர் சேவை | கச்சேரி, அம்பாந்தோட்டை |
| 01.02.1966 | 30.09.1970 | 04 | 08 | பொது எழுதுநர் சேவை | கச்சேரி, அனுராதபுரம் |
| 01.10.1970 | 30.09.1971 | 01 | - | பொது எழுதுநர் சேவை | கிராம அபிருத்தித் திணைக்களம், கொழும்பு |
| 01.10.1971 | 28.02.1976 | 04 | 05 | பொது எழுதுநர் சேவை | விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம், கொழும்பு |
| 01.03.1976 | 15.11.1977 | 01 | 09 | பொது எழுதுநர் சேவை | தேசிய விலைகள் ஆணைக்குழு, கொழும்பு |
| 16.11.1977 | 31.10.1978 | - | 11 | பொது எழுதுநர் சேவை | விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம், கொழும்பு |
| 01.11.1978 | 30.06.1979 | - | 08 | இலங்கை நிர்வாக சேவை | - பயிலுநர் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் |
| 01.07.1979 | 30.11.1981 | 01 | 05 | இலங்கை நிர்வாக சேவை | உதவி அரசாங்க அதிபர், செட்டிக்குளம் |
| 01.12.1981 | 09.06.1991 | 09 | 06 | இலங்கை நிர்வாக சேவை | கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளர், திட்டப்பணிப்பாளர் மன்னார் |
| 10.06.1991 | 19.01.1995 | 03 | 08 | இலங்கை நிர்வாக சேவை | அரசாங்க அதிபர், மன்னார் |
| 20.01.1995 | 31.12.2004 | 09 | 11 | இலங்கை நிர்வாக சேவை | அரசாங்க அதிபர், வவுனியா |
| 01.01.2005 | 13.07.2010 | 05 | 07 | இலங்கை நிர்வாக சேவை | அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் |

சேவையிலிருந்து ஓய்வு 13.07.2010

| | |
|---|---|
| பொது எழுதுநர் சேவை | - 17 வருடங்கள் 05 மாதங்கள் |
| இலங்கை நிர்வாக சேவை (மீள் நியமனம் உட்பட) | - 31 வருடங்கள், 08 மாதங்கள் |
| மொத்த சேவைக்காலம் | - 49 வருடங்கள் 01 மாதம் 12 நாட்கள் |

## குருக்களின் ஆசிச்செய்தி



யாழ்.மாவட்டத்தின் நெருக்கடியான காலகட்டங்களில் அயராது விரைவாகவும் வினைத்திறமையுடனும் கருமங்களை ஆற்றி தற்போது ஓய்வுபெற்றிருக்கும் வடமராட்சியின் மைந்தன் திருவாளர் க.கணேஷ் அவர்கள் மக்களால் மிகவும் பாராட்டப்பட்ட, மதிக்கப்பட்ட ஓர் அரசாங்க அதிபராக் கடமையாற்றியுள்ளார்.

இவரது தன்னலமற்ற 'மக்கள்சேவையே மகேசன் சேவை' என்னும் முதுமொழிப்பாதையிலான தடம் பதித்தல்கள் அனைவராலும் விரும்பப்பட்டது. இவர் தனது சேவைக்காலத்தில் துடிப்புடன் சேவையாற்றி யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு வழிசமைத்ததுடன் நல்லாட்சியை உருவாக்கவும் பாடுபட்டார். அத்துடன் சுனாமி போன்ற இயற்கை அழிவுகள் ஏற்பட்டபோதும் போர் அனர்த்தங்கள் ஏற்பட்ட காலங்களிலும் இவரது வினைத்திறமையுடனான சேவை பாதிப்புற்ற மக்களின் மனங்களுக்கு ஆறுதலை அளித்தது.

இவரது அரச கருமத்திற்கு அப்பால் பெரியோரைக் கனம் பண்ணும் பண்பு, ஆன்மீக வழிநாட்டம், எமது பாரம்பரிய நடைமுறைகளை கட்டிக்காக்கும் இயல்பு போன்ற குணநலன்கள் இறைவனால் விரும்பத்தக்கவை ஆசீர்வாதங்களுக்கு உட்பட்டவை.

இத்தகைய இயல்புகளுடைய கனவான் இப்பூமியில் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து மக்களுக்கு மேலும் அரும்பணி ஆற்றவேண்டும் என எல்லாம் வல்ல மாலைச்சந்தி விநாயகரைப் பிரார்த்தித்து ஆசீர் வதிக்கிகின்றேன்.

கிரியா கலாப முத்தாமணி பிரம்மஸ்ரீ
ச.தேவராஜக்குருக்கள்,
பிரதம குரு, மாலைச்சந்தி,
ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்,
அல்வாய்-கரவெட்டி.

## பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



யாழ்.மாவட்ட அரச அதிபராக ஐந்து வருடங்களுக்கு மேலாக அரும்பணி ஆற்றி ஓய்வுபெற்றுள்ள உயர்திரு கந்தையா கணேஷ் அவர்களை கரவெட்டி பிரதேச செயலகத்தினரோடும் மக்களோடும் இணைந்து வாழ்த்துகின்றேன்.

இயற்கை அழிவுகளும் போரின் தாக்கங்களும், இடப்பெயர்வுகளும் எமது மக்களின் வாழ்வாதாரங்களை சிதைத்தவேளை தமது சேவையை நிறைவாக வழங்கி நம்பிக்கை உரம் கொடுத்து நின்ற அவரது சேவை அளப்பரியது. நல்ல ஆயனாகிய ஆண்டவர் யேசுவின் அருளாசீர் இவரை நிறைத்து இவரது பணியையும் வாழ்வையும் வழிநடத்தவேண்டி நிற்கின்றேன்.

அருட்பணி. எமில்போல்
பங்குத்தந்தை, புனித
அந்தோனியார்ஆலயம், நெல்லியடி,
கரவெட்டி.

## பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



அரச சேவைக்கு ஓர் இலக்கணமாக அர்ப்பணிப்புடன் ஐம்பது ஆண்டுகள் சிறப்பாக சேவையாற்றி மக்களின் துயர்துடைத்து வழிகாட்டிய பெருமைக்குரிய அரசாங்க அதிபர் திரு.க.கணேஷ் ஐயா அவர்களின் சேவைநயப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் அரசாங்க அதிபராக இனமதபேதமின்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றி அம்மாவட்ட மக்களின் நன்மதிப்பினைப் பெற்று பெருமையுடன் சேவையாற்றியது எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்துள்ளது. கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நேரம் தவறாமல் பொறுப்புக்களை விருப்புடன் ஏற்று மக்களுக்கு பெரும்பணியாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். அபிவிருத்திப் பணிகளிலும், இடர்முகாமைத்துவ சேவையிலும் மக்களின் இடப்பெயர்வுகள், மீள்குடியமர்வுகள் மற்றும் கலாசாரத்துறை, விளையாட்டுதுறை, ஆன்மீகத்துறையிலும் முழுவிருப்புடன் தன்னை ஈடுபடுத்தி தன்னுடன் பணிபுரியும் உத்தியோகத்தர்களையும் ஒழுங்குபடுத்தி வெற்றி இலக்கினை அடைந்த அவரது அரசபணி அரச சேவையாளர்களுக்கு ஓர் வரலாற்றுப்பாடமாக அமைந்துள்ளது. அவரின் தூய எண்ணங்களும், உயரிய சிந்தனைகளும், வினைத்திறனும் பயனுறுதியுமுடைய நல்லாட்சியுடன் கூடிய அரச சேவையை வழங்குவதற்குக் காரணமாக இருந்தன. அரச சேவையாளர்கள் அர்ப்பணிப்பு, வெளிப்படுதன்மை, வகைகூறல் என்பவற்றினை அடித்தளமாகக் கொண்டு சேவையாற்ற வேண்டுமென்பது அவரது பெருவிருப்பாகும்.

அவரின் சேவையால் சகல பிரதேச மக்களும் நன்மையடைந்துள்ளார்கள். இச்சந்தர்ப்பத்தில் கரவெட்டி பிரதேசத்திற்கு கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, குடிநீர் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி, இடம்பெயர் மக்களின் சேவைகள், மீள்குடியமர்வு, கலாசாரம், ஆன்மீகம், விளையாட்டு அபிவிருத்தி என சகல துறைகளுக்கும் அவராற்றிய சேவையினை நன்றியுடன் நினைவு கூருவதுடன் அவர் இன்னும் பல ஆண்டுகள் தேகாரோக்கியத்துடன் வாழ்ந்து மக்களுக்கு பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் நீண்ட ஆயுளை வழங்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சத்தியசீலன்,
பிரதேச செயலர், கரவெட்டி.


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம்

## அரச அதிபர் காலத்தில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் சில...


கரவெட்டி பிரதேச வைத்தியசாலை


கரவெட்டி கமநல சேவைகள் திணைக்கள அலுவலக கட்டடம்


கரவெட்டி குடிநீர் விநியோகத் திட்டம்


யாழ்.பருத்தித்துறை வீதி அகலமாக்கல்

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம்,**
**கரவெட்டி.**

**கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசம்,**
**கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்த வீடுகளை திருத்தித் தருமாறு கணேசபுரம் மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

## 'தறப்பாள்' வாழ்வுக்கு முடிவுகட்ட வலியுறுத்து

கிளிநொச்சி,ஓக.7

கிளிநொச்சி கணேசபுரம் மக்களால் தமது வீடுகளைத் திருத்த உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கும், கரைச்சிப் பிரதேச செயலருக்கும் கணேசபுரம் மக்கள் கையொப்பமிட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு;-

மிகவும் செழிப்பான கணேசபுரம் கிராமம் காலத்துக்கு காலம் நடைபெற்ற யுத்தங்களால் மிகுந்த சேதமடைந்துள்ளது. இதில் குறிப்பாக எமது வீடுகள் அனைத்தும் சேதமடைந்து அல்லது அழிவடைந்துள்ளன.

தற்போது நாம் மீள்குடியேறியுள்ள நிலையில் எமது கிராமத்திற்கான முழுமையான வீடமைப்புத் திட்டத்தினை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஆனால் எமது சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கான உதவிகளை வழங்க எவரும் முன்வரவில்லை.

இதனால் கூரைகளற்ற வீடுகளில் தறப்பாள்களின் கீழேயே எமது வாழ்வு தொடர்கின்றது.

இதனால் மழை, வெள்ளம், காற்று, வெயில் என்பவற்றின் தாக்கம் அதிகமாக உள்ளதுடன் எமது பிள்ளைகளின் கல்வியும் பாதிப்படைகின்றது. எனவே எமது வீடுகளைத் திருத்த தங்களாலான உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ-405)

## துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் வெள்ளிவிழா

மன்னார்,ஓக.7

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழா வைபவங்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளதாக இச்சங்கத்தின் தலைவர் அருட் பணி சேவியர் குரூஸ் அடிகளார் உதயனுக்குத் தெரிவித்தார்.

நாட்டில் கொடிய யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் மன்னாரில் வாழ்ந்த வறியமக்களுக்கு தன்னாலியன்ற சேவைகளைச் செய்து வருவதாகவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தனது உயிர் உடைமைகளை இழந்த தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரத்துக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்துவருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

திட்டமிட்டது போல் 'வெள்ளிவிழா' வைபவங்கள் இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும். மற்றைய ஏற்பாடுகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் கூறினார்.(ஐ-80)

## எஸ்.ரி.பி.சேவை வன்னிக்கு விஸ்தரிப்பு



அரச அதிபர் மங்கள விளக்கேற்றும் போது...

கிளிநொச்சி,ஓக.7

யாழ்.நகரில் கடந்த 12 வருடங்களாக கணனிசார் சேவைகளை வளங்கிவரும் எஸ்.ரி.பி. கணனி நிறுவனம் அண்மையில் தனது சேவையை வன்னி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கும் நோக்கில் கிளை ஒன்றினைத் திறந்துள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி சு.கேதீஸ்வரனால் கிளை திறந்து வைக்கப்பட்டது. உலகின் முதல்தர உற்பத்திப் பொருள்களான ரொசீபா,டெல், புரோலிங் என்பவற்றின் விற்பனை மற்றும் சேவை முகவர்களான இவர்கள் யாழ்.மாவட்டத்தில் வழங்கிவரும் சேவைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் இப்போது விரிவாக்கியுள் ளனர். (ஐ)

## கனகபுரம் வீதியின் சிறு பகுதி திருத்தம்

கிளிநொச்சி,ஓக.7

கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியில் இருந்து கனகபுரம் பகுதிக்குச் செல்லும் டிப்போ வீதியின் 500 மீற்றர் வரையான பகுதிக்கு கிரவல் இடப்பட்டு தார் இடப்பட்டுள்ளது. ஏற்கனவே இவ்வீதியில் ஒரு கிலோமீற்றர் வரையான பகுதி தார் இடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தவீதியேகிளிநொச்சிபொதுச்சந்தைக்குச் செல்லும் பிரதான வீதியாகும். இவ்வீதியால் பல வாகனங்கள் சென்று வருவதால் பாதசாரிகள், சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் புழுதிப் புகையினூடாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே இந்த வீதியான அம்பாள்குளம் சந்தை வரையாவது உடனடியாகத் திருத்தி மக்களை புழுதிக் குளியல்களில் இருந்து காப்பாற்ற வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (த-405)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன்
# முருங்கன் மகா வித்தியாலயத்துக்கு இரண்டு மாடிக் கட்டடம் விரைவில்

மன்னார்,ஓக.7

மன்னார், முருங்கன் மகா வித்தியாலத்தில் ஆறு வகுப்பறைகளுடன் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும், அழகியல் அலகு, மனையியல் கூடம், சங்கீத அறை, வகுப்பறைகள் உள்ளடங்கக் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

கல்வி அமைச்சின் அறிவுசார் சமூகத்துக்கான கல்வித் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் இக்கட்டடங்கள் அமையப் பெற உள்ளன.

வடமாகாண கல்வி அமைச்சு இக் கட்டட நிர்மாணவேலைகளுக்கான கூறு விலை அழைப்பை மேற் கொண்டுள்ளது.

இவ்விரு கட்டடங்களும் அமைக்கப் படுவதன் மூலம் முருங்கன் மகா வித்தியாலயத்தின் கட்டடத் தேவைகள் கணிசமான அளவு நிறைவு பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-121)

# பெருகியுள்ள குரங்குகளின் அட்டகாசம்; சமைத்த உணவை காவிச் செல்வதால் மக்கள் பட்டினி

கிளிநொச்சி,ஓக.7

வன்னியில் மக்கள் மீளக்குடியமர்ந்த சில பகுதிகளில் குரங்குகளின் தொல்லை காரணமாக மக்கள் பல்வேறு நெருக்கடிகளையும், பட்டினியையும் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் இடம்பெயர்ந்து சென்று ஒரு வருடத்துக்கும் மேலான நிலையில் இந்தப் பகுதிகள் பற்றை மண்டிக் காணப்படுகின்றன.

இவற்றிற்கு இடையில் மக்கள் தமது தற் காலிக வீடுகளை அமைத்துத் தங்கியுள்ளனர். இவ்வாறு தங்கியிருக்கும் மக்கள் நாளாந்தம் சமைக்கும் உணவுகளை ஆள்கள் அற்ற வேளையில் வரும் குரங்குகள் எடுத்துச் சென்றுவிடுகின்றன. இவற்றை விட வீட்டுக்குள் இருக்கும் பொருள் களையும், புடைவைப் பைகளையும் இவை நாசம் செய்வதாக மக்கள் தெரிவிக் கின்றனர்.

குரங்குகளின் அட்டகாசத்தால் சில வேளை உணவை உண்ணமுடியாது பட்டினி கிடக்கவோ அல்லது மீண்டும் சமைத்தோ ஆகவேண்டி உள்ளது.

இவ்வாறு குரங்குத் தொல்லை அதிகரித்த சில இடங்களில் இராணுவத்தினர் பட்டாசு வெடிகளைக் கொளுத்த அனுமதித்த போதும் சில பகுதிகளுக்கு இன்னமும் அனுமதி தரவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-10)

# நான்கு பாடசாலைகளின் 800 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை சிறிதரன் எம்.பி. வழங்கினார்

கிளிநொச்சி,ஓக.7

கிளிநொச்சி வலயத்தின் நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்எஸ்.சிறிதரனால் கற்றல்உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளன.

புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் சி.மாசிலாமணி, வே.தங்கவேலு, ச.குகதாசன் ஆகியோரின் நிதி உதவியுடன் 115,000 ரூபா பெறுமதியான கொப்பிகள், கொம்பாஸ், பேனைகள் உட்பட்ட கற்றல் உபகரணங்கள் இவ்வாறு அன்பளிப்புச் செய்யப்பட் டுள்ளன.

வன்னேரிக்குளம் ம.வி, முழங்கா வில் ம.வி., ஐயனார்புரம் அ.த.க.பா., குமுழமுனை அ.த.க.பா. ஆகிய நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேற்படி பாடசாலைகளுக்கு நேரில் விஜயம் செய்த சிறீதரன் எம்.பி. கற்றல் உபகரணங்களை வழங்கியதுடன் பாடசாலைக் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார். (ஐ-405)




# முல்லையில் வாக்காளர் பதிவு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தக் கருத்தரங்கு

## மனித உரிமை நிறுவன ஏற்பாட்டில்

முல்லைத்தீவு,ஓக.7

இலங்கை மனித உரிமை நிறுவனம், முல்லைத்தீவு மாவட்ட இடம்பெயர்ந்து மீளக்குடியேறும் மக்களின் வாக்காளர் பதிவு தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் கருத்தரங்கு ஒன்றினை துணுக்காய் கோட்டக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தியது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மனித உரிமையைப் பாதுகாக்கும் அலுவலர்களும், தொண்டர்களும் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கை மனித உரிமை நிறுவன திட்டப்பணிப்பாளர் செல்வி நிஷா ஒழுங்குபடுத்தியிருந்தார்.

இக் கருத்தரங்குகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவி தேர்தல் ஆணையாளர் பின்வரும் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

* வாக்காளர்களைப் பதிவு செய்யும் படிவங்கள் வீடு வீடாகச் சென்று விநியோகம் செய்யப்படல் வேண்டும். இதுவரை இப்படிவங்கள் சில பிரிவுகளில் விநியோகம் செய்யப்படவில்லை என எமக்கு முறைப் பாடுகள் கிடைத்துள்ளன. இப்படிவங்களை உரியவர்கள் பெற்று அதைப் பூரணப்படுத்தி ஒப்படைப்பதனை உறு திப்படுத்துங்கள். உரிய கிராம அலுவலர்களுடனும் பிரதேச செயலாளர்களுடனும் இவ்விடயம் தொடர்பாக தொடர்பு கொண்டு மக்களின் அடிப்படை உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்.

* பதிவுகளை இடமாற்றம் செய்ய விரும்புபவர்கள் கிராம அலுவலர்களினைத்தேடி அலைவதில் உள்ள சிரமத்தினையும் செலவினையும் தவிர்ப்பதற்கு தற்போது வசிக்கும், கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு இலக்கம் - 03 என்ற படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி தற்போது வசிக்கும் கிராம அலுவலரிடம் ஒப்படைத்து தங்கள் பதிவுகளை மாற்றிக் கொள்ளமுடியும் என்ற தகவலை மக்கள் மத்தியில் தெரியப்படுத்துங்கள்.

முக்கியமாக வாக்காளர் பதிவின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணர்த்துவதன் மூலம் ஒவ்வொரு தகுதி பெற்ற பிரஜையும் வாக்காளராக முடியும். இக் கடமையை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை மனித உரிமை நிறுவனத்துக்கும், எனக்கும் இருக்கின்றது. (ஐ)

# கரைச்சிக் கல்விக் கோட்டத்தின் ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஓக.7

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டமட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதி நேற்று வெளியாகியிருந்தது. எஞ்சிய பகுதி வருமாறு:-

**கவிதை கூறல்**

**தரம் - 3**
சி.நிதுசிகா - கிளிநொச்சி ம.வி, த.சந்துசா - கிளிநொச்சி ம.வி, து.சங்கவி - புனித திரேசா பெண்கள் கல்லூரி.

**தரம் - 4**
பே.அபானுசா - கிளிநொச்சி ம.வி, ப.கேதரகன் - வட்டக்கச்சி ம.வி, இ.மதுசா - புனித திரேசா பெண்கள் கல்லூரி.

**தரம் - 5**
தே.தயூறிற்லிப்ரா - வட்டக்கச்சி ம.வி, பா.கிருபாலினி - ஸ்கந்தபுரம், இல-1, அ.த.க.பா, சி.ரேனுஜன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**தரம் - 6**
சு.அக்சனா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, ஜெ.கஜானி - வட்டக்கச்சி ம.வி, கு.ஜதுர்சன் - கிளிநொச்சி ம.வி.

**தரம் - 7**
வ.பிரியா - கிளிநொச்சி ம.வி, இ.தனுசோபன் - கனகபுரம் ம.வி, லோ.ஹரிஜா - பாரதி வித்தியாலயம்.

**தரம் - 8**
ந.காயத்திரி - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, ஜோ.கலக்சிகா - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, நா.கேசவராஜ் - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**தரம் - 9**
பி.கிந்துஷா - அக்கராயன் ம.வி, ம.லக்ஷி - வட்டக்கச்சி ம.வி, த.வாசுகி - வட்டக்கச்சி ம.வி.

**தரம் - 10**
பா.நிதர்சனா - கிளிநொச்சி ம.வி, எஸ்.மெதினா - அக்கராயன் ம.வி, சு.டிலக்ஷனா - வட்டக்கச்சி ம.வி.

**தரம் - 11**
இ.சர்மினி - புனித திரேசா பெண்கள் கல்லூரி, ம.மெதுஷா - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, ப.றினோசன் - கிளிநொச்சி ம.வி.

**பேச்சு**

**தரம் - 12**
பா.மாதங்கி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, சி.லகுவனா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**தரம் - 13**
ஆ.பெனடிக்ரா தயானந்தி - கனகபுரம் ம.வி, இ.கீர்த்தனா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, செ.ட[illegible]

**உரத்து வாசித்தல்**

**தரம் - 3**
ஞா.கவினா - புனித பற்றிமா றோ.க.த.க.பா, ந.கரிஞ்ஞனா - வட்டக்கச்சி ம.வி, த.அஷ்வினா - புனித பற்றிமா றோ.க.த.க.பா

**தரம் - 4**
ச.நகுலசேகரி - கிளிநொச்சி ம.வி, பா.சாருஜா - கிளிநொச்சி மத்திய கல்லூரி, கி.சஜிதனன் - வட்டக்கச்சி ம.வி.

**தரம் - 5**
ம.றம்ஜா - புனித திரேசா பெண்கள் கல்லூரி, சி.ரேணுஜன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, பா.றஜீபா - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**உரையாடல் நாடகம்**

சிரேஷ்ட பிரிவு - வட்டக்கச்சி ம.வி

**உரைநடை நாடகம்**

தரம் - 6 - புனித திரேசா பெண்கள் கல்லூரி,

தரம் - 8 - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, புனித திரேசா பெண்கள் கல்லூரி.

தரம் - 11 - புனித திரேசா பெண்கள் கல்லூரி,

**குழுப்பாடல்**

தரம் - 1-2 - பாரதி வித்தியாலயம்.

தரம் - 3-5 - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

தரம் - 6-9 - கிளிநொச்சி இந்துக் கல்லூரி. (ஐ-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கச்சாய் வடக்கு, கொடிகாமம் அருள்மிகு ஒட்டங்கேணி
# ஸ்ரீ மகாகணபதி தேவஸ்தான
# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்

காலம் : நாளை (08.08.2010)
ஞாயிற்றுக்கிழமை

## தேவஸ்தான பிரதம குருக்களின் அருள் ஆசிச்செய்தி



''வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்''

அருள்மிகு ஒட்டங்கேணி ஸ்ரீமகா கணபதி தேவஸ்தான மகோற்சவ பெரும் சாந்தி விழா 31.07.2010 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 08.08.2010 இல் ரததோற்சவத் திருவிழா காலையில் நடைபெறவுள்ளது. ரதம் புதிதாக அமைக்கப்பெற்று முதன் முறையாக எம் பெருமான் ரதத்தில் ஆரோகணித்து வீதி உலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். அடியார்கள் பெருமானது திருவருளாலே சகல ஐஸ்வரியங்களும் பெற்று வாழப் பிரார்த்திப்பதோடு ரதோற்சவம் சிறப்புற நிகழ பிரதம குருவாகிய எமது அருள் ஆசிகளை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதோடு, சாந்தியும் சமாதானமும் எங்கும் நிலவ பெருமானைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

*குமார வித்தகஜோதி, சுப்பிரமணிய ஏரகன்*
*சிவஸ்ரீ வெ.தில்லையம்பலக்குருக்கள், மஹோற்சவ பிரதமகுரு,*
*கந்தசாமி தேவஸ்தான பிரதமகுரு, மிருசுவில் வடக்கு, மன்னம் குறிச்சி.*

## தேவஸ்தான பிரதம பூசகரின் நல்லாசிச் செய்தி



அடியார்களுக்கு அருள் பாலித்து வருகின்ற இந்த தேவஸ்தானத்திற்கு நித்திய பூசைகளைப் பொறுப்பேற்று சில மாதங்களிலேயே மகோற்சவத் திருவிழா நடைபெற எல்லாம் வல்ல எம் பெருமான் திருவருள் பாலித்தமை மகிழ்ச்சி தரும் செய்தியாகும். எதிர்வரும் 08.08.2010 அன்று எம் பெருமான் ரதத்திலமர்ந்து வீதி உலாவரும் கார்ட்சியைக் கண்குளிரக் கண்டு அவர் அருள்பெற்று மெய்மை மனத்தடியார்களாகிய நீங்கள் அனைவரும் நற்சுகங்களோடு நல்லாயுளும் பெற்றுத் திருத்தொண்டும் திருப்பணிகளும் எங்கள் பெருமானுக்கு ஆற்றி நல்வாழ்வு வாழ பிரார்த்தித்து அனைவர்க்கும் நல்லாசிகளை வழங்கி அமர்கின்றேன்.

*சு.சிசிகரன், தேவஸ்தானப் பிரதம பூசகர்.*

## 'வடம் பிடித்து நல்வாழ்வு பெறுவீர்'

நாளைய நாள் கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் மங்களம் பொங்கும் நன்னாளாக அமைகின்றது. ஒட்டங்கேணி மகா கணபதிப் பெருமான் முதலாவது மகோற்சவத்தில் புதிய தேரில் ஆரோகணித்து எல்லோருக்கும் அருள் சுரந்திடும், புண்ணியம் கோடி பெருக்கிடும் பொன்னாளாகும். எம்மிடம் இருக்கும் அசுரத்தனமான குணங்கள், கெட்ட எண்ணங்கள், ஆணவம், கன்மம்,மாயை போன்ற மும்மலங்களையெல்லாம் வேரோடழித்து நல்ல சிந்தனைகளையும் பக்தியையும், அறத்தையும் மிளிரச்செய்து நித்திய பேரானந்தத்தை விநாயகப் பெருமான் இன்று தருகின்றார். இதனால் இன்று எல்லோரும் ஒன்று கூடி தேர்வடம் பிடித்து நல்வாழ்வு பெறுவோமாக. நாட்டில் சாந்தியும் சமாதானமும் அமைதியும் பெருகி எல்லோரும் பக்தியுடன் இன்புற்று வாழ வேண்டுமென்று பிரார்த்திப்போமாக. எம்பெருமான் மகிழ இவ் வருடம் மகோற்சவத்தினை ஆரம்பித்த எல்லா அடியவர்களும் சகல செளபாக்கியங்களையும் பெற்று பூரண நற்சுகத்துடன் வாழ வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க கணபதி! வளர்க அறப்பணி!

*வரணியூர் சைவப்புலவர், திருவருள் வாசகர்*
*சிவத்திரு சி.கா.கமலநாதன்* M.A.J.P
*அகில இலங்கை சைவப் புலவர் சங்க பிரசார அமைச்சர்.*

## உபயகாரர் செய்தி

அருள்மிகு ஒட்டங்கேணி விநாயகப் பெருமானின் தேர்த்திருவிழா உபயகாரராகிய அமரர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களின் பிள்ளைகள் சார்பாக 07.08.2010 உதயன் பத்திரிகையில் வெளிவரவுள்ள தேர்த்திருவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனநிறைவடைகிறேன்.

எல்லாம் வல்ல ஒட்டங்கேணியான் திருவருளினாலே திரு.அமிர்தலிங்கம் அவர்களின் உபயமாக அவரின் பிள்ளைகளுடன் நானும் இணைந்து புனித உற்சவமான ரதோற்சவ திருவிழாவை நாங்கள் நடத்த விநாயகப் பெருமானின் நல்லருள் கிடைத்தமை எங்கள் பாக்கியமே. இவ்வாண்டும், தொடர்ச்சியாக வரப் போகின்ற எல்லா வருடங்களிலும் ரதோற்சவ விழா சிறப்புற அமைய எம்பெருமானின் திருவருள் கிட்ட வேண்டும் என்று பிரார்த்தித்து வாழ்த்தி அமர்கின்றேன்.

*அ.உருத்திரானந்தன்,*
*ரதோற்சவ உபயகாரர், கச்சாய் வடக்கு, கொடிகாமம்.*



காப்பு

கச்சாயூர் ஒட்டங்கேணி கணபதியே உன்னருளால்
மெச்சுபுகழ் வாழ்க்கை மேலிடுவோம் - இச்செகத்தில்
என்றும் நாமுன்னை மறவாது துதித்துவர
நன்றே நயந்தளிப்பாய் அருள்.

## வரலாற்றுச் சுருக்கம்

பண்ணிசை பாடும் யாழ்.நகர் தென்பால் தென்மராட்சி சீர்பெறும் கச்சாய் பதியில் பல நூற்றாண்டுகளாக நம்முன்னோரும் நாமும் பல நன்மைகளை மேற்படி விநாயகப் பெருமானின் அருளினாலே பெற்று வருகின்றோம்.

இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன் இங்கு வாழ்ந்த சேது காவல முதலியார், தில்லையம்பல முதலியார், சேனாதிராச முதலியார் வழிவந்த இறைபக்தி மிக்கவர்கள் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் இங்கு தொழில் புரிந்த ஒட்டர் என்னும் இனத்தவர் பெரும் கேணியொன்றை வெட்டிய போது பெரும் ஓசை கேட்டது. அவ்விடத்தில் கையினால் தோண்டிய போது கற்சிலையொன்றிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டு ஊர் மக்கள் எல்லோரும் சேர்ந்து ஓர் சிறு ஆலயம் அமைத்தனர். ஒட்டர்களால் கண்டெடுக்கப்பட்டதால் ஒட்டங்கேணிப் பிள்ளையார் எனப் பெயர் சூட்டி வணங்கி வந்தனர்.

வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளிக்கும் விநாயகப் பெருமானது ஆலயத்தில் சில அற்புதங்கள் நடைபெற்றதற்கான பரம்பரைக் கதைகள் இவ்வாலயத்திற்கு உண்டு. மூல மூர்த்தியாகிய விநாயகர் வழிபாட்டுடன் பரிவார மூர்த்திகளாக முருகன், நாகதம்பிரான், வைரவர் இவற்றுடன் வெளிவளவில் நாச்சிமார் அண்ணமாருக்கு தனித்தனி கோவில்களும் உண்டு.

இந்த ஆலயத்தின் பரிபாலன சபையானது சுமார் ஐம்பது லட்சம் பெறுமதியான அழகிய வர்ண வேலைகளுடன் கூடிய ஆலயம் அமையப் பெற்று 18.02.2004 இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று பூசைகள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சில மாதங்களுக்கு முன் கொடிக்கம்பம் நிறுவப்பட்டு, 31.07.2010 அன்று கொடியேற்றத் திருவிழாவுடன் சிறப்பாக ஆரம்பமாகி, நாளை ஞாயிற்றுக்கிழமை 08.08.2010 காலை 9 மணிக்கு எமக்கெல்லாம் அருள்பாலிக்க வருகின்ற செய்தியை தெரிவிப்பதில் செயலாளராகிய நான் மனநிறைவடைகிறேன்.

*சுக நவரத்தினம், பரிபாலன சபை செயலாளர்.*

## பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

எம்முன்னோர்களால் வழிபட்டு வந்த எங்கள் குல தெய்வமான ஒட்டங்கேணி விநாயகப் பெருமான், வர்ண வேலைப்பாடுடன் சகல வசதிகளும் கொண்ட ஆலயம் உருவாகி 08.02.2004 தைத்திங்கள் மகாகும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் நிறைவடைந்து நித்திய பூசைகள்,விஷேட பூசைகள் யாவும் நடைபெற்று வருவதுடன் எம்பெருமானின் திருவருளால் கொடிக்கம்பம் நிறுவி கடந்த 31.07.2010 இல் கொடியேற்றத் திருவிழா நடைபெற்று திருவிழாவின் உச்சதினமான தேர்த் திருவிழா 08.08.2010 அன்று நடைபெறவுள்ளது. ஆண்டுதோறும் மேலும் மேலும் சிறப்பாக நடைபெற விநாயகப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டுமென அவரது திருப்பாதம் பணிந்து வேண்டி வணங்குகின்றேன்.

*க.சுப்பிரமணியம், பரிபாலன சபைத் தலைவர்.*


யாழ்.மண்ணில் எமது புதிய கிளை
கறையான் தொல்லையில் இருந்து
முழுமையாக விடுபட நாடுங்கள்
**COLOMBO PEST CONTROL SERVICES**
527, K.K.S.வீதி யாழ்ப்பாணம். 0777666684

பலசரக்குப் பொருள்கள் கட்டடப்
பொருள்கள் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்
**மணியம் களஞ்சியம் பல்பொருள் வாணிபம்**
கண்டி வீதி, கொடிகாமம். 0777448329

சகலவிதமான எஸ்-லோன் பைப்புகளும்,
மின் இணைப்புப்
பொருள்களும்,பலவகையான பலசரக்குப்
பொருள்களும் பெற்றுக் கொள்ள
**சின்னயா ஸ்ரோர்ஸ்**
கண்டி வீதி,கொடிகாமம்.

பலசரக்குப் பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
**உதயகுமார் களஞ்சியம்**
இல.1, சந்தை உட்புறம்
கொடிகாமம்.

மின்சார உபகரணங்களும், கையடக்கத்
தொலைபேசிகளுக்கும், யாழ் - கொழும்பு
சொகுசு வாகன ஆசனப் பதிவுகளுக்கும்,
போட்டோப் பிரதி சேவைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்,
**ரூபன் எலக்ரிக்கல்ஸ்**
இல. 1, கண்டி வீதி, கொடிகாமம்.

நவ நாகரிக அழகிய தங்க நகைகளை 22
கரட்டில் குறித்த தவணையில் செய்து
கொள்ள
**ரூபி நகையகம்**
கண்டி வீதி, கொடிகாமம்.
0213205252,0776173046

சிற்றுண்டி வகைகளும் தேநீர்,
குளிர்பானங்களும் சுகாதார முறைப்படி
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய
ஒரே இடம்
**மயூரா உணவகம்**
கண்டி வீதி, கொடிகாமம்.

இரு தசாப்த காலமாக கல்விக்கு ஒளியூட்டி
வருகிறது. (தரம் 1 முதல்
க.பொ.த.உயர்தரம் கலைப்பிரிவு வரை)
**கிருஷ்ணா கல்வி நிலையம்**
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

With the best compliments from
**சிவகஜன் பதிப்பகம்**
காளி கோயில் வீதி,
கொடிகாமம்.

**தென்மராட்சி ப.நோ.கூ.சங்கம்**
**CO-OP City**
கண்டி வீதி, கொடிகாமம்.

கோயில் அபிஷேகப் பொருள்கள் மற்றும்
வாசனைத் திரவியங்கள் ஆகியன
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
**சிறி வெற்றிலைக்கடை**
சந்தை உட்புறம், கொடிகாமம்.

ஒட்டங்கேணி பிள்ளையார்
அனைவருக்கும் அருள்பாலிப்பாராக
**Milk White Soap Industries**
K.K.S.Road,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு லீக்கை இலகுவாக வென்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது பருத்தித்துறை

யாழ்ப்பாணம், ஓக 7

இலங்கை உதைபந்தாட்ட லீக் உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணிக்கும் மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணிக்கும் இடையேயான போட்டி இடம்பெற்றது.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் நேரம் செல்லச்செல்ல பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வீரர்களின் ஆதிக்கம் மைதானத்தில் அதிகரிக்கத் தொடங்கியது.

முதலாவது கோலை போட்டி ஆரம்பமாகிய 10 ஆவது நிமிடம் பருத்தித்துறை வீரர் றெஜினோல்ட் அடித்து பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து மேலும்இரண்டு கோல்களை பிறேம்குமார் அடித்து 3 கோல்கள் என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டம் மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பின் மத்தியில் களமிறங்கிய போதிலும் பருத்தித்துறை வீரர்கள் மீண்டும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கினார்கள்.

தொடர்ந்து பிறேம்குமார் இரண்டு கோல்களைப் பெற்றுக்கொள்ள மேலும் ஒரு கோலை சதீஸ்கரன் பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் மேலும் 3 கோல்களை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் பெற்றுக்கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் 6:0 என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக்கை வெற்றிபெற்று நான்காவது போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (ஐ-86-23)




## மட்டுவிலில் மென்பந்தாட்டம்; கண்ணகை வி.கவுக்கு வெற்றி

யாழ்ப்பாணம் ,ஓக. 7

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்டுவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சென்றவாரம் இடம்பெற்ற ஆட்டத்தில் மீசாலை சிறிவிநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மீசாலை சிறிவிநாயகர் விளையாட்டுக்கழக அணி 12 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

நிஷாந்தன் 18 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

பிரதாப் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி 11.4 ஓவர்கள் நிறைவில் 57 ஓட்டங் களைப் பெற்றது.

கோபி 24 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

கமல், சிறிகரன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணி 8 விக்கெட்டுக்களால் மீசாலை சிறிவிநாயகர் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. (ஐ-23)

## இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம் ,ஓக.7

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு காந்திஜி சனசமூக நிலையமும் காந்திஜி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டிகளில், கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில்க.ஜெயக்குமார்தலைமையில் காந்திஜி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஈழமக்கள்ஜனநாயகக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்ஆ. பி.சில்வேஸ்திரிஅலென்ரின் (உதயன்) கலந்துகொள்வார். (ஐ-23)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி; விறுவிறுப்பாகத் தொடர்கிறது

வலி. வடக்கு ,ஓக.7

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு பெண் அணிகளுக்கு இடையே உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது.

நடைபெற்று முடிந்த ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:

* கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைகளுக்கும் இடையே நடைபெற்ற போட்டி மிகவும் ஆக்ரோஷமான போட்டியாக காணப்பட்டது.

இரு அணிகளும் இறுதிவரை கடுமையாக மோதிக்கொண்டன. ஆட்ட நிறைவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 52:40 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

* உடுவில் மகளிர்கல்லூரிக்கும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 65:00 என்ற புள்ளிகள் அடிப்படையில் இராமநாதன் கல்லூரியை வெற்றிபெற்று அடுத்த சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

* மற்றுமொரு ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டதில் கொக்குவில் இந்துக் கல்லூரி 44: 16 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றிபெற்றது. (ஐ-86)

## பரபரப்பாக நடந்த கரப்பந்தாட்டம்; யாழ். மாவட்ட அணி மாகாணச் சம்பியன்

வலி. வடக்கு ,ஓக.7

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில். யாழ்.மாவட்ட அணி மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

வீரர்கள் மைதானத்தில் மோதிக் கொண்டதை விட இரு அணிகளதும் ஆதரவாளர்கள் வெளியில் மோதியதால் முறுகல் ஏற்பட்டது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப்போட்டியில் முதல் நான்கு சுற்றுக்கள் விளையாடியதில் 3:1 என்ற செற் கணக்கில் யாழ். மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை வெற்றி பெற்று மாகாணச் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

முதல் சுற்றை மன்னார் மாவட்ட அணி 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற அடுத்த 2,3,4 ஆம் சுற்றுக்களை யாழ். மாவட்ட அணி 25: 09 ,25:20, 25:17 புள்ளிகள் பெற்றது.

(ஐ-86)

## விளையாட்டு விழாக்கள்

நல்லூர் ,ஓக 07

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம், லோட்டஸ் வீதி பாரதியார் சனசமூக நிலையத்தின் விளையாட்டுப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றிலில் சு. சோதிலிங்கம்தலைமையில்நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ். சுரேந்திரநாதனும், சிறப்பு விருந்தினராக ஜே/99 கிராம அலுவலர் எஸ். தவரட்ணமும் கலந்து கொள்வர். (ஐ-111)

* * *

யாழ்ப்பாணம் , ஓக. 7

தொண்டைமானாறு கலைவாணி முன்பள்ளி,கலைவாணி சிறுவர் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் சி.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ. சிறீரங்கேஸ்வரன் கலந்துகொள்வார். (ஐ)

* * *

யாழ்ப்பாணம் ,ஓக.7

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற முன்பள்ளிச் சிறுவர், மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாமன்ற விளையாட்டரங்கில் க.தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்டத் துறைத்தலைவர் லயன் டாக்டர் வை. தியாகராசா கலந்துகொள்வார். போட்டிகளில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி அன்றைய தினம் காலை 6 மணிக்கு பாரதி கலாமன்றத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் ,ஓக.7

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் பாசையூர் தண்டஸ் கோஸ்ரியினர் உள்ளூர் அணிகளுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் 15 இற்கு மேற்பட்ட உள்ளூர் அணிகள் பங்குபற்றவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-23)

## அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம் ,ஓக.7

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக்கிணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று பிற்பகல் 4 மணியளவில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகமும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன. (ஐ-23)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட யாழ். [illegible] இடத்தைப் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அணியையும் படங்களில்காணலாம்.
(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் சட்டக்கல்வி வலியுறுத்துகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஓக.7

பாடசாலைகளில் சட்டக் கல்வி புகட்டப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. பாடசாலை பாட விதானத்தில் சட்டக் கல்வியும் உள்ளடக்கப் பட வேண்டியது இன்றியமையாததென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளில் சட்டக் கல்வி மாணவர்களுக்கு புகட்டப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். சட்ட முதுமாணி கல்வியைத் தொடரக் கூடிய நிறுவனமொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத் தியுள்ளார்.

இதேவேளை, நாட்டில் காட்டுச் சட்டம் அமுல் படுத்தப்பட்டால் நீதிமன்றக் கட்ட மைப்பில் பய னில்லை என்று ஐக் கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் டொக் டர் ஜயலத் ஜயவர் தன தெரிவித்துள் ளார். (சி)

## 2ஆம் ஆண்டு நினைவுதினம்



மண்ணுலகில் 03.08.1922

விண்ணுலகில் 07.08.2008

திதி: 16.08.2010

**அமரர் தம்பிமுத்து சொர்ணம்மா**

(6ஆம் வட்டாரம் நயினாதீவு)

ஈராண்டு கழிந்தாலும் உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது.

பிரிவால் துயருறும்:
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

61, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/569708)

## PHARMACEUTICAL VACANCIES

WE ARE A FAST GROWING PHARMACEUITICAL ORGANAI -SATION BASED IN COLOMBO WHICH REPRESENTS MANY MULTINATIONAL COMPANIES IN SRILANKA.REQUIRES TRAINEE MEDICAL REPRESENTATIVES AND MEDICAL REPRESENTATIVES TO HANDLE PROMOTIONS IN JAFFNA DISTRICT.

**MEDICAL REPRESENTATIVES(MALE /FEMALE)**

EXPERIENCE IN MEDICAL DETAILING FOR ONE YEAR IN JAFFNA AREA AND HAVING EXCELLENT RAPPORT WITH DOCTORS AND CHEMIST.

**TRAINEE MEDICAL REPRESENTATIVES(MALE/FEMALE)**

A/L BIO SCIENCE ( BUT NOT ESSENTIAL ),FLUENCY IN TAMIL AND ENGLISH IS MUST.PREFERENCE WILL BE GIVEN FOR THOSE WHO HAVE A BASIC KNOWLEDGE ABOUT PHARMACEUTICAL SELLING.

ATTARACTIVE REMUNERATION PACKAGE ,PERFORMACE BASED COMMISSION, VEHICLE ALLOWANCE ,OVERSEAS TOURSWILL BE OFFERED TO THE RIGHT CANDIDATE.

**INTERVIEW VENUE - PILLARYAR INN,
31 MANIPPAY ROAD JAFFNA.
DATE - 10TH AUGUST 2010 (TUES DAY)
WALK IN INTERVIEW (NOTE - PLEASE CALL
077 3465269 AND RESERVE YOUR TIME)**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி யோகராசா கிருபாநிதி**

தாயின் மடியில் 17.06.1957

ஆண்டவன் மடியில் 09.07.2010

கண்ணை இமை காப்பது போல
நாம் உம்மை கவனித்தோம்-அம்மா
நாடு கடந்து உன் சொந்த நாட்டை
பார்ப்பதற்கு குடும்பமாக
சென்றோம்-அம்மா
உன் சொந்த நாட்டில் உற்றார், உறவினரை
பார்த்தாயே- அம்மா
உன் சொந்த நாட்டில் உன் உயிரை காலன்
அவன் கவர்ந்தானே-அம்மா
பாவிகள் நாம் பரிதவித்து நிற்கின்றோம்
உன் பாதம் மலர் தூவி துதிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிலைத்து விட்ட உன் அன்பால்
நினைவிழந்து வாடுகின்றேன்
தவிக்கின்றேன் தனிமரமாய்
நினைவிழக்க முடியாது-நாம்
நீந்துகின்றோம் துயரத்தில்
முத்தான முத்துகள் மூன்றினை
பெற்றெடுத்தாய்
முன் பெற்ற மகன்தனை ஒன்பது வயதினில்
பறிகொடுத்தாய்-அம்மா
நடைப்பிணமாய் நீ துவண்டாய்-அம்மா
பாசத்தின் வலி இதுதான் என்றாய்
நீ பாதி வயதினில் நோயுற்றாய்-அம்மா

நாளை (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சயம்பு வீதி,
இலகடி, காரைநகர்.

(101595)

குடும்பத்தினர்.

## நீர் இறைக்கும் மோட்டர்கள்; உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 07.05.2010 ஆம் திகதி இடம்பெற்ற வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட மூன்று நீர் இறைக் கும் மோட்டர்கள் நெல்லியடிப் பொலிஸாரால் மேற்படி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி நீதிமன்றப் பதிவாளர் அறி வித்துள்ளார். (ஒ-1)

## இதய அஞ்சலி

**அமரர் வைரமுத்து கதிர்காமநாதன்**

**– வருணன், அச்சுவேலி –**

யாழ்ப்பாணம் சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் மூத்த உறுப்பினரும், பரீட்சைச் செயலாளருமாகிய திரு. சுப்பிர மணியம் ஸ்ரீகாந்தனின் அன்பு மாமனார் வைரமுத்து கதிர்காமநாதன் இறை எய்திய செய்தி அறிந்து துயருறு கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

சைவசமய அபிவிருத்திக் கழகம்,
சாந்தையர்மடம்,
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்.
யாழ்ப்பாணம்.

### இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர், கல்போட் திறைம் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்

### Deutsch வகுப்புகள்

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடை பெறுகின்றன. ( Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.)

தொடர்பு: 10, Palaly Road, Jaffna.
0771604823

### தவறிவிட்டது

சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த யேசுதாசன் றொபின்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [840792498V] பேசுடன் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தொடர்பு: 91, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 0770564194

### வீடு வாடகைக்கு

நவீன வசதிகளுடன் 3 படுக்கை அறைகளுடன் குளியல் அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

இல. 33, கோம்பயன்தோட்டம், புது வீதி,
6 ஆம் வட்டாரம். தொடர்புகளுக்கு: 02132122442

### UK யில் உங்கள்


உயர்கல்வியை தொடர ஆர்வமான மாணவர்களுக்கு புதிய விதிமுறைகளுக்கு அமைய அனைத்து சேவைகளும் செய்து தரப்படும்.

விண்ணப்ப அடிப்படை தகைமை (G.C.E O/L)

IELTS, A/L, DEGREE, HND மற்றும் PROFFESIONAL QUALIFICATIONS உள்ளிட்டவர்களுக்கு விசேட கட்டணக் கழிவுடன் கூடிய சலுகைகள் வழங்கப்படும்.

0777491163

## சேவை நலன் பாராட்டு விழா



**திரு ஆழ்வார் செல்லையா**

யாழ். பலாலி வீதியில் பருத்தித்துறை சந்தியில் அமைந்துள்ள சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் அமைவதற்கு அடிகோலாக இருந்தவரும், முன்னாள் செயலாளரும் சங்கத்தின் வாழ்நாள் போசகரும், சமூக சேவகருமான திரு ஆழ்வார் செல்லையா அவர்களின் 100 ஆவது பிறந்தநாளை ஒட்டி அவருக்கு இந்த ஊர்மக்களும் வாலிபர் சங்கத்தின் பழைய, புதிய அங்கத்தவர்களும் சேர்ந்து சேவை நலன் பாராட்டு விழா இன்று (07.08.2010) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சன்மார்க்க சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ் விழாவைச் சிறப்பிக்கும் முகமாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள் வருகைதந்து விழா நாயகனை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கவுள்ளார்.

இந்த விழாவை மேலும் சிறப்பிக்க பழைய, புதிய சங்க உறுப்பினர்களையும், நலன் விரும்பிகளையும் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்,
சன்மார்க்க ஐக்கியவாலிபர் சங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எனது நீண்ட ஆயுளுக்கான இரகசியம் மரக்கறி உணவைப் புசிப்பதே ஆகும்

## நூறாவது பிறந்தநாளைக் கொண்டாடும் செல்லையா கூறுகிறார்

பலாலி வீதியில் அமைந்துள்ள சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தை உருவாக்குவதற்கு மூல காரணமாக இருந்தவரும் சமூக சேவையாளருமான ஆழ்வார் செல்லையா இன்று அகவை நூறைத் தொடுகின்றார். அவர் தமது வாழ்வின் பதிவுகளையும் ஆரோக்கியம் தொடர்பாகவும் 'உதயன்' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

***கேள்வி:*** உங்களுடைய நீண்ட ஆரோக்கியத்துக்கு என்ன காரணம்?

*பதில்:* நான் செய்த சமூகத் தொண்டுகள்தான். நான் நீண்டகாலம் வாழக்காரணம் நான் மரக்கறி உணவுகளையே உண்பேன். ஆரம்பகாலத்தில் நான் உடற்பயிற்கள் எதனையும் மேற்கொள்ளாத போதும் தற் போது மூன்று வருடங்களாகத் தினமும் சிறிய பயிற்சிகளை அரை மணித்தியாலம் செய்து வருகின்றேன்.

நான் ஆங்கில மருந்துகைள உபயோகிப்பதில்லை. ஆயுள்வேத மருத்துவம் மட்டுமே செய்கின்றேன்.

***கேள்வி:*** உங்களைப் பற்றியும் சமூகப் பணிகள் பற்றியும் சிறிது கூறுங்களேன்?

*பதில்:* நான் ஆரம்பத்தில் சீவல் தொழிலைச் செய்து வந்தேன். பின்னர் இத் தொழில் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற - மற்றவர்களைக் கெடுக்கின்றதாக இருந்ததால் 1944 ஆம் ஆண்டு அதனைக் கைவிட்டேன். பின்னர் விறகுகளை விற்றும் லொறி ஓடியும் எனது குடும்பத்தைக் காப்பாற்றினேன்.

எனது முதல்தாரம் செல்லம்மா சிறுது காலத்திலேயே காலமாகிவிட்டார். அவரின் மூலம் ஒரு பெண்பிள்ளை. பின்னர் இரண்டாம் தாரமாக சிவயோகத்தை திருமணம் செய்து கொண்டேன். அவரின் மூலம் 4 பிள்ளைகள் உள்ளனர். 13 பேரப்பிள்ளைகளும் 11 பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர்.

1956 ஆம் ஆண்டு சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தை அமைக்க எண்ணினேன். இதற்கு அப்போது அரச அதிபராக இருந்த ஸ்ரீகாந்தா, மாநகர மேயராக இருந்த நவரட்ணம் ஆகியோர் உதவிகளைச் செய்தனர்.

இந்த வாலிபர் சங்கத்தைக் கட்டி முடிப்பதற்கு 10 வருடங்கள் சென்றன. அப்போது எனது அண்ணா, தம்பி ஆகியோர் உதவி செய்தனர்.

என்னுடைய தம்பி மாணிக்கம் (வயது 82) இப்போது லண்டனில் வாழ்கிறார். அவர் பலரைப் படிக்க வைத்தவர். பலருக்கு கல்வியறிவையும் வழங்கியுள்ளார்.

*சந்திப்பு*
**தமிழரசன், அனுத்**

***கேள்வி:*** யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். ஆனால் மக்களில் பெரும்பாலானவர்களிடம் சுய நலமே கூடுதலாக உள்ளது. ஒவ்வொருவரும் தாமே பெரியவர்கள் என்று நினைப்பதால்தான் நாடு இந்த நிலைமையில் உள்ளது.

மக்களிடம் ஒற்றுமையில்லை. பணம் தான் முக்கியம் என்று வாழ்கிறார்கள். இவற்றை விடுத்து நேர்மையாக வாழ வேண்டும்.



***கேள்வி:*** இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

*பதில்:* நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் வாழ வேண்டும். நீங்கள் நிதானத்துடன் நடப்பதே நன்மையளிக்கும். கல்விக்கு முக்கியமளித்து அனைவரும் கற்க வேண்டும். விளையாட்டும் முக்கியமானதே. ஆனால், கல்வியை விடுத்து விளையாடாதீர்கள். அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

மனம் நல்லதானால் மந்திரம் ஓத வேண்டாமே என்பார்கள். அதற்கேற்றாற் போல் நல்ல மனதுடன் நேர்மையாக வாழுங்கள்.

## தவறிழைப்போருக்கு இனிமேல் வெற்றிலை வழங்குவாராம் மேர்வின்

கொழும்பு, ஓக. 07

சமுர்த்தி முகவரை மரத்தில் கட்டி வைத்துத் தண்டனை வழங்கிய பிரதியமைச்சர் மேர்வின் சில்வா இனிமேல் தண்டனைக்குப் பதில் தவறிழைத்தவர்களுக்கு வெற்றிலை வழங்கப்போவதாக நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''அரச ஊழியர்கள் முறையாகச் செயற்படாவிட்டால் வெற்றிலையை அவர்களிடம் கொடுப்பேன். அரச அதிகாரிகள் தமது கடமையை முறையாகச் செய்யவில்லை எனப் பொதுமக்கள் என்னிடம் முறையிட்டால் எனக்கு வழங்கிய வெற்றிலையை அவர்களிடம் கொடுத்து அரச ஊழியர்களிடம் வழங்கி வணங்கும்படி கூறுவேன்.''

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ-சி)

## மனோ கணேசன் ஒன்றும் செய்ய முடியாது கட்சி என் பின்னால் என்கின்றார் பிரபா

கொழும்பு, ஓக. 07

ஜனநா்யக மக்கள் முன்னணி எனக்கு ஆதரவாக இருக்கிறது. செயற்குழுவிலுள்ள 19பேரில் 18பேர் நான் அரசுடன் இணைந்ததை ஆதரிக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக பிரபா கணேசனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் இனத்துக்காகவும் மக்களுக்காகவும் பெரும்தியாகங்களைச் செய்துள்ளார். இதை எவரும் மறுக்கமுடியாது. அதற்காகத் தன்னிச்சையாக அவர் என்னைக் கட்சியிலிருந்து நீக்க முடியாது.

நான் எமது மக்களின் மேம்பாட்டுக்காகவும் அவர்களுக்குச் சேவையாற்றுவதற்காகவுமே அரசுடன் இணைந்தேன். கட்சியை விட்டு என்னை இடைநிறுத்தலாம். ஆனால் நீக்கமுடியாது. செயற்குழுவிலுள்ள 19 உறுப்பினர்களில் 18பேர் எனது இந்த முடிவை வரவேற்றுள்ளனர். அத்துடன் எமது கட்சி உறுப்பினர்களும் எனது தேவையை வரவேற்றுள்ளனர்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## சர்வகட்சி எம்.பிக்கள் சென்றால் மட்டுமே தமிழரின் உண்மை நிலையை அறியலாம்

### இந்திய அதிகாரி விஜயத்தால் பயனில்லை என்கிறது இடதுசாரி

சென்னை, ஓக. 07

இலங்கைக்கு சர்வகட்சி எம்.பிக்கள் குழு சென்றால் மட்டுமே ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முழுமையாக அறிந்து இந்திய அரசுக்குத் தெரிவிக்க முடியும். மத்திய வெளிவிவகார அதிகாரியின் இலங்கைப் பயணம் பயனுள்ளதாக அமையாது. ஆனால் அவரின் பயணத்தை நாங்கள் எதிர்க்கவில்லை.

- இவ்வாறு இடதுசாரிக் கட்சி தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இலங்கையில் போர் முடிந்து பல மாதங்களாகியும் அங்கு இன்னும் ஏராளமான தமிழர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது. இலங்கைத் தமிழ் மக்கள் அனைவரையும் அவரவர் சொந்த இடங்களில் குடியமர்த்துவதும், அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை விரைந்து மேற்கொள்வதும் மிகவும் அவசியம். இலங்கை இனப் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே, இந்திய அரசு உடனடியாக அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டும். எனினும், இந்திய வெளிவிவகார அதிகாரிகளின் இலங்கைப் பயணத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், எம்.பிக்கள் குழு சென்றால் மட்டுமே, தமிழ் மக்களின் பிரச்சினை களை முழுமையாக அறிந்து, இந்திய அரசுக்குத் தெரிவிக்க முடியும். மேலும், ஜனநாயக ரீதியிலான ஒரு தீர்வை அடைவதற்கும் எம்.பிக்கள் குழு அங்கு செல்வது பயனுள்ளதாக இருக்கும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## சபையில் முதல்முறையாக பதிலளித்தார் மு.க.அழகிரி

டில்லி, ஓக. 07

மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மு.க.அழகிரி முதல்முறையாக நாடாளுமன்றத்தில் கேள்வியொன்றுக்குப் பதிலளித்தார்.

கேள்வி நேரத்தின்போது பிரதான கேள்வி ஒன்றுக்கு, முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட பதிலை அவர் ஆங்கிலத்தில் வாசித்தார்.

அவர் அமைச்சராக பதவியேற்று ஓராண்டுக்குப் பின்னர் நேற்று முன்தினம்தான் நாடாளுமன்றத்தில் பதிலளித்துள்ளார். பிரதான கேள்வியைத் தொடர்ந்து உறுப்பினர்கள் எழுப்பிய துணைக் கேள்விகளுக்கு இணை அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜேனா பதிலளித்தார்.

அழகிரி அமைச்சராக இருந்தபோதும் நாடாளுமன்ற நிகழ்வுகளில் பங்கேற்பதை தவிர்த்து வந்தார். ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வராது, ஹிந்தி தெரியாது என்ற காரணங்களால் அவை நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவில்லை.

கேள்வி நேரத்தில் கூட அவருக்குப் பதிலாக இணை அமைச்சசர் ஸ்ரீகாந்த் ஜேனாவே பதிலளித்து வந்தார். இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் தமிழில் பதிலளிக்க அனுமதிக்குமாறு மக்களவைத் தலைவர் மீரா குமாரிடம் அழகிரி அனுமதி கோரினார். ஆனால் நாடாளுமன்ற செயலகம் இதற்கு அனுமதி மறுத்து விட்டது.

இந்த நிலையில் அவை நிகழ்வுகளில் கலந்து கொள்வது குறித்து அவைத் தலைவர் மீராகுமாரிடம் ஆலோசனை செய்தார் அழகிரி. எழுத்து மூலம் கேட்கப் படும் பிரதான கேள்விகளுக்கு அமைச்சர் அழகிரி ஏற்கனவே ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட பதிலை அவையில் படிக்குமாறு யோசனை தெரிவிக்கப்பட்டது.

அந்த யோசனையை ஏற்று முதன்முதலாக மக்களவையில் அமைச்சர் அழகிரி நேற்று முன்தினம் வியாழக்கிழமை பேசினார்.

## இந்தியச் செய்திகள்


### எம்.பி. தொகுதி நிதியான ரூ. 2 கோடியில்

## சோனியா, அத்வானி உட்பட 130 பேர் ஒரு ரூபா கூடச் செலவழிக்கவில்லை

டில்லி, ஓக. 07

சோனியா, அத்வானி உட்பட 130 எம்.பிக்கள் கடந்த 14 மாதங்களாக, தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் ஒரு பைசா கூடச் செலவழிக்கவில்லை என்று தெரிய வந்துள்ளது. மத்திய அமைச்சர் அழகிரி அதிக நிதியைச் செலவழித்து முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

ஒவ்வொரு எம்.பிக்கும் தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூபா 2 கோடி ஒதுக்கப்படுகிறது. இதை ரூபா 3 கோடியாக உயர்த்த வேண்டும் என்று சில எம்.பிக்கள் போராடி வரும் வேளையில், நூற்றுக்கும் மேற்பட்ட எம்.பிக்கள் ஒரு ரூபாவைக் கூட இந்த நிதியில் பயன்படுத்தவில்லை.



கடந்த ஆண்டு மே மாதம் மன்மோகன் சிங் அரசு இரண்டாம் முறையாகப் பதவி ஏற்றது. கடந்த ஜூன் மாதத்துடன், 14 மாதங்கள் கடந்த நிலையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி உட்பட 130 எம்.பிக்கள், தொகுதி நிதியில் ஒரு பைசா கூடச் செலவழிக்கவில்லை என நாடாளுமன்ற இணையத்தளத்தைச் சுட்டிக்காட்டி அந்த அரச சார்பற்ற அமைப்பு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, ராஷ்ட்ரீய ஜனதா தள தலைவர் லாலுபிரசாத் யாதவ், ஐக்கிய ஜனதாதள தலைவர் சரத் யாதவ், கர்நாடக முன்னாள் முதல்வர்கள் குமாரசாமி, தரம்சிங் ஆகியோரும் ஒரு ரூபாவைக் கூடப் பயன்படுத்தாதோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அதே சமயத்தில், தி.மு.கவைச் சேர்ந்த இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மு.க.அழகிரி, அதிகமான நிதியை தனது தொகுதி வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவழித்து முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவர் ரூபா ஒரு கோடியே 24 லட்சத்தை தனது தொகுதிக்காகச் செலவிட்டுள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக, சபாநாயகர் மீராகுமார் ரூபா ஒரு கோடியே 19 லட்சமும், சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம்சிங் ரூபா ஒரு கோடியே 9 லட்சமும், மத்திய சட்ட அமைச்சர் வீரப்பமொய்லி ரூபா கோடியும், மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ரூபா 97 லட்சமும் செலவழித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

யாழ்.பல்கலைக்கழகம், சென்றலைட்ஸ் வி.க., பற்றீஸியன் வி.க., கே.சி.சி.சி. வி.க. ஆகியன பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டத்தில் சென்றலைட்ஸ் வி.கவும் கே.சி.சி.சி. வி.கவும் மோதுகின்றன. (ஐ)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 15.04.1939 இறப்பு 08.07.2010

### விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம்

*எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் இருந்து 08.07.2010 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குல விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எங்கள் துயரத்தில் பங்கு கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகைகள் இன்று (07.08.2010) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*50/37, செட்டித்தெரு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (101666) - குடும்பத்தினர்.

## படிவங்கள் விற்பனையாகின்றன

சிறைச்சாலைத் திணைக்கள

1. ஜெயிலர் IIஆம் வகுப்பு
2. நலன்புரி அலுவலர் IIஆம் வகுப்பு
3. சமூக சேவைகள் அமைச்சு முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் பதவிக்கு பட்டதாரிகளை இணைத்தல்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
*பஸ் நிலையம், வேம்படிச் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள P-4 Computers Full Set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு [விலை 14,750/- மட்டுமே]

தொடர்பு :- SKY Computer System,
162, Main Street, Jaffna.
T.P. : 0212221417

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது 1kg 460/=
கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

*விஜயகுமார்,*
*குளப்பிட்டி வீதி,*
*ஆனைக்கோட்டை.*

## A/L பௌதிகவியல், இணைந்த கணிதம்

பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களை சிறப்பாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத் தாள் உட்பட) தனிப்பட்ட முறையிலும், சிறு குழுக்களாகவும் பௌதிகவியல், இணைந்த கணிதம் கற்பிக்கப்படும். மீட்டல் பயிற்சியும் உண்டு. பௌதிகவியல் பகுதி I இற்கான ஏராளமான பயிற்சி விடைக்குறிப்புகளுடன் செய்து முடிக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன (தமிழ், ஆங்கிலம்)

T.P. : 0776648751

ஆசிரியர் :- R. பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey.),Dip.in.Ed.
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
[கடையிற் சுவாமியார் வீதிக்கு முன்னால் உள்ள ஒழுங்கை]

## கண்ணீர்க் காணிக்கை



அமரர் **கிறிஸ்ரி தம்பிப்பிள்ளை**

*எமது ஸ்தாபனத்தின் நீண்டகால முகாமையாளராகவும்*
*நம் ஊழியர் குழாத்தின் வழிகாட்டியாகவும்*
*தோளுடன் தோள் கொடுத்த நண்பனாகவும்*
*அன்புக் கரங் கொடுத்து ஆதரித்த தந்தையாகவும்*
*எங்களை மட்டுமன்றி தன்னோடு பழகியனைவரையும்*
*ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த*

அமரர் **கிறிஸ்ரி தம்பிப்பிள்ளை**

*அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்துக்கு எமது இதய பூர்வமான கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.*

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
வைற்ஹவுஸ் அந்தியகால சேவை
உரிமையாளரும் ஊழியர்களும். (101664)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகராசா கமலாம்பிகை



யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கமலாம்பிகை நேற்று (06.08.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
T.P. : 0777110525

தகவல்:
பிள்ளைகள்,
என். எழில்மோகன்
(கலா, திருநெல்வேலி). (101653)

### அன்னம்மா இராசேந்திரம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இராசேந்திரம் நேற்று (06.08.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அருமைமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி முத்தையா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசேந்திரத்தின் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இந்திரா மற்றும் தவமலர், நிர்மலா, ஜெயந்தினி, றஞ்சினி, யோகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மலிங்கம் (கிளி), சிறிமனோகரன், சிவப்பிரகாசம், சிவராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌரி, கஜேந்திரன், வாசுகி, கௌதமி, தர்சினி, சுதர்சன், பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்மிகன், பபித்திரா, அனுசியா, சரண்ஞன், வானதி, மதுஷா, சாகித்தியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப. 10 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/1, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212220208
0213210280

தகவல்:
குடும்பத்தினர் (101594)

## வாழ்த்துகளும் கருத்தரங்கும்



கௌரவ அமைச்சர்
K.N.டக்ளஸ் தேவானந்தா



வடமராட்சி அமைப்பாளர்
க.ஸ்ரீரங்கேஸ்வரன்

எமது பகுதி மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி கௌரவ அமைச்சர் அவர்களினாலும் வடமராட்சி அமைப்பாளர் அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்ட எமது கல்வி நிறுவகத்தினால் மகேஸ்வரி நிதிய அனுசரணையுடன் தரம் - 05 மாணவர்களுக்காக நடத்தப்பட்ட ஐந்து திறனாய்வு பரீட்சைகளிலும் வெற்றியீட்டிய மாணவர் விவரம் :-

01) ஜே.மேரிடியூலினி
02) கெ.தர்சிகன்
03) செ.மேரிஅகிஷனா
04) உ.தர்மினி
05) அ.மரியறொச்ானா
06) ம.ஜெஸ்ரின்
07) பா.ஆழிக்குமரன்
08) க.தனுசா
09) இ.எப்சிபா
10) சி.றேகினி
11) உ.சர்மினி
12) ம.மதுஷன்
13) வ.கார்லோஜன்
14) சி.தர்ஷனா
15) த.விதுஷா
16) பி.பிரியந்தன்
17) கி.மேரிஏஞ்சலின்
18) ம.மயூரன்
19) ரூ.தூலிகா

இவர்கள் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துவதுடன் இவர்களுக்கான வங்கிக் கணக்குப் புத்தகங்கள் இன்று (07.08.2010) யா/குடத்தனை அ.த.க. பாடசாலையில், எமது நிறுவகத்தினால் நடத்தப்படும் தரம் - 05 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கருத்தரங்கின்போது வடமராட்சி அமைப்பாளரினால் (E.P.D.P) வழங்கிக் கௌரவிக்கப்படும்.

"எமது பகுதிக்கான கல்வியூடான சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பான புதிய இணையத்தளம் வெகுவிரைவில் எமது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதற்கான ஆக்கபூர்வமான கருத்துக்களை அனைத்து ஆர்வலர்களிடம் இருந்தும் எதிர்பார்க்கிறோம்.

நியூட்டன் அக்கடமி
வடமராட்சி கிழக்கு.
E-mail.: newton accademy@yahoo.com.
Hotline : 0776652640, 0773400509

## அரச பதவி வெற்றிடம்

*சிறைச்சாலைத் திணைக்களத்தின் II ஆம் வகுப்பு ஜெயிலர் / நலன்புரி அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் விற்பனைக்கு உண்டு.*

*A / L பரீட்சையில் மூன்று பாடம் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கிறிஸ்ரி தம்பிப்பிள்ளை

**(வைற் ஹவுஸ் - MANAGER)**



ஊர்காவற்றுறை, கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் 14/2, கோயில் வீதியில் வசித்தவரும் தற்போது 79, சப்பல் வீதியில் வசித்தவருமாகிய கிறிஸ்ரி தம்பிப்பிள்ளை நேற்று (06.08.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - றெஜினா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொலினின் அன்புக் கணவரும் கிறிஷா (லண்டன்), தர்ஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான எட்வேட், பசில் ஆகியோரின் அன்புச் சகோதரனும் டிலோஜன், ரானியா ஆகியோரின் அன்பு மாமனாரும் டேவின் ஜேஷவா, ஜோஆனா டமிக்கா, ஜியோவினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.08.2010) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன்பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

79, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம். (101665)

தகவல்:
ச. பேணாட் (மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சிக்கு எதிரான இடைக்காலத் தடை; ரத்துச் செய்வதா, நீடிப்பதா? 20 ஆம் திகதி தீர்ப்பு

## யாழ். நீதிமன்றத்தில் இருதரப்பும் வாதப்பிரதிவாதங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 07

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவை நீடிப்பதா? அல்லது ரத்துச்செய்வதா? என்பது குறித்து யாழ். மாவட்ட நீதிமன்றம் எதிர்வரும் 20 ஆம் திகதி தீர்ப்பு வழங்கும்.

திருகோணமலை நகர சபைத் தலைவர் கௌரி முகுந்தன், நகரசபை உறுப்பினர் இரத்தினவடிவேலு கண்மணியம்மா, பட்டணமும் சூழலும் பிரதேச சபைத் தலைவர் தங்கவேலாயுதம் காந்தரூபன் ஆகியோர் தாக்கல் செய்த மனு மீது யாழ்.மாவட்ட நீதிமன்றம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

தம்மை பதவிகளில் இருந்து தமிழரசுக் கட்சி நீக்கியமைக்கு எதிராக மூவரும் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த நீதி மன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

இந்த மனு மீதான விசாரணை மீண்டும் நேற்று யாழ். மாவட்ட நீதிபதி அ.பிரேம் சங்கர் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

மனுவில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா ஆகியோருக்கு மேலதிகமாக கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ்.எம். குலநாயகம், பொருளாளர் பொ. கனகசபாபதி ஆகியோரும் சேர்க்கப்பட்டனர்.

எதிராளிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், பிரஸ் தாப மனு முறைப்படி தாக்கல் செய்யப்படவில்லை. சத்தியக்கூற்று முறைப்படி தயாரிக்கப்பட்டு மனுத்தாக்கல் செய்யப்படாததால், இடைக்காலத் தடை உத்தரவை ரத்துச் செய்து வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு வாதங்களை முன்வைத்தார்.

வழங்காளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணியும் தமது வாதங்களையும் முன்வைத்தார்.

மனுதாரரான கௌரி முகுந்தன் தாம் தமிழரசுக்கட்சியில் அங்கத்தவராக இருக்கவில்லை எனத் தனது மனுவில் தெரிவித்திருந்தார். ஆனால் அவர் கட்சி உறுப்பினராவதற்கு 2006 ஆம் ஆண்டு தமது விண்ணப்பப் படிவத்தை வழங்கியி ருந்தார் என்று எம்.ஏ.சுமந்திரன் எடுத்துக் கூறினார்.

இந்த நிலையில் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இடைக்காலத் தடை உத்தரவை வழங்கத் தேவையான ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு எழுத்துமூலமான ஆவணங்களை அடுத்த தவணைக்கு முன் வழங்குவதாக நீதிபதியிடம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இடைக்காலத் தடை உத்தரவை நீடிப்பதா? ரத்துச்செய்வதா? என்பது குறித்து தீர்ப்பை எதிர்வரும் 20 ஆம் திகதி வழங்குவதாகத் தெரிவித்து வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

(ஒ-ஐ-6-319)

# குடாநாட்டில் பல இடங்களில் நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஒக. 7

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில், வீதி அகலமாக்கும் வேலைகளுக்காக உயரழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை மற்றும் தென்மராட்சிப் பிரதேசம் முழுவதும் இந்த மின்தடை அமுலில் இருக்கும்.

மேலும் பொன்னாலை - காரைநகர் வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளுக்காக உயரழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் ஊர்காவற்றுறை, வேலணை, சரவணை, அல்லைப்பிட்டி ஆகிய தீவகப் பிரதேசங்களிலும் மேற்குறிப்பிட்ட நேரத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (ஒ-ஐ)

# வவுனியா விபத்தில் 18 இராணுவத்தினர் காயம்

கொழும்பு, ஒக. 07

இராணுவத்தினர் பயணித்த பஸ் ஒன்று வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் விபத்துக்குள்ளானதில் 18 இராணுவத்தினர் காயமைடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. காயமடைந்தவர்களில் சிலர் முதலுதவியின் பின்னர் முகாம்களுக்குத் திரும்பிவிட்டனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியது. சம்பவத்தில் காயமடைந்த படையினர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸே விபத்துக்குள்ளானது.

வேகமாக வந்த பஸ் எதிரில் வந்த பொலிஸ் தண்ணீர் லொறிக்கு வழிவிட எத்தனித்த போது கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியது என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வரி செலுத்தாது வெளிநாடுகளுக்கு ஓடினால் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்

கொழும்பு, ஒக.07

வரி செலுத்தாதோர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றால் அவர்களின் சொர்த்துகள் அரசுடைமையாக்கப்படும் என்று பிரதி அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வரி தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நாட்டில் வரி செலுத்தாதோர் பலர் உள்ளனர். இதனால், அரசுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. இவர்கள் தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? இவர்களிடமிருந்து அரசு எவ்வாறு வரிடியை அறவிடும் என்று ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் கூறியவை வருமாறு:-

வரி செலுத்தாதோரிடமிருந்து வரியைப் பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வரி செலுத்தாதோர் தொடர்பான தகவல்கள் உரிய முறையில் கிராம மட்டத்திலிருந்தே திரட்டப்படுகின்றன. இந்தப் புது யுகத்திற்கு ஏற்ப அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

வரி செலுத்தாதோரின் சொத்துகள் அரசுடைமையாக்கப்படும். அவர் நாட்டை விட்டு வெளியேறவும் முடியாது - என்றார்.

# முன்னாள் பெண் போராளிகளின் கலை நிகழ்வுகள் கொழும்பில்

கொழும்பு, ஒக. 07

முன்னாள் பெண் போராளிகள் 100 பேரின் கலை நிகழ்ச்சிகளைக் கொழும்பில் நடத்த அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அமைச்சரும் அரசின் பிரதம கொரடாவுமான தினேஷ் குணவர்தன நாடாளுமன்றில் இத்தகவலைக் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதி லளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

''இன ஐக்கியத்தை ஏற்படுத்தக் கலை நிகழ்வுகளை நடத்தப்போகிறது என அரசு கூறுகின்றது. அப்படியாயின், வடக்கில் அவ்வாறான நிகழ்வுகளை நடத்த அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளதா''- என்று ரவி எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு சகல மட்டங்களிலும் மேற்கொண்டு வருகின்றது. அந்த நடவடிக்கைகளுள் ஒன்றாக முன்னாள் பெண் போராளிகள் 100 பேரின் கலை நிகழ்ச்சிகளை கொழும்பில் நடத்த அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்றும் தினேஷ் கூறினார்.

அப்போது குறுக்கிட்ட ரவி கருணாநாயக்க, ''அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப் பணம் இல்லை என்கிறீர்கள். இந்தக் கலை நிகழ்ச்சிக்கு எங்கிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள்'' என்று கேட்டார்.

இந்தக் குழுவுக்குப் பயிற்சி வழங்கவும், இந்த நிகழ்ச்சிக்கு உதவிகளை வழங்கவும் தன்னார்வத் தொண்டர்கள் பலர் முன்வந்துள்ளனர் என்று தினேஷ் பதிலளித்தார்.

# அரசியல் புகலிடம் வழங்கும்போது புலிகள் குறித்து எச்சரிக்கை தேவை

## சர்வதேச நாடுகளுக்கு கோத்தபாய எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக. 07

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் புலிகள் இயக்க உறுப்பினர்கள் வெளிநாடு களுக்குச் செல்ல முயற்சி மேற்கொள்கின்றனர். அரசியல் புகலிடம் கோருவோரை நாட்டுக்குள் அனுமதிக்கும்போது புலிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென இலங்கை அரசு சர்வதேச சமூகத்தை எச்சரித்துள்ளது.

காலியில் நேற்றுக் காலை ஆரம்பமான கடல் பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இந்த மாநாட்டில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது பாதுகாப்புச் செயலர் கூறியவை வருமாறு:-

சர்வதேச ரீதியான ஆள்கடத்தல்களை முறியடிப்பதற்கு சர்வதேச சமூகம் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்கள் அரசியல் புகலிடம் கோரும் போர்வையில் ஏனைய நாடுகளுக்குள் நுழைகின்றனர். அப்படி நுழைந்தால் அவர்கள் அந்நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பர். எனவே இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப் பட்டுள்ளனர். எனினும் சர்வதேச ரீதியில் அவர்களின் வலையமைப்பு சில இடங்களில் இயங்கி வருகிறது.

தாய்லாந்து கடற்பரப்பில் இந்த வருடம் மே மாதம் கண்காணிக்கப்பட்ட எம். வீ. சன் சீ கப்பலில், தமிழீழ விடு தலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உட்படப் பலர் கனடாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

இந்நிலையில் சர்வதேச ரீதியாக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

-,இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


நெல்லியடியில் பற்சிகிக்சை நிலையம்

பல் வைத்திய நிபுணரால் நவீன ரக இயந்திரங்களின் உதவியுடன் ஒவ்வொரு நாளும்

* பல் கட்டுதல்
* பல் பிடுங்குதல்
* கிளிப் போடுதல்
* பல் துப்புரவு செய்தல்
* பல் வேர் நிரப்புதல்
* பல் நிரப்புதல்

என்பன நடைபெறுகின்றன.

கஜமுகன் மெடி கெயர்,
ம.ம.வீதி, நெல்லியடி.

தொ.பே.: 0212264875

(சி-569725)



கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி
இறைச்சிக் கடைகளை ஏலத்தில் விடுதல்

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கீழ் வரும் பொதுச் சந்தைகளில் இறைச்சிக் கடைகள் 16.08.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை தலைமையகத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளன. இந்த பகிரங்க ஏலத்தில் ஈடுபடவிரும்புவோர் தங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சந்தைகளும் வழங்கப்பட உள்ள இறைச்சிக் குத்தகைகளும்

| சந்தைகள் | இறைச்சி வகை |
|---|---|
| ✱ வட்டக்கச்சி | கோழி இறைச்சி |
| ✱ இராமநாதபுரம் | மாட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| ✱ பரந்தன் | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| ✱ முரசுமோட்டை | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| ✱ தர்மபுரம் | ஆட்டிறைச்சி |
| ✱ விசுவமடு | ஆட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| ✱ கல்லாறு | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| ✱ கண்டாவளை | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |

நிபந்தனைகள்:
1. விற்பனை செய்யப்படும் இடம் சித்திபெற்றவராலேயே அமைக்கப்படுதல் வேண்டும்.
2. கேள்விப்பணம் ரூபா 250.00 ஆகும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3. சுகாதார, சுற்றாடல், சமூக, பிரதேசசபை சட்டதிட்டங்களுக்கு ஏற்ப விற்பனை நிலையம் அமைக்கப்பட வேண்டும்.
4. வைப்புப் பணமாக ரூபா 5000.00 செலுத்துதல் வேண்டும் இப்பணம் சேவை முடிந்ததும் மீளளிக்கப்படும்.

பொன்.நித்தியானந்தம்
சிறப்பு ஆணையாளர்

(சி-569712)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மாணவிகள் யாழ். பொலிஸ் நிலையத்தில்!

கொழும்பு, ஓக. 07

காணாமல்போனார்கள் என பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட திருகோணமலை மகளிர் கல்லூரியொன்றில் தரம் 6 இல் கல்வி பயிலும், இரு மாணவிகளும் யாழ் பொலிஸ் நிலையத்தில் உள்ளனர் என திருமலைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலக்குச் சென்ற இவர்கள் வீடு திரும்பவில்லை என திருகோணமலை பொலிஸில் மாணவிகளின் பெற்றோர்கள் நேற்று முறைப்பாடு செய்திருந்தனர். இம்மாணவிகள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று முன்னர் சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

இதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் மூலம் மாணவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். தாம் கடத்தப்பட்டிருக்கவில்லை என்றும், பரீட்சைப் புள்ளி குறைவு காரணமாக வீட்டுக்குச் செல்லாமல் பஸ் மூலம் புறப்பட்டு யாழ். வந்தனர் எனவும் அம்மாணவிகள் யாழ். பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர் என அறிய வருகிறது.

## தக்க தருணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று வருவதோடு, ஊடகங்களுக்குப் பேட்டிகளும் வழங்கி வருகிறார். ஆயிரக் கணக்கான விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

கே.பி. கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா? அவர் குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றவா? அவருக்கு பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பிருப்பது உறுதியாகியுள்ளதா? அவர் தொடர்பில் எத்தகைய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

இப்படி பல கேள்விகள் கவனயீர்ப்புப் பிரேரணையில் அநுர குமார திசாநாயக்க எழுப்பினார்.

இந்த விடயம் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய மிகவும் பாரதூரமான விடயமாகும். கே.பி. பற்றிய விடயங்களை வெளியிடுவதால் அது எதிர்கால விசாரணைகளுக்கு பாதிப்பாக அமையும். நாம் நாட்டின் தேசிய பாதுகாப்புக் குறித்து முக்கியமாகக் கவனம் செலுத்துகிறோம். எனவே எதிர்காலத்தில் கே.பி. பற்றி சபைக்கு அறிவிப்போம்.

- இப்படி அவர் கூறினார். (ஒ-சி)

## மேர்வினுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணந்துறையில் இந்தச் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த தமது உறுப்பினர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர் எனவும், பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் எனவும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

இதேவேளை, கொழும்பு நகரில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தவர்களைப் பொலிஸார் மிரட்டினர் எனவும், சுவரொட்டிகளை அகற்றினர் எனவும் இந் நிலையம் தெரிவிக்கின்றது. (ஒ-சி)

## ஐ.தே.கட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுக அபிவிருத்தி அமைச்சராக இருந்த மங்கள சமரவீர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஐ.ம.சு.முன்னணியிலிருந்து விலகினார்.

அதன் பின்னர் மறைந்த பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியா ராச்சியுடன் இணைந்து ஸ்ரீ.ல.சு.கட்சி மக்கள் பிரிவு என்ற கட்சியை மங்கள சமரவீர ஆரம்பித்தார். ஸ்ரீபதி சூரியாராச்சி காலமானதும் அதன் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மங்கள சமரவீர ஐ.தே.முன்னணிப் பட்டியலில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

கடந்த வாரம் ஸ்ரீ ல.சு.கட்சி மக்கள் பிரிவை கலைத்துவிட்டு நேற்று ஐ.தே. கட்சியில் இணைந்துகொண்டார். (ஒ-சி)

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் மீண்டும் நீதிமன்றத்தில் இவர் ஆஜராக வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாக சுமத்தப்பட்டுள்ள தனுன திலகரட்ணவைப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)


**கணக்கீடு A/L 2011**
A.P.பகீரதன் BBA (Fm Spl.)

| பங்குடமை | வங்கிக் கணக்குக் |
|---|---|
| Sat, Sun 7.15-9 am | Mon, Wed 6-7.15 am |
| வருமானச் செலவு க/கு Tue, Thu 3-4 pm | Paper Class Sat, Sun 11-12 am |

அனைத்தும் ஒரே கட்டணத்தில்
மாணவர் நலனே எமது நோக்கம்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்களின் விடுதலை தொடர்பாக யாரும் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஜோர்ஜ் மாஸ்ரர், தயா மாஸ்ரர் ஆகியோருக்குப் பிணை வழங்கும்போது எமக்கு ஏன் பிணை வழங்கக் கூடாது? எமது தரப்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் பிணைக்கான கோரிக்கையை வலியுறுத்தாமல் காலத்தை இழுத்தடிக்கின்றனர்.''- இப்படி சிறைக் கைதிகள் என்னிடம் தெரிவித்தனர்.

யுத்தம் முடிவுற்று 15 மாதங்கள் கடந்து விட்டன. நாட்டில் சமாதானம் நிலவுகின்றது என அரசு பறை சாற்றுகிறது. வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப்பயணிகளும் வருகின்றனர்.

எனவே நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்பது தெரிகிறது. இந்த நிலைமையில் ஏன் இக்கைதிகளுக்கு பிணை வழங்கக்கூடாது?

இவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளுடன் நான் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன். இவர்களின் விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளேன்.

இவர்களுக்குப் பிணை வழங்கக் கோரி சட்டமா அதிபர் மொஹான் பீரிஸைச் சந்தித்தும் கலந்துரையாடவுள்ளேன்.

அதேவேளை, தமிழ்க் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது குறித்து நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் தலைவர்களிடம் பேசி நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும் முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் 'ஜி', 'எச்', 'ஜே' பிரிவுகளைச் சேர்ந்த கைதிகள் பலர் கலந்துகொண்டனர். அவர்களது நாளாந்தப் பாவனைக்குரிய அத்தியாவசியப் பொருள்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வழங்கினார். (ஒ-சி)


**பொருளியல்**
N.B.கஜீதரன்
A/L 2011மாணவர்களுக்கான புதிய பாடத் திட்டத்துக்கான
**MOdel Paper Class**
* வரைபடங்கள் * சமன்பாடுகள்
* பயிற்சிகள் * கணக்குகள்
Sat, Sun: 1-2 pm
ஆரம்பம்: 08.07.2010 (Sat: 1pm)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

**NEW SCIENCE CENTRE**
யாழ்.நகர்
ORGANIC CHEMISTRY
Sat, Sun 11.45-12.45
ஆரம்பம்-08.08.2010 ஞாயிறு 11.45
துரிதமீட்டல் வினாவிடை
Tue 5-6 &Thu 4.30-5.30
By: அன்பு


## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அச்சுறுத்தப்படுவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சில தமிழர் அமைப்புகளும் இந்த நிதி சேகரிப்புக்காக உதவி வந்துள்ளன என்று அறிக்கை கூறுகிறது.

கடந்த மே மாதம் 18ஆம் திகதி யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தபோதும், இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கைகளின்போது இரு தரப்பிலும் பாரியளவிலான சேதங்கள் ஏற்பட்டதாகக் குறித்த அமெரிக்க இராஜாங்க திணைக்கள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உண்மையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சும் இலங்கை ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள குழு தமது விசாரணையை முழுமையாக நிறைவுசெய்ய முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

சர்வதேச தொடர்புகளுக்கான கதிர்காமர் கற்கை நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பு கொழும்பில் நடைபெறவுள்ள முதலாவது சந்திப்பாக அமையவுள்ளது.

அத்துடன் வவுனியா மாவட்டத்திலும் அவர்கள் இரண்டு சந்திப்புகளைமேற்கொள்வர்.

ஏற்கனவே இந்தக் குழு வட மாகாணத்தில் மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்களையும், மற்றும் அதிகாரிகளையும் சந்தித்து பேசியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் குறித்த ஆணைக் குழு பின்வரும் விடயங் கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தவுள்ளது என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


**கணக்கீடு A/L 2012**
A.P. பகீரதன் B.B.A. (FM Spl)

| தனி வியாபார முடிவுக் கணக்கு Tue., Thu. 6.15 - 7.15 am | தொங்கல் க/கு Sat., Sun. 5-6 pm |
|---|---|
| Paper Class Thu, Fri 5 - 6 pm | IBS சுண்டுக்குளி யாழ்ப்பாணம் |

அனைத்தும் ஒரே கட்டணத்தில்
A சித்தி பெற்றிட இன்றே இணையுங்கள்

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைக்கான விசேட பயிற்சி நெறிகள்
ஆரம்பம் 09, 14.08.2010
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
ICT, GIT
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
KIDS PROGRAMMING
Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna. T.P: 021 2225170

**இறைச்சிக் கோழி விற்பனை**
நிறை கூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன மலிவான விலையில் சுத்தம்செய்து தினமும் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாக விற்பனை செய்யப்படும்.
தொடர்பு: மல்ரிபாம் சென்ரர் 61, இராமநாதன் வீதி, கலட்டி. தொ.பே: 0217912783

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு
2010 - தரம் : 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான
**மாபெரும் இறுதிக் கருத்தரங்கு**
காலம்: 08.08.2010(ஞாயிறு)
இடம் : பண்ணாகம் அம்பாள் கலைமன்ற கலாசார மண்டபம்
காலை: 09.00மணி முதல் மாலை: 03.00 மணிவரை
எதிர்பார்க்கப்படும் வினாக்கள், மாதிரிக்கட்டுரைகள், கையேடு
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன் விசேட விரிவுரையாளர்களும் கருத்தரங்கில் உங்களோடு.
நீங்கள் செலுத்தும் கட்டணம்: ரூபா200.00
கோப்பாய் ஆசிரிய கலாசாலை வெற்றித்தேர்வு செயமர்வில் கலந்துகொள்ளாதோருக்கு அரிய சந்தர்ப்பம்.
தனியாகவும் மாணவர்கள் கலந்துகொள்ளலாம்
தொடர்புகளுக்கு: 0777157779/0775001720/ 0775388471 0718474320/ 0779570203/0773126807

உ

ஊரெழு கிழக்கு
பர்வதவர்த்தனி என வழங்கும்
**மனோன்மணி அம்பாள் ஆலயத்தில்**
**கைலாய வாகன வெள்ளோட்ட விழா**
**வெள்ளோட்ட நிகழ்வில்**
யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியரும் உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதியுமான திரு. ச.சத்தியசீலன் அவர்களும் துர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபைத்தலைவரும், யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபருமான செஞ்சொற் செல்வர் திரு.ஆறு திருமுருகன் அவர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.
நிகழ்வில் கைலாசவாகனத்தை வடிவமைத்த ஆறுமுகம் சிற்பாலய திரு.ஜீ.ஜெயப்பிரகாஷ் குழுவினரும், வாகனத்தரிப்பிட, கட்டட அமைப்பாளர்களும் கௌரவிக்கப்படுவார்கள்.
அம்பாள் அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
திருவிழா உபயகாரர்கள்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org